# தொல்காப்பியம்

# அகத்திணையியல் விளக்கம்

இளவழகனார்.

தமிழ்நெறிவிளக்கப் பதிப்பக வெளியீடு-1

# அகத்திணையியல் விளக்கம்

ஓம்

திருநீலகண்டன் இன்பமாலை - 1.

# இன்பவொழுக்கம்

அல்லது

# தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்

திரு. தி. சு. பாலசுந்தரம் பிள்ளையவர்கள்
(இளவழகனார்)
எழுதியது.

தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம்
செவ்வாய்ப்பேட்டை, சேலம்
ஏப்ரல் 1938.

உரிமை பதிவு செய்யப்பட்டது

(ருகவேத தமிழுரை பிழைதிருத்தம் நிழற்படம்
ஆகிய இவை சென்னை ஜூபிடர் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.)

திருநீலகண்டன்

தாகூர் சட்ட விரிவுரையாளர்

## திரு கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்

## எம். ஏ., எம். எல். அட்வகேட்,

அளித்த

# அணிந்துரை.

---

பண்டைத் தமிழர் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றிற்கும் இலக்கணம் முதன் முதல் வகுத்த மக்கட் பிரிவினராவர். எழுத்துக்கும், சொல்லுக்கும் ஏனை மொழியோர் பிற்காலத்தே இலக்கணம் வகுத்துக்கொண்டாராயினும், பொருளுக்குச் செவ்விய இயல்நூல் வகுத்துக் கொள்ளவில்லை. 'பொருள்' என்பது நூலுட் பேசப்படுங் கருத்துகளைக் குறிக்கும். நூல்கள் பலவாகப் பெருகிய பின்பே, நூற் கருத்துக்கு இலக்கணம் வகுத்தல் அமையும்.

ஆசிரியர் அகத்தியனார் இயற்றிய இலக்கணம் மறைந்தொழிந்த பின், தொல்காப்பியரது இயல்நூலே நிலைப்பதாயிற்று. அதன் நூற்பாக்கள் பெரும்பாலனவற்றுள்ளும், ஆசிரியர் தமக்

குமுன் நிலவிய முதனூலையும் பிற பன்னூல்களை யும் பொதுவாகக் குறித்தலின் தொல்காப்பியத் துக்குப் பன்னெடுங்காலம் முன்னரே செந்தமிழ் இலக்கியங்கள் பலப்பல திகழ்ந்தோங்கின என் பது தெளிவு. தொல்காப்பியம் தோன்றிய கா லத்தே சிங்கராசியை முதலாகக் கொண்டு ஆண் டு தொடங்கியிருத்தல் வேண்டுமென்பது, முல் லைத் திணையை முற்கூறி அதற்குரிய கார் காலத் தை ஓதுமிடத்து ஆவணி முதல் திங்கள் ஆவ தால் தெளியப்படும். இற்றைக் காலத்தில் மே டத்திற்குரிய சித்திரைமுதல் ஆண்டு தொடங் கப்படுகின்றது. கதிரவன் சிங்கராசியிலிருந்து மேடராசிக்கு வருவதற்கு வான நூலின்படி ஏறக்குறைய 7000 ஆண்டுகள் செல்லும். கதிர வன் சிங்கராசியைக் கடந்து அடுத்த ராசிக்குச் செல்வதற்குச் சுமார் 2000 ஆண்டுகள் ஆகுமெ னின், குறைந்தது 5000 ஆண்டுகளுக்குமுன் தொல்காப்பியம் தோன்றியிருக்கவேண்டுமென் பது தெளிவு. தொல்காப்பியம் எழுதப்பட்ட காலத்தில் வடமொழியில் உள்ள வேதங்கள்

வருக்கப்படவில்லையென ஆசிரியர் நச்சினார்க்கினியர் பாயிரவுரையிற் கூறியதும் இதனை வற்புறுத்தும். வேதமென்னுஞ் சொல் தொல்காப்பியத்துள் யாண்டுங் காணப்படவில்லை. நாற்குலமும் அவ்வாறே.

அத்தகைய பெருநூல் பண்டைத் தமிழரின் இணையற்ற நாகரிக வாழ்க்கைப்படமாக நிலைபெற்றிருப்பதுடன், இற்றைநாள் தமிழ் மக்கள், தமது பழமைப் பெருஞ் சிறப்பு எய்துவதற்கு இன்றியமையாது கற்றற்குரிய தனிமாண்புடைய முதனூலாகவுந் திகழ்கின்றது.

இந் நூலின் பொருளதிகாரத்தை யாவர்க்கும் எளிதாக விளங்கும் பொழிப்புரையுடனும் செவ்விய கருத்து விளக்கத்துடனும் கண்கவர் வனப்புடைய, கைக்கு அணியாதற்குரிய பத்துச் சிறு புத்தகத் தொகுதியாக வெளியிடுவதற்குப் பொருளுதவி புரிய முன்வந்துள்ளவர் சேலம் செவ்வாய்ப்பேட்டை சைவத்திருவாளர் ஆ. மாணிக்க செட்டியாரவர்களாவர். வணிகத் துறையிற் சிறந்து தமிழன்பே உருவாயிலங்கும்

அவ் வீரர் கூலவாணிகன் சாத்தனரை இறந்தற நாளில் நினைவுறுத்துஞ் சீர் வாய்ந்தவராவர் அவர்கட்குத் தமிழுலகம் என்றும் நன்றி பா ராட்டுங் கடப்பாடுள்ளது.

அன்னார் வேண்டுகோளுக்கிணங்க, செந்த மிழ்க் கல்விப் புலமையும் ஆராய்ச்சித் திறமை யும் அரிதின் வாய்ந்த திருவாளர் இளவழகனர், தொல்காப்பிய அகத்திணையியலுக்கு இயற்றிய நுண்பொருள் விளக்க உரைநடை நூலின் அச் சுப்படிகளைப் படிக்கும் பேறுபெற்றேன். முகற் கண் அவர் மக்கள் யாவரும் பெற விரும்பும் இன்ப வகைகளை விரித்தோதுமுகத்தால், மக்க ளின் பகுத்தறிவு இன்பப் பெருக்கத்துக்கும் விரிவுக்கும் எவ்வாறு துணை செய்கின்றது என் பதை அழகாக வகுத்துக் காட்டியுள்ளார்.

அகத்திணையியல் நூற்பாக்களை ஒரு புது முறையாக அவர் வகுத்திருப்பது அவ் வியலின் தலைமைக் கருத்தைத் தெளிவுறக் காட்டுவதற் குப் பயன்படுகின்றது.

அவற்றிற்குப் பொழிப்புரை தெளிவான உரை நடையில் எழுதப்பெற்றிருக்கின்றது. ஆசிரியர் கருத்து யாவர்க்கும் எளிதில் விளங்கத்தக்க முறையில் அஃது அமைந்துள்ளது.

பொழிப்புரையினும், 'அகத்திணையியலின் கருத்துகள்' என்ற பகுதி மிகவும் செவ்விய முறையில் ஆசிரியர் மனப்பான்மையை அங்கை நெல்லியாக விளக்குந் திறனுடையது. நூற்பாக்களின் தொடர்பையும், தொடர்பின் காரணத்தையும், அகத்திணையியலுட் பொதிந்த கருத்துகள் இன்ப வொழுக்கத்துக்கு எவ்வாறு கருவியாகின்றன என்பதையும், ஒவ்வொரு நூற்பாவின் உட்கிடையையும் இதுவரை யாரும் விளக்காத தெள்ளிய முறையில் எடுத்துக் காட்டும் சிறப்பு அப் பகுதியிற் காணப்படுகின்றது.

'உயர்ந்த இன்ப வாழ்க்கை' என்னும் பகுதியில் இன்பம் என்பதன் இயல்பு விரித்துரைக்குமுகத்தால், அதன் உயர்வு தாழ்வுகள் நன்கு வகுத்தெடுக்கப்படுவதுடன் இறைவனை அறிந்து

அவன்பாற் பெறும் பேரின்பமே தலைப்பாய இன்பம் என்பதை அழகாக உரையாளர் விளக்கியுள்ளார். இன்பவுணர்ச்சி அறிவின்கண்ணே எழற்பாலதென்பதும், மக்கள், படிப்படியாக, அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவாறு பிற இன்ப வகைகளைத் துய்த்துப் பின் உலகிற் சிறந்த காதலின்பத்தை விழுமிய முறையில் நுகர்ந்து இறுதியில் இறைவனது பேரின்பத்தைத் தலைப்படுதல் வாழ்க்கையின் பெருநற்பயன் என்பதும் நயமிக்க செந்தமிழ் மொழிநலம் செறிந்த அழகிய உரை நடையில் விளக்கப்பட்டுள்ளன.

அகத்திணையியலிற் கூறும் முதல், கரு, உரிப்பொருள்கள் இன்ப வொழுக்கத்துக்குத் துணைபுரியும் முறைமையை உள்ளத்திற் பதியும் வண்ணம் காட்டவல்ல காதலர் ஓவியம் ஒன்றினைக் கதைப் படம்போல் அழகுற அமைத்துக் காட்டியிருக்கும் பகுதி இறையனாரகப்பொருளுரைக்கு ஒரு சிறு கண்ணாடிபோல் இலங்குகின்றது. அதுவேயுமன்றி, “பண்மயக்கு மொழிப் பாவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய

பெருமானே" என்றபடி இறையன்பு காதலர் இருவர்மாட்டு மிருப்பின் அஃதெவ்வாறு அவருடைய இன்ப வாழ்க்கையை உயர் நிலையிற் கொண்டு உய்க்கின்றதென்று விளக்கியிருக்கும் பகுதி மிகவும் பாராட்டத்தக்கது.

இறுதியாக அகத்திணை யியலின் ஒவ்வொரு நூற்பாவும் உணர்த்தும் தமிழருடைய நாகரிகம் பற்றிய கருத்துகளை ஒருங்கு தொகுத்த பகுதி ஆராய்ச்சிக்குப் பெருந்துணை செய்யும் முறையில் இனிதமைந்துள்ளது.

இப் பகுதிமாத்திரமன்றி இந்நூலின் முடிவில் தொகுக்கப்பட்டுள்ள சொல்வரிசை, அகத்திணையியலில் உள்ள சொற்களையும் சொற்களின் பகுதிகளனைத்தையும் அவற்றின் பொருட்குறிப்போடு முற்றிலும் அடக்கி யிருவதால், அஃது ஆராய்ச்சியாளரின் சொற்பொருள் தேடும் வேலையை மிக எளிதாக்குகின்றது. இச் சொல் வரிசையிற் காணாத சொல் அவ் வியலினுள்ளும் இல்லையென்றே சொல்லலாம்.

சுருங்கக் கூறின், இனிய எளிய உரை நடையில் ஆசிரியர் தொல்காப்பியனாரின் அகத் திணையியற் கருத்துகளைத் தெரிய விரும்புந் தமிழ் வாணர்க்கும், ஆராய்ச்சியாளர்க்கும், தமிழ் அன்பர்களாகிய அரசாங்க உயர் பதவியினர், பெருஞ்செல்வர், பெருவணிகர், பல்வகைத் தொழிலாளர், ஆங்கிலங் கற்ற மாணவர், அறிவுடை நன்மகளிர் முதலிய எவ்வகையினர்க்கும் இந் நூல் சுவைமிக்க நல்விருந்தாகும் என்க.

ஓம்

# தந்துரை

தமிழ்நூல்களில் மிகப் பழைமையானது தொல்காப்பியமாகும். இப்பொழுது கிடைக்கப் பெறும் தமிழ்நூல்கள்யாவும் இதனின் பிற்பட்டனவென்பது யாவரும் ஒப்புக்கொண்டதோர் உண்மையாகும். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றுக்கும் இலக்கணம் கூறுவதுகொண்டு அதற்கு முன் பலவாறுகப் பெருகிய இலக்கியங்கள் பல இருந்திருக்க வேண்டுமென்று அறிஞர்கள் துணிகின்றனர். ஆயினும், அவைகள் இப்போது கிடைக்கப் பெறவில்லை. ஏனைய மொழிகளிற் சிலவற்றிற்கே எழுத்து, சொல் ஆகிய இரண்டிற்குமட்டும் இலக்கணங்கள் அமைந்துள்ளன. அவற்றுள்ளும் திருத்தமான இலக்கண அமைதியுடையன ஒருசிலவே. இஃதிவ்

வாருக, தமிழ்மொழியிலோ, பொருளுக்கும் இலக்கணம் காணப்படுகிறது. தமிழ்மொழி இலக்கணத்தில் பொருளதிகாரம் ஒரு பகுதியாய் அமைந்தமைதொன்றே மொழிநூல் கற்போரின் கருத்தைத் தன்பால் ஈர்க்க வல்லதாகின்றது. இத்தகைய பொருளதிகாரத்திற்குப் பழைய உரைகள் பல இருப்பினும் அவை எளிய கல்வியறிவுடையவர்களுக்குப் பயன்படுவதில்லை. ஆதலின், எத்தகையவர்க்கும் பயன்படுமாறு பொருளதிகார அகத்திணையியலுக்கு எம் நண்பர் திருவாளர் இளவழகனார் அவர்களைக் கொண்டு எளிய உரை ஒன்று இயற்றுவிக்கப்பட்டது. முற்றிலும் உரை நடையிலியன்ற இவ்வுரை தொல்காப்பியச் சூத்திரங்கட்குப் பொழிப்புரைகருத்துரை ஆகியவற்றை விளக்கமாகத் தருவதாகும். இதன்கண் தமிழ்நாட்டு வரலாற்றுக் குறிப்புகளும், அவ்வியல் முழுவதும் உள்ள சொற்களுக்கு முன்னைய உரையாசிரியர்களின் கருத்துகளும் அவற்றின் விளக்கங்களும், மூலப்

பாடத்துடனும் அமைந்துள்ளது. இது எம் அரும்பெறற் புதல்வன் திருநீலகண்டன் என்பான் எம்மிடையினின்றும் பிரிந்து விண்ணுலகெய்திய செய்தியின் நினைவுக்குறியாக முதன் முதல் வெளிவருவதாகும்.

இனி, நான் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இதற்குத் தெளிவான உரை விளக்கங்களும் ஆராய்ச்சியும் எழுதித் தமது அச்சுக் கூடத்திலேயே பிழையறச் செவ்வையாகப் பதித்துத் தந்த உரையாசிரியர் திருவாளர் இளவழகனர் அவர்கட்கும், இந் நூலுரைத்திரத்தைச் செவ்விதின் விளக்கிய முன்னுரையொன்று அன்புகூர்ந்து எழுதியுதவிய திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L. (தாகூர் சட்ட விரிவுரையாளர்) அவர்கட்கும் எனது நன்றியறிதல் எழுமையும் உரித்தாகும்.

இனி, இம்முயற்சிக்குத் துணையாக நின்று ஊக்கமளித்துவந்த கெழுதகை நண்பர்களான திருவாளர்கள் கொ. அ. அப்பாய் செட்டியாரவர்கட்கும் (செயலாளர், திருஞான சம்பந்த

சுவாமிகள் திருச்சபை, செவ்வாய்ப்பேட்டை), க. நடேச உடையார் அவர்கட்கும் (தமிழாசிரியர், நகரசபை உயர்நிலைப்பள்ளி, சேலம்), P. N. இராமசாமி ஐயர், B. A., B. L. அவர்கட்கும் மறைத்திரு அருட்கோயிலுருவ அடிகளார் அவர்கட்கும் என் அகமருவிய பெருநன்றி என்றும் உரித்தாகும்.

| | | |
|---|---|---|
| 'மணவழகு தமிழகம்'<br>செவ்வாய்ப்பேட்டை<br>சேலம்.<br>வெகுதானியஞூ<br>சித்திரைமீ | } | செவ்வைக் கிழான்,<br>ஆ. மாணிக்கம். |

## பிழை திருத்தம்

ஏற்புரை, முன்னுரை பக்கங்கள் 29 முதல் 38 வரையில் முறையே 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26 என்று திருத்திக்கொள்ளவும்.

# முகவுரை

தமிழ்நூற் பொருள்களில் தலைப்படுமாறு துன்று தலையளி செய்து என்னை ஊக்கப்படுத்தி அதுமுதல் நாள்தோறும் எனக்கானவற்றைக் கனிந்த உள்ளத்தோடும் அமைத்தருளி என்றுந் தவறாமல் பள்ளிக்கு அனுப்பிவந்த என் அருமை அன்னை அழகம்மையார்க்கும், தந்தை ஆறுமுகனார்க்கும், உடன் பிறந்தார்களுக்கும், என்னை அறியாமலேயே தமிழ் நூல்களோடு மிகுதியும் இடுபடும்படி தம் எழுத்தாலும் கருத்தாலும் விருப்பம் மிக ஊட்டிய சென்னை 'நவசக்தி' இதழாசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியா ரவர்களுக்கும், அவர்கள் உணர்த்தா துணர்த்திய வழி சென்று சாம, சார்ந்தோனை அணைத்து ஆர்வமுடையவனாக்கிய பண்பும், பன்னூற் புலமையும, அன்பும் அருளும் சான்ற ஆசிரியப் பெருந்தகையாளராம் மறைத்திருவாளர் மறைமலையடிகளா ரவர்கட்கும், இன்னும் என் அறிவு விரிவதற்கும் ஐப்புலச் சேட்டை ஒடுங்குதற்குமாக நல்லறிவு நூல்கள் பல யாத்

ஐ வெளிப்படுத்தியுதவிய அறிஞரனைவர்க்கும் இந் நூல் ஏற்புடைத்தாமாறு இறைவனைப் பணிகின்றேன்.

தொழும்பனேன்,

ஆ. மாணிக்கம்.

# முன்னுரை

தமிழ் மொழி இருவகை வழக்கிலும் நீண்ட காலமாக வழங்கிவரும் அழகிய மொழி. அதன்கண் எத்தனையோ சிறந்த அறிவு நூல்கள் இருக்கின்றன. இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் முழு நூல்களில் மிகப்பழமையானது தொல்காப்பியம். இந் நூல் வேறு மொழியிலக்கணங்களுக்கு அமையாததொரு தனி முறையில் அழகாக இயற்றப்பட்டிருக்கின்றது. ஆதலால் ஆசிரியர் இதனைத் தமது தனித்த அறிவாற்றலிலிருந்தே தோற்றி உலகுக்கு அருளோடு வழங்கியிருக்கின்றார் என்று தெளிந்துகொள்ளலாம்.

தமிழ் நாடு, தமிழ் மொழி, தமிழ் அரசு, தமிழ்க் கலை, தமிழ் வாழ்க்கை முதலான தமிழர் மாட்சிமைகளை வேற்று நாட்டவர் நன்றாய்த் தெரிந்துகொள்வதற்கு இந் நூல் ஒன்றே முற்ற விளக்குந் தனிக் கருவியாய் அமைந்துள்ளது. ஒன்றேயாயினும் இதன் ஆசிரியர் இதனை நன்றாகச் செய்திருக்கின்றார். எளிய இன்னோசை

யான அரும்பொருள்களை இச்சுவடி இன்னமும் தெய் றப்பட்டிருக்கின்றன. பல அரிய நூல் துறைகள் இக்காலத்திற் கொள்ள கிடைக்கின்றன. இது தமிழ் மக்களின் அரிய பெருஞ் செல்வமா கும். இப் பெருந் தெய்வத் தமிழ்ச் செல்வத்தினை ருந்து யாம் போற்றிக் காத்தல், எக்காலத் திருந் ளம் பிறந்த அறிவுச் செல்வங்களை அவர்கள் அனைவரும் வகையில் வழி வழி வழங்குவோம். வழங்க வழங்க வளரும் நூற்றுப் பொற்புடன் விளங்கும் பொருட்டால் யாண்டும் இத் தெய்வத் தமிழ்க் கருவூலம்.

தமிழ் மொழியிலேயே இத்தகைய சிறந்த அறிவு அனைத்துத் தமிழ் மக்களே செய்யும் வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர். அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று: இவைப் போன்ற பெருமக்கள் நூற்பயனை பெரும் வாய்ப்புப் பெற்றவர்களுக்கு அவற் றை வழிவழிக் கற்றுக் கொடுத்து போற் றும் விளக்கமாய் இருந்த உரையாசிரி யர்கள் எழுதியுள்ள உரைகளும் ஆகும்.

செயல்கள் அத்தனையுந் தமிழ் மக்களுக்குப் பல உருவான நற்பணிகளாய் அமையவேண்டு மென்பது அவர் கருத்து. துவக்கம் முதல் என்னிடம் கனிவும் ஈடுபாடும் உள்ளவர். அவரால் பல நன்மைகள் தமிழ் நாட்டுக்கு உண்டாகு மென்று எதிர்பார்க்கின்றேன்.

அச்சுச் செலவு உட்பட இந் நூல்கள் பத்தும் வெளிவருவதற்கான மொத்தச் செலவுகளும் தாமே ஏற்றுச் செய்வதாக இசைந்து அவரே அன்புடன் முன்வந்து என்னை ஊக்கினார். அதன் பயனாகவே இப்போது இதன் முதல் தொகுதி வெளிவருகின்றது. செயற்கருஞ் செய்கை செய்யும் இப் பேருதவியாளரின், நன்றி கருதிச் சில நாட்களுக்குமுன், அவரரும்பெறற் புதல்வன் திருநீலகண்டன் இம் மண்ணுலக வாழ்வு நீத்து இறைவன் திருவடி நீழல் எய்தியதன் நினைவுக் குறியாகத் 'திருநீல கண்டன் இன்ப மாலை' என்னும் வரிசையில் இந் நூல்கள் வெளியிடப்படுகின்றன. குழந்தை நீலகண்டனது ஆருயிர் எல்லாம் வல்ல இறை

வன் தண்ணருள் ஒளியில் என்றுந் திளைத்திடுவ தாக!

திருவாளர் ஆ. மாணிக்கம் அவர்களும், அவர்கட்கும் எனக்கும் பற்றுய அரிய துணைவர் களாய், இவ்வெளியீடுகளைப் பற்றி நினைக்கத் து வங்கிய காலத்திலிருந்தே அணுக்கமாய் உடனி ருந்து வேண்டும் ஏற்பாடுகள் செய்வித்து அவ் வாற்றுல் மேற்கொள்ளப்பெற்ற இந் நற்செயல் மேன்மேலும் இனிதுசென்று நிறைவேறுமாறு தம் உடல் உரை உள்ளங்களால் உரியனசெய்து உறுதுணை புரிந்து வருகின்ற அருமைத் திருவா ளர்களான திரு. கோ. அ. அப்பாய் செட்டியார், வித்துவான் க. நடேச உடையாரவர்களும், இனி என் அருகிலேயே எஞ்ஞான்றும் உடனி ருந்து இந் நூலின் அச்சுப் பிழைகளை முற்றும் ஒருமுறை பார்த்துக்கொடுத்து என்றும் இது போன்ற நன் முயற்சிகளில் இனிய ஊக்கங் காட்டிவரும் இளஞ்சைவப் புலவர் திரு நா. ப தணிகைராயரவர்களும், இன்னும் அவரவர் குடும்பத்தவர்களுமெல்லாம் இம்மை மறுமைக்

குரிய சிறந்த இன்ப வாழ்வுகட்கு உரியராய் இப் புண்ணியத் தமிழகத்திற் பன்னெடுங்காலம் நிலவியிருந்து எந் நாளுந் தமிழ்க்கு ஆக்கமான நற் பணிகளை இடையருமற் செய்து உயர்ந்த பிறவிப் பெரும் பயன்கள் பெருகப் பெற்றுவருகவென நாளும் நம் பெருமான் திருவருளை வேண்டிவருகின்றேன். சிறந்த தமிழ் மணிகளான இவ் வருஞ் செயலாளர்களின் பேருதவியை நான் ஒருபோதும் மறப்பதற்கில்லை.

இனி, இந்நூலின் அச்சிட்ட படிகளைக் கனிந்த பேரன்புடன் ஒருமுறை முழுதும் பார்த்ததுமல்லாமல், ஓர் இனிய அணிந்துரையுந் தந்து கடைக்கணித்துத் தமது குளிர்ந்த மலர் நோக்கத்தால் அருள் பொழிந்து வாழ்த்திய அருமைப் பெரியார் திரு கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம் எல். அவர்கட்கு நன்றியறிதலோடு கூடிய என் அன்பும் வணக்கமும் என்றும் உரிய.

இங்ஙனமே, அவிநாசிப் புதுநந்தனவனம் அருள்திரு கருணாலய அடிகள் இந்நூல்கள்

வெளிவருதலிற் பெரிதும் மகிழ்ச்சி மேவித் தமது திருவுள்ளம் மலர்ந்து அவ்வப்போதும் அரிய ஊக்கமும் இனிய வாழ்த்தும் ஒருங்கு வழங்கியருளும் பேர் அருள் என் நெஞ்சை விட்டு என்றும் அகலாது. ஆண்டவனன்பும் அடியார்களன்பும் ஒருங்கு கெழுமித் திகழும் இப் பெரியாரவர்களின் திருவடித் தாமரைகட்கும் என் அன்பு வணக்கங்கள் உரியவாகின்றன.

நாயிற் கடையா நாயேனையும் ஒரு பொருளாகக் கொண்டு எங்கோ தோன்றாத் துணையாயிருந்து என்றும் ஆண்டுகொண்டருளும் என் அகம் மருவிய ஆசிரியரடிகள் தண்ணளிக்கும், இறைவன் இன்னருட்கும் ஏழையேன் என்ஞான்றும் அடைக்கலமாயிருந்து அவரருள்வழி நிற்பதல்லாமல், வேறு யாது செய்ய வல்லேன்!

எளிமைக்காகவும் இனிமைக்காகவும் இந்நூலில் ஏதோ கூடியவரையில் முயன்றிருக்கின்றேன். செந்தமிழ் நீடு விளங்குக!

இளவழகன்.

# பொருளடக்கம்

பக்கம்

இன்பமும் மாந்தர் பகுத்துணர்வும் 1

தொல்காப்பியம்—

அகத்திணையியல் நூற்பாக்கள் 34

அகத்திணையியல் உரை 46

அகத்திணையியலின் கருத்துகள் 77

உயர்ந்த இன்ப வாழ்க்கை 139

தொல்காப்பியம்—

அகத்திணையியலால் அறியப்படுகின்ற
தமிழ்நாட்டுக் குறிப்புகளிற் சில 176

அகத்திணையியல் அகராதி 199

# இன்ப வொழுக்கம்

அல்லது

# தொல்காப்பியம்-அகத்திணையியல் விளக்கம்

ஓம்.

# தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்

## க. இன்பமும் மாந்தர் பகுத்துணர்வும்.

'இன்பம்' என்பது, அறிவுப் பொருளின் சேர்க்கையால் உயிர்களின் உள்ளத்தில் நிகழும் ஓர் உணர்வு. பச்சை நீலம் மாணிக்கம் வைரம் முதலிய மணிகளிலிருந்து ஒளி தோன்றுவது போலவும், தாமரை கழுநீர் மகிழ் தாழை முல்லை முதலிய மலர்களிலிருந்து மணம் பெருகுவது போலவும், சந்தனம் பனிநீர் கருப்பூரம் முதலிய பொருள்களிலிருந்து தண்மை ஊறுவது போலவும் உயிர்களின் உள்ளத்திலிருந்து இன்பம் எழுகின்றது. * இன்ப எழுச்சியைப் புல்முதல் மக்கள் வரையில் எல்லா உயிர்களும் விரும்புகின்றன. இன்பத்தை விரும்பாத உயிர்கள் உலகத்

---

* இறைய, 2-ன் உரை, நக்,
சிந்தா, 1-ன் உரை, நச்.

தில் எங்குமே இல்லை. * அப்படி ஏதேனும் இருக்குமானால், அது சிறிதளவும் இல்லாத உயிரற்ற பொருளாகத்தான் இருக்கவேண்டும். உயிருள்ள பொருள்களுக்குத்தான் அறிவு உண்டு; அறிவுள்ள பொருள்களுக்குத்தான் இன்பத்தின் மேல் விருப்பம் உண்டு. இன்பம் அந்த அந்த உயிர்களின் அறிவு நிலை உணர்வு நிலைகளுக்கு ஏற்றவாறு மாட்சிமையுள்ளதாகவும் மாட்சிமையில்லதாகவும் நிகழ்கின்றது.

இவ்வுலகத்தில் ஊனுடம்பெடுத்த எல்லாப் பிறவிகளிலும் மக்கள் பிறவியே அறிவிலும் உணர்விலும் மேலானதாகக் காணப்படுகின்றது. சிறந்த இன்பவாழ்க்கையை அடைவதற்கு மக்கள் பிறவிக்கே நல்ல வாய்ப்புகள் அமைந்திருக்கின்றன. உலகத்தில் இன்ப வொழுக்கம் என்பதே உயிர்களுக்கு உயிர்வாழ்க்கையாய் நடைபெற்று வருகின்றது. † ஆதலால், சிறந்த

---

* தொல், பொருளியல், 29.

† *Educational Theories* by Oscar Browning; P. 58; 'Theories of John Amos Comenius'

மக்கள் பிறவியில் வந்து பிறக்குந் தவமுடையா ரெல்லாரும் கூடுமானவரையில் தமது உயிர் வாழ்க்கையை இன்பவாழ்க்கையாய் அமைத்து நடத்தும் வழி வகைகளைக் கடைப்பிடித்து அதன்கண் உறுதியாய் ஒழுருதல்வேண்டும். இல்லாவிட்டால் மக்களுக்கும் மற்ற விலங்கு முதலான சிற்றுயிர்களுக்கும் உள்ள வேறுபாடு தான் என்ன இருக்கின்றது?

பாருங்கள்! மக்கள் வாழ்க்கைகளையும் மற்றச் சிற்றுயிர்களின் வாழ்க்கைகளையும் அமைந்த அறிவோடு சிறிது ஆழ்ந்து நோக்கினால், அவ்விரண்டின் நடைமுறையில் நமக்கு மிகப் பெரியதொரு வேறுபாடு தெளிவாகப் பிரிந்து தோன்றுகின்றது. விலங்குகள் முதலான சிற்றுயிர்களின் வாழ்க்கை பெரும்பாலும் என்றும் ஒரே தன்மையாக நிகழ்ந்துவர, மக்கள் வாழ்க்கைகள்மட்டும் குறைந்தது தலைமுறைதோறுங் கூடப் பலவகையான வேறுபாடுகளுடன் வேறு வேறாக நடைபெற்றுவரக் காண்கின்றோம். சிற்றுயிர்கட்கும் மக்கட்கும் உள்ள இவ்வேறுபாட்

டினை நினைக்க நினைக்க நமக்கு மிகப் பெரிய வியப்பும் ஆராய்ச்சியும் உண்டாகின்றன.

சென்ற சில நூற்றாண்டுகளை எடுத்துக் கொண்டால் அக்காலங்களில் நம் முன்னோர் உணவு தேடிய முறைகளும் இல்லம் அமைத்த முறைகளும் ஆடை அணிகலன்கள் அணிந்த முறைகளும் கல்வி கற்ற முறைகளும் நூல்கள் கையாண்ட முறைகளும் போக்கு வரவு புரிந்த முறைகளும் பிறவுமெல்லாம் இக்கால முறைகளுக்குப் பெரும்பாலும் வேறாக இருக்கக் காணலாம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் தோன்றிய ஆசிரியர் தொல்காப்பியர் காலத்து வாழ்க்கை முறைகளும் மேற்காட்டிய சில நூற்றாண்டுகளுக்குமுன் தோன்றிய பிற்கால வாழ்க்கை முறைகளுக்குப் பெரிதும் வேறாகவே காணப்படுகின்றன. இப்படி காலத்துக்குக் காலம் மக்கள் வாழ்க்கைகள் வேறு வேறு முறைகளாகத் தோன்றி நடைபெற்றுவருதல்போல மற்றச் சிற்றுயிர்களின் வாழ்க்கைகள் அப்படி வேறுபட்டு நடைபெறுதலை எங்கேனும்

வெளிப்படையாகக் காண்கின்றோமா! ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திற் சிற்றுயிர்களின் வாழ்க்கைகள் எவ்வாறிருந்தன என்று அறிகின்றோமோ பெரும்பாலும் அவ்வாறே இப்போதும் இருக்கக் காண்கின்றனமே யல்லாமல் அவற்றிற் புதிய வேறுபாடுகள் ஏதுங் காணக் கூடவில்லை யல்லவா!

ஆதலால், விலங்குகள் முதலான மற்றச் சிற்றுயிர்கள் உண்ணவும் உறங்கவும் உறையவும் இழையவும் பழமைபோல் முயல்கின்றனவே யல்லாமல், அதற்குமேல் அவற்றிலும் அவை ஏதொரு முன்னேற்றமும் நாடுவனவாயில்லை மேலும், அச் சிற்றுயிர்கள் தமக்கு எத்தனைப் பொறியுணர்வுகள் அமைந்திருக்கின்றனவோ அவற்றைக்கொண்டு இவ்வுலகத்தில் இன்பம் அடைகின்றனவேயல்லாமல், அந்தப் பொறி யின்பங்களுக்குமேல் அவை ஒன்றும் அறியா தனவாயிருக்கின்றன. அருள் பொருள் நிலைக ளோ அறிவு ஆராய்ச்சிகளோ ஞான ஒழுக்கங் களோ வணக்க வழிபாடுகளோ அவற்றால் உன்

டாகும் இன்பங்களோ அவற்றிற்கு ஒன்றுந் தெரிவதில்லை*.

பசியெடுத்தபோது உண்டும் களை தோன்றியபோது உறங்கியும், விழைவெழுந்தபோது மருவியும் தம் வாழ்நாட்களை அவை ஒருவாறு கழித்துவருகின்றனவேயல்லாமல், 'இங்ஙனம் அவ்வப்போதும் பசியுங் களையும் விழைவும் விடாது தமக்குத் தோன்றிவருவது என்ன காரணம்பற்றியிருக்கலாம்; தம்மைப்போலவே இன்னும் பலவகையான உயிர்கள் இங்கே இருக்கின்றனவே; அவையெல்லாம் யாவை? அவையுந் தாமும் உயிர் வாழ்ந்துகொண்டிருப்பதற்கு இடமாக அமைந்த இவ்வுலகந்தான் யாது? இவ்வுலகத்தில் எத்தனையோ ஒழுங்கான நிகழ்ச்சிகள் நாடோறும் நிகழ்கின்றனவே; அவற்றில் அணுத்துணையுந், தம்மால் நிகழ்வனவாகத், தோன்றவில்லையே; அவை நிகழ்கின்றன என்று அறிந்துகொள்ளக்கூடத் தமக்கு ஆற்றல் இல்லையே; அப்படியானால் அவற்றை இவ்வளவு அழ

* See Aristotle's *Ethics*.

காக நடைபெறச்செய்யும் பேராற்றல் உள்ளது எது? இவ்வுலகம் இப்படி நடைபெறுவதன் நோக்கம் யாதாயிருக்கலாம்? அந்த நோக்கம் இன்னது என்று தெரிந்து அதற்கு ஏற்றபடி தமது வாழ்க்கையை ஒழுங்குசெய்து கொள்ளுங் கட்டாயத்தில் நாம் இருப்பது எப்போது?' எனவெல்லாம் சிறிதேனும் எண்ணிப் பார்க்கவோ, எண்ணி ஒரு முடிவுக்கு வரவோ அவை மாட்டாதனவாயிருக்கின்றன

சிற்றுயிர்கள் பெரும்பாலுங் கவலையின்றி உயிர் வாழ்வதற்கும் மாந்தர்கள் பெரும்பாலுங் கவலையோடு உயிர் வாழ்வதற்கும் ஏது, இங்ஙனம் அவை பொறியுணர்வோடு மட்டும் உயிர் வாழ்வதும் மாந்தர் அப் பொறி யுணர்வுகளுக்கு மேல் மனவுணர்வு என ஒன்று வாய்ந்து உயிர் வாழ்வதுமேயாகும் அப்படியானல் ஐந்து பொறியுணர்வுகளுக்கும் மேல் ஆருவது மனவுணர்வும் பெற்றுச் சிறப்புடைய பிறவியாய் உயிர் வாழ்வதன் பயன் மாந்தர்க்குக் கவலை என்பதுதானே என்ருல், அங்ஙனமன்று 'கவ

லை' என்னுஞ் சொல்லுக்குப் 'பிரிவு' என்பது பொருள். நாம் நடந்து செல்லும் ஒரு வழியி லிருந்து மற்றொரு வழி பிரிந்து செல்லுமானால் அதனைக் 'கவலை வழி'* என்று சொல்லுவார்கள். அதுபோலவே இங்கே எதனையும் பிரித்துப் பிரித்து ஆராயும் பகுத்துணர்வே 'கவலை' எனப் பட்டது.

பகுத்துணர்ச்சியினால் மாந்தர் எதனையும் ஆழ்ந்து ஆராய்ந்துகொண்டு முயற்சியாயிருப் பார்கள். பகுத்துணர்ச்சியின் முயற்சி இங்ஙனம் நற்செயல்களிற் செல்லுதல் நல்லது. அப் போது அஃது எளிதாகவும் இன்பமாகவும் தமக் கும் பிறர்க்கும் நிலைத்த பயன் தருவதாகவும் நிகழும். அப்படியல்லாமல் மக்களிற் பெரும்பா லார் தமது அறியாமையால் வாழ்க்கையில் நெ டுக இடுக்கண்கள் கிளைக்குமாறு இடஞ் செய்து கொண்டு பின், அந்த இடுக்கண்களைத் தம்மிடம் அணுகாதபடி தடை செய்து கொள்வதற்காகத் தமது பகுத்துணர்ச்சியை ஓய்விலாமற் பயன்

* சிலப், 14: 214; புறம், 3: 23-ன் உரைகள் காண்க

படுத்தி எந்நேரமும் முயற்சியாயிருப்பதும் உண்டு. அப்போது அப் பகுத்துணர்ச்சியின் முயற்சி அவர்கட்கும் அவர்களைச் சார்ந்தவர் கட்கும் முடிவில் முறைப்படி இன்பம் பயக்க வேண்டுவதேயாயினும், அது நிகழுநேரம் துன்பமாகத் தோன்றுதலின், அப் பகுத்துணர்ச்சியை உணர்த்துங் கவலையென்னுஞ் சொல், அத்தகையோரால் துன்பம் என்னுங் கருத்திலும் வழங்கப்படுவதாயிற்று. மற்றப்படி அதற்கு முறையான பொருள் பகுத்துணர்ச்சியென்பதே யாகும் என்று அறிந்துகொள்ளவேண்டும். அங்ஙனங் கொள்ளவே, மாந்தர் கவலையோடு உயிர் வாழ்கின்றார்கள் என்றால் பகுத்துணர்வோடு முயற்சியாய் உயிர் வாழ்கின்றார்கள் என்பதும், மற்றச் சிற்றுயிர்கள் கவலையில்லாமல் உயிர் வாழ்கின்றன என்றால் அவை பகுத்துணர் வின்றி வாளா உயிர் வாழ்கின்றன என்பதுமே கருத்தாதல் தெளிந்துகொள்ளப்படும்.

இதனால் இன்னொன்றும் நாம் எளிதாகத் தெளிந்துகொள்ளலாம். சிற்றுயிர்கள் எதனையுந்

தாமே பகுத்துணர்ந்து பார்த்துத் தம் வாழ்க்கைகளை இன்பமாய் நடத்திக்கொள்ளும் மனவுணர்வு இல்லாமல் இங்ஙனம் இருப்பதனாலேதான், அவை, எல்லாம் வல்ல இறைவனது நேர் கண் காணிப்பில் உயிர்வாழ்ந்து வருகின்றன. மாந்தர் அங்ஙனம் இறைவனது நேர் கண் காணிப்பில் உயிர் வாழ்கின்றிலர். மன வுணர்வென ஒன்று அவர்கட்கு அளிக்கப்பட்டிருத்தலால், அவர்கள் அந்த உணர்வைக் கருவியாகக்கொண்டு தாமே முயன்றுவாழக் கடமைப்பட்டிருக்கின்றனர் இதனை ஓர் எடுத்துக்காட்டில் வைத்து எளிதின் விளக்கலாம்.

ஒருவன் அறிவு முகிழாத இளங் குழந்தையாயிருந்தபோதும் அந்த அறிவு நன்கு முதிராத இளம்பையலாயிருந்தபோதும் தந்தையாயிருப்போன், அவனுக்கு ஊணும் உடையும் உறையுளும் முதலான எல்லாத் தேவைகளும் முழுப் பொறுப்போடு உதவித், தன் நேர் கண் காணிப்பிற் பாதுகாத்து வருகின்றான். ஆனால் தந்தை தன் மகனுக்குத் தக்கபடி கல்வியறிவு கொடுத்து

அவன் அறிவுநிலையை விளக்கிவிட்டபின், இளமைப் பருவமடைந்த அம் மகன், தன் அறிவு நிலைகொண்டு தானே முயன்றுவாழுங் கடமைப் பட்டிருக்கின்றான். அப்போது அவன் முன் போல் தன் தந்தையின் நேர் கண் காணிப்பில் உயிர் வாழ்வதில்லை. இதனை நாம் உலகில் நேரா கக் கண்டுவருகின்றோம். இதுபோலவே உண் ணுதல் உறங்குதல் முதலான எளிய வாழ்க்கை முறைகளை நிகழ்த்தவல்ல பொறியுணர்வுகள்மட் டும் உள்ள ஏழைச் சிற்றுயிர்கள் இறைவன் நேர் கண் காணிப்பில் உயிர் வாழ்தலும், இனி அப் பொறியுணர்வுகளோடு சிறந்த வாழ்க்கை முறை களைத் தன் உரிமையாய் ஆளவும் வல்ல மன வுணர்வும் படைத்த மக்கட் பேருயிர்கள், அங்ங னம் இறைவன் நேர் கண் காணிப்பில் உயிர் வாழாமல் அவன் அருளுதவிகொண்டு தன் உரி மையாய் உயிர் வாழ்தலும் முறைப்படி பொருத் தமாகவே யிருக்கின்றனவல்லவா!

விலங்குகள் முதலான சிற்றுயிர்கள் தம் உணவு உடை முதலியவைகளுக்காக மக்களைப்

போல் பெரிது வருந்தித் தேடவேண்டிய கட்டாயமில்லை. எந்த இடத்திலும் அவற்றிற்கு உணவுகள் இயற்கையாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. வெயிலும் மழையுங் குளிருந் தாங்கும்படி அவற்றிற்கு உரத்த தோலும் அடர்ந்த மயிரும் முதலானவை உடைகளாக இயற்கையே நன்கமைந்திருக்கின்றன. அதிலும் ஐந்நிறக் கிளி, மணிப் புறு, மயில், சேவல் முதலான பறவைகளுக்குப் பல நிறங்களுள்ள மிகக் கவர்ச்சியான இயற்கை உடைகள் அழகாக அமைந்திருக்கக் காண்கின்றோம். பச்சைக் கிளி, வெண் குருகு, காராடு, சேவேறு, செம்மறி முதலான சிற்றுயிர்கள் முழுதுந் தனித்தனி நிறங்களாலான மயிர்ப்போர்வைகளை இயற்கையே பெற்றிருக்கின்றன. சிற்றுயிர்களுக்கு இரா நேரங்களில் தனியாக விளக்குகளுந் தேவையில்லை. பல புழங்கு பொருள்களுந் தேவையில்லை. ஆனால் மக்களோ என்றால், உணவு உடை உறையுள் முதலாக எல்லாந் தமது பகுத்துணர்ச்சியினாலேயே முயன்று தேடிக்கொள்ளவேண்டிய

கட்டாயத்திலிருக்கின்றார்கள். இதனாலேதான் மக்கள் செயற்கை முன்னேற்றங்களில் முன்னேறிக் காலத்துக்குக் காலம் வேறுபாடுகள் தோன்ற வாழ்க்கைகள் செலுத்துதலும், மற்றச் சிற்றுயிர்கள் அங்ஙனமின்றிப் பெரும்பாலும் என்றும் ஒரே வகையான முறையிலேயே வாழ்க்கைகள் செலுத்துதலும் வழக்கமாகக் காணப்படுகின்றன.

அங்ஙனமானால், இப் பகுத்துணர்வும் இல்லாமல் மற்றச் சிற்றுயிர்களைப்போல் மக்களும் இறைவனது நேர் கண்காணிப்பிலேயே வாழ்க்கை செலுத்தினால் அவர்களுக்கு அது நல்லது தானே என்றால், அது நல்லதாகாது. சிறந்தார் உதவிகொண்டு எவருந் தாமே உரிமையுடன் வாழ விரும்புவரேயல்லாமல் தம் உரிமை வாழ்வையிழந்து வெறும் அடிமை வாழ்வில் வாழ எவரும் விரும்பார். பகுத்துணர்வு முயற்சியாகிய உரிமைவாழ்வு பெருமையால் விலங்கு முதலான சிற்றுயிர்களுக்கு இன்பம் மாட்சிமைப்படவில்லை. பகுத்துணர்வுபெறும் நிலையில் அச் சிற்

றுயிர்கள் இல்லாமையால் அவற்றை இறைவன் தன் நேர் கண்காணிப்பில் வைத்து அவற்றின் நலத்துக்காக அங்ஙனம் ஆண்டுவருகின்றனனே யல்லாமல் மற்றப்படி அவ்வுயிர்களின் அடிமை வாழ்வில் அவனுக்கும் அணுத்துணையும் விருப்பம் இராது. தந்தையாவான் தன் மைந்தனை எஞ்ஞான்றுந் தன் நேர் கண் காணிப்பிலேயே வைத்துப் பாதுகாத்துவரச் சிறிதேனும் விரும்புவனோ? ஆதலின், சும்மாயிருந்து குறையின்பம் நுகர்தலைவிட முயற்சியாயிருந்து நிறையின்பம் நுகர்தலையே யாரும் விரும்புவரென்க. நல்ல துறைகளில் அங்ஙனம் முயற்சியாயிருப்பது அறிஞர்களுக்கு இன்பமாகவேயிருக்கும்.

மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து பொறிகளும் அவற்றிற்குமேல் ஆறாவதாகத் திகழும் மனமும் என எல்லா அறிகருவிகளுஞ்செவ்வையாய் அமையப்பெற்று முழு நலத்தோடு ஒருவன் விளங்குகின்றான் என்று வைத்துக்கொள்வோம். அவன் முயற்சியுஞ் சுறுசுறுப்பும் உடைய அழகிய நல்லான்; அறிஞன்; இளை

றான். அத்தகைய மேன்மையாளனை அவன் நினைவுக்கும் விருப்பத்துக்கும் சிறிதும் வேலை யில்லாத முறையில் ஓரிடத்தில் சும்மா இருக்க வைத்து, மற்றப்படி அவனுக்குத் தேவையான உணவு உடை முதலான எல்லா வசதிகளுஞ் செய்து வருவதாக நினைவுகூர்வோம். அவன் அங்ஙனஞ் சும்மா சிறைப்பட்டிருக்க விரும்பு வானோ? சிறிதும் விரும்பமாட்டான். உடனே அச் சிறையிலிருந்து வெளிப்பட்டுத் தனது அறிவைப் பல கலையாகச் செல்லவிட்டுத் தன் விருப்பம்போல் முயற்சியாயிருக்கவே விரும்பு வான் அல்லனோ?

இந்த எளிய எடுத்துக்காட்டிலிருந்து இரண்டு பெறலரும் உண்மைகளை நாம் உருவி யறியப்பெறுகின்றோம். ஒன்று: உணவு உடை முதலான பல வசதிகள் செய்துகொடுத்துங் கூட அவ்வறிஞன் வேறு அலுவல்கள் ஒன்றும் இன்றிச் சும்மா சிறைப்பட்டிருக்க விரும்பாமல் உடனே வெளியே வந்து எவையேனும் முயற்சி கள் செய்யவே விரும்புகின்றான். இதனால் 'இன்

பம் என்பது மக்களுக்கு ஊண் உடை முதலான வசதிகள் பெறுதலிலேயே இல்லை; இன்பம் அவர்கள் அறிவு முயற்சியிலேதான் இருக்கின்றது' என்பது. மற்றொன்று: அவ்வறிவு முயற்சியையும் அவன் தன் விருப்பம்போற் செய்யவே முயல்கின்றானாதலால், இன்பம் அவன் உரிமை வாழ்விலேயே ஊற்றெடுக்கின்றது என்பது *

இதனாலன்றோ இப் பகுத்தறிவு முயற்சியும் அவ்வறிவின் உரிமை வாழ்வும் அமையப்பெறாத ஏழைச் சிற்றுயிர்கள் அருளே ஓர் உருவான இறைவனது நேர் கண் காணிப்பிலேயே இருப்பினுங்கூட, அவைகள் மாட்சிமையான இன்ப நிலைகளை அடைய இடமில்லாமற்போகின்றது. உரிமையோடு கூடிய இப் பகுத்தறிவு மாட்சிமையால் மக்கள் அடைந்துவரும் இன்ப நிலைகளுக்கு ஓர் அளவேயில்லை.

அவர்கள், தமக்கு இல்லமாக அமைத்துக் கொள்ளும் பெரிய பெரிய மாளிகைகளில் உலவுவதற்குக்கூடத் தரை பழுழுப்பாயிருக்கும்படி

* Gitanjali P. 27.

வழுவழுப்பான அழகிய சுவைக் கற்களை பதித்து 'ஊறு' என்னும் இன்பத்தை மாட்சிமைப்படுத்தி நுகர்கின்றனரென்றால், இனி அந்த மாளிகைகளில் இருக்கவும் படுக்கவும் சாய்ந்துகொள்ளவும் உடுக்கவும் அணியவும் புழங்கவுமாகப் பலவேறு நிலைகளிற் பயன்படுத்தும் பலவகையான பண்டங்களை அவர்கள் எவ்வளவு மென்மையாகவும் எவ்வளவு மழமழப்பாகவும் அமைத்து இன்புறுவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

அதுமட்டுமோ! மாந்தர் சுவை வேறுபாடுகள் பல தெரிந்து அவற்றைப் பொருத்தமுற ஒன்றாகக் கூட்டி இனிக்க இனிக்கச் சுவை பெருக்கி உண்கின்றனர். பல வேறு மலர்களிலுள்ள இனிய செந்தேனைத் தேனீக்கள் தெரிந்தெடுத்துக் கூட்டுமாயினும், அதனைச் சுவை கனிந்த பலாச்சுளையோடு ஊறவைத்து அதிலிருந்து சொட்டும் இனித்த நறுஞ்சாற்றை அவை உண்ண வழியுண்டோ? கன்றுகள் ஆவின் மடிகள் பிடித்து அதிலிருந்து ஒழுகுந் தீம்பாலைப்

பருக அறியுமேனும், அத் தீம்பாலிற் சிறந்த கற்கண்டின் பொடிகள் கலந்து அதன் இனிப்பைப் பெருக்கியோ அல்லது அதனை வற்றக் காய்ச்சித் தயிரும் மோரும் வெண்ணெயும் நெய்யுமெனச் சுவை வேறுபடுத்தியோ உண்ண அறியா வன்றே!

பிற்காலச் சான்றோரான அருள் மணங் கமழும் வடலூர் வள்ளலார்,

தனித்தனிமுக் கனிபிழிந்து
வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின்
பொடியுமிகக் கலந்தே

தனித்தநறுந் தேன்பெய்து
பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொரு
தீம்பருப்பு இடியும்விரவி

இனித்தநறு நெய்அளைந்தே
இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டி"

என்று ஓர் அருட் பாடல் திருவாய்மலர்ந்தருளு கின்றார். இதன்கண், சுவை என்னும் இன்பத் தை மாந்தர் மேன்மேற் பெருக்கி இன்புறும் பகுத்துணர்வு முனைப்பு எவ்வளவு நன்றாக விளங் கித் தெரிகின்றது!

இங்ஙனமே மக்கள் தாம் நுகர்ந்துணரும் இன்பங்களையும் பலவகையாக மாட்சிமைப் படுத்தி இன்புறுகின்றனர். அவர்கள், தாம் வாழும் இல்லங்களில் அகில் சந்தனம் முதலான நறுமணப் பண்டங்கள் புகைத்து எங்குந் தூய் மையாக வைத்துக்கொள்ளுதலோடு நல்ல மணங் கமழுமாறும் வைத்து இன்புறுகின்றனர். சிற்று யிர்களிற் சில இனிய தெளிநீரிற் கூட நீராடி மகி ழுமேனும், மாந்தரைப்போல் அந்நீரில் நன்னாரி இலாமிச்சம் முதலான குளிர்ந்த நன் மணப் பொருள்கள் பெய்து நறுமணங் கூட்டி நீராடுத லும் அவற்றிற்குக் கூடுமோ? மகளிர் நீராடுங் கால், கருங்காலி நாவல் முதலிய பத்து வகை யான துவரும், சந்தனம் அகில் முதலிய ஐந்து வகையான விரையுங், இலவங்கம் ஏலம் முதலிய

முப்பத்திரண்டு வகையான ஓமாலிகையுமாகப் பல நறும் பொருள்களை நீரில் ஊறவைத்துத் தமது கூந்தலை அதனால் நீராட்டுவரென்னுந் தமிழ்நூற் குறிப்பு* மாந்தரின் பகுத்துணர்வு நலனை எவ்வளவு சிறப்பாகக் காட்டுகின்றது!

இன்னும், கட்புலன் இன்பங்களை மாந்தர் பெருக்கி இன்புறும் வகைகளுக்கோ கணக்கில்லை. நல்ல வேலைப்பாடுகள் அமைந்த அழகிய பூத்தொழில்களாலான சிறந்த கட்டிடங்களெல்லாம் அவர்கள் மாட்சிமையாய் அமைக்கின்றனர். அக் கட்டிடங்களுள் வைக்குங் காட்சிப் பொருள்கள் புழங்கு பொருள்களின் நேர்த்தியும் ஓவியங்கள் செதுக்குருவங்களின் அருமைகளும் பிறவுமெல்லாங் கண்களைப் பறிக்கும்படி அவ்வளவு அழகாக விளங்குகின்றன! நகரங்களின் நடுவிலும், மாளிகைகளைச் சுற்றிலும் மாந்தர் அமைக்கும் பூங்காக்கள்†, அவர்கள், தமது கட்புலன்கொண்டு நுகர்ந்துவரும் இன்ப மாட்சிமைகளை எவ்வளவு நன்றாக எடுத்துக் காட்டு

*சிந், 623. †Park.

கின்றன. பாருங்கள்! அவற்றில், தாமரை கழுநீர் ஆம்பல் முதலிய நீர்ப்பூங்கொடிகள் மணம்வீசி மலரும் மலர் பூத்த மணிச்சுனைகள் ஒரு பால்; பன்னிறமுள்ள சின்னஞ் சிறுமீன்கள் மின்னி உகளுகின்ற இனிய இலஞ்சிநீர் ஒருபால்; அழகிய மாணிக்கச் செய்குன்றுகள் ஒருபால்; இவற்றின் அருகில் மாதவி மல்லிகை முல்லை முதலிய மலர்க்கொடிகள் பின்னிப் படர்ந்து பலவேறு வடிவுகளில் நலமாய விளங்குங் கொடிப் பந்தர்கள் ஒருபால்; கற்கள் இழைத்த பன்னிற இருக்கைகள் ஒருபால்; கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ என்னும் நால்வகை மலர்களில் ஏனைய பலவும் அமைந்த அழகுசால் வரிசைகள் ஒருபால்; மயில் கிளி புறவு மான் முதலிய அழகிய சிற்றுயிர்கள் ஆடியுங் கூடியும் ஓடியுங் காட்டுங் காட்சிகள் ஒருபால்; மாந்தர் என்ன கவர்ச்சியான பூங்காக்கள் அமைக்கின்றனர்*! சில சிற்றுயிர்கள் அழகிய பல நிற மலர்களும் பல நிற இலைகளுமெனப் பல பொருள்

* இறைய நூ-2ன் உரை.

களைக் காணுமேனும் அவற்றை ஒன்றுசேர்த்து மாந்தர் அமைப்பதுபோற் சிறந்த பூங்காக்களும் பிறவும் அமைத்துத் தம் கட்புலன் இன்பங்களை ஓரிடத்தில் ஒருங்கு நுகரக் கூடுமோ? இதுமட்டுமா; உலகத்திற் காட்சிக்கினிய அழகிய அமைப்புகள் எங்கெங்கே என்னென்ன இருக்கின்றனவோ அவையெல்லாம் ஒருங்கே காணுமாறு ஒளித்திரையில் வருவித்துக்கொண்டு அதனெதிரில் இன்பமாய் அமர்ந்திருந்து பார்க்கும் மாந்தரின் பகுத்துணர்வு மாட்சிமை எவ்வளவு வியத்தற்குரியதாயிருக்கின்றது! இங்ஙனமெல்லாம் சிற்றுயிர்கள் தம் காட்சியின்பங்களை மாட்சிமைப்படுத்திக்கொள்ள மாட்டாத நிலைமையிலன்றே இருக்கின்றன!

இனிச், செவிப் புலன் என்பது சில சிற்றுயிர்களுக்கே அமைந்திருக்கின்றது. அச் சிலவும் மாந்தரைப்போற் கேள்வியின்பங்களைப் பெருக்கி இன்புறுவன அல்ல. சிற்றுயிர்கள், சில இன்னோசைகளைக் கேட்டுத் தம் வயம் இழந்து நிற்குமாயினும், மாந்தரைப்போல் அவ்வோசை

களைப் பலவாறும் சிறப்பித்துக்கொள்ள அறிய மாட்டா. குயில் வண்டு முதலிய சில சிற்றுயிர் கள் இசைப்பது கேட்க இன்னோசையாய் இன் பந்தருமாயினும், அதனை, எற்ற குரல்மீட்டி இனிய இசையுருக்கள் விரவிவர ஏற்ற இறக்கங் களுடன் பாடிச் சுவை குறிப்பு நயம் முதலிய பல நலங்கள் விளக்கி இன்புற அறியாவன்றே! அன்றியும், தங் குரல்போலவே இன்னிசைகள் இசைக்குங் குழல் யாழ் முழவு முதலிய எத்த னையோ வகையான இசைக் கருவிகளை அமைக் கவும், அவற்றைக் குழல்வழி யாழும் யாழ்வழி முழவுமென இணைந்தமையப்* பண் அமைத்துப் பாடி மகிழவும் அச் சிற்றுயிர்களுக்கு வாயில் இல்லையே!

இன்னும், மாந்தர்க்கு அமைந்த ஒரு பெ ருஞ் சிறப்பு மொழி நலம் பெற்றிருத்தலாகும். மாந்தர் வழங்கும் மொழி சொற்பொருள் நலங் கள் உள்ளது. அவர்கள் பாடும் பாட்டுகள் வெ றும் இசைமீட்டலாக மட்டுமன்றிச் சிறந்த கருத்

*சிலப், அரங், 139-40.

தாகளும் அணிகளும் அமைந்த அழகிய செய்யுள் களோடுங் கூடியவை. அதனால் அவற்றை இசையுடன் குழைத்துப் பாடிக் கேட்கக் கேட்கப் பேரின்பமாயிருக்கின்றது.

சொற்பொருளோடு கூடாத தனித்த இன்னிசையே எத்தகையோரையும் உருக்கிவிடும். அன்றி இன்னிசையோடு கூடாத தனித்த சொற் பொருள் திறமும், அதிலுந் தமிழ் மொழித் திறங்கள் மாந்தரை அப்படியே உருக்கிவிடும். அங்ஙனமானால் இவ் விரண்டும் ஒன்றுசேர்ந்து இணைந்து சுவை கனியுமாறு இசை பாடுவதானால், அதனைக் கேட்டு மகிழும் மாந்தரது கேள்வியின்பம் எவ்வளவு மாட்சிமையுள்ளதாயிருக்கும்! எவ்வளவு உருக்கும்! எவ்வளவு வயப்படுத்தும்! இசை நலமும் மொழிவளமும் இங்ஙனங் கேட்பார்க்குப் பேரின்பந் தந்து, அதனால் மாந்தர் அவற்றின் வயமாகி உடம்பும் உருகநேரும் என்னும் உண்மை,*

---

* J. A Chapman, *Religious Lyrics of Bengal*, P. 85.

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்தும் என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோ, அன்றி
ஏழ்இசைச் சூழல்புக்கோ,
இறைவா, தடவரைத்தோட்கு என்கொ
லாம்புகுந்து எய்தியதே"

என்னும் திருக்கோவையார்த் திருப்பாட்டில் நம் மாணிக்கவாசகப் பெருமானால் நன்கெடுத்துக் காட்டப்படுகின்றது.

அதற்கேற்ப அப்பெருமானே, நல்ல இன்னிசையுடன் உயர்ந்த சொற்பொருளும் அமைத்துத் தமது அழகிய திருவாசகத்தில்,

"கீதம் இனிய குயிலே!
கேட்டியேல், எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில்
பாதாளம் ஏழினுக்கு அப்பால்;
சோதி மணிமுடி சொல்லின்
சொல்லிறந்து நின்ற தொன்மை;

ஆதி குணம்ஒன் றும் இல்லான்;
அந்தம் இலான் வரக் கூவாய்.

"நீல உருவின் குயிலே!
நீள்மணி மாடம் நிலாவும்
கோல அழகின் திகழும்
கொடிமங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய
திருவுத்தர கோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த
நாயகனை வரக் கூவாய்

"இன்பந் தருவன் குயிலே!
ஏழ் உலகும் முழுதாளி
அன்பன் அமுதளித் தூறும்
ஆநந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவடு ஒத்த
நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே!
கோகழி நாதனைக் கூவாய்".

என்று மன்பதைகள் உய்யுமாறு கல்லும் உருகக் குழைந்து பாடித் தந்தருளிய தீந்தமிழ்ப்

பாட்டுகள் நமது கேள்வி யின்பத்துக்கு எவ்வளவு சுவை விஞ்சியதாயிருக்கின்றது!

இனி, இன்னிசை தழுவிய இச் செந்தமிழ்ப் பாட்டுகளை இனிய யாழிலுந் தீங் குழலிலும் இட்டு முழவு முதலிய ஏனை இசைக் கருவிகளும் பொருந்திக் குரல் இணைந்து உருக்கத்தோடு மாறி மாறிப் பாடி ஓர் அழகிய பசுஞ்சோலை மருங்கு இசையரங்கு நடத்தினால் ஆ, அதனால் உண்டாகும் உயர்ந்த செவியின்பத்துக்கும் ஓர் எல்லையுண்டோ!

இதுமட்டுமோ இத்தகைய சிறந்த இன்னிசைப் பாட்டுகளை மாந்தர் தமது பகுத்துணர்வு மாட்சிமையால் எக் காலத்துக்குரு் எங்கும் ஒருங்கு பயன்படுமாறு இசைத் தட்டுகளில் எழுதியும் ஒலிக் கருவிகளில் இசைத்துங் கேட்கும் வியத்தகுபேறுகளெல்லாம் இஞ்ஞான்று பெற்று இன்புறுகின்றார்கள். சிற்றுயிர்கள் இங்ஙனமெல்லாந் தம் செவியின்பங்களை மாட்சிமைப்படுத்தி மகிழும் வழிவகைகள் அறியுமோ? அறியாவன்றே!

என இங்ஙனம் விலங்குகள் முதலான சிற்றுயிர்கள் தமக்குக் கிடைத்த சிலச் சில பொறிகள் வழியாகவும் இன்பங்களை மாட்சிமைப்படுத்து நுகர அறியாவாக மாந்தர்கள் மட்டும் அவ்வின்பங்களை மேற்காட்டியவாறெல்லாம் பலவகையாலும் பெருக்கி இன்புறுதலோடு இவ்வைம் பொறியின்பங்களுக்கும் வேறாக ஞான வொழுக்க இன்பங்களும் மாட்சிமைப்படுத்து நுகர்கின்றனர். பொறிகளின் வழியாகச் செல்லும் உணர்வுகளைத் தக்க நேரங்களிலன்றி மற்ற நேரங்களிலெல்லாம் வீணே செல்லவிடாமல், உள்ளே ஒருமைப்படுத்தி, உள்ளுள்ள மனவுணர்வு கருவியாகப் பலவும் ஆராய்ந்து இன்புறுதற்கும், பின் அமைந்து இன்புறுதற்கும், மக்கள் உரியவர்களாயிருக்கின்றனர். இவ்வளவும் அவர்கள் தம் பகுத்துணர்வு மாட்சிமையினாலன்றோ பெருக அடையலாயினர்!

மக்கள் பொறிவழியாகத் தமது உணர்வைச்செல்லவிட்டாலுங்கூட அப்பொறியுணர்வுகளைப்பற்றிய உண்முக எண்ணங்களும் ஆராய்ச்

சிகளுமே அவர்களுக்குப் பெரும்பான்மையும் நிகழ்கின்றது. மற்றச் சிற்றுயிர்களுக்கோ, பொறிவழியாகச்செல்லும் வெளிமுக உணர்வுகளே பெரும்பான்மையாய் நிகழ்வதல்லது, அவற்றைப்பற்றிய உண்முக ஆராய்ச்சிகள் அங்ஙனம் நிகழ்வதில்லை. அவற்றிற்குப் பகுத்துணர்வு இல்லாமையே இதற்கு ஏது. இதனாலேயே தமக்குக் கிடைத்த சிலச்சில பொறிகளின் வழியாக நுகர்நேரும் இன்பங்களும் அவைகளுக்கு மாட்சிமைப்படவில்லை. ஆகலால், பகுத்துணர்வு படைத்த உயர்ந்த மக்கட்பிறவியினரே உலகில் உயர்ந்த இன்பவொழுக்கம் நடத்தும் வாயிலுள்ளவராயிருக்கின்றாரென்று தெளிந்துகொள்ளவேண்டும். ஆகவே, மாந்தர் தமக்கு அரிதாகக் கிடைத்த மனம் என்னும் ஆறுவது பகுத்துணர்வு கருவியைத் தக்கவாறு மேலும் பயன்படுத்தி இவ்வுலகத்தில் இன்பவொழுக்கம் இனிது நடத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்க.

இவையெல்லாம் ஒக்கும்; விலங்கு முதலான சிற்றறிவு உயிர்களில், குரங்கு நாய் குருவி

சிலந்தி முதலான பல உயிர்கள் மாந்தரைப்போலவே எத்தனையோ வகையான நுண்செயல்கள் அறிவோடு செய்பக்காண்டலால், அச் சிற்றுயிர்களுக்குஆறுவது கருவியான மனவுணர்வு இல்லையென்றார், அது மாந்தர்க்கே உரியதாகும் என்றார் நீவிர் வரம்புசெய்து உரைத்தது எவ்வாறு பொருந்தும் எனில், அதனை யாமே உரைத்திலர்; இவ் வுலகத்தின்கண் அறிவு செல்லுந் துறைகளெல்லாம் ஓர் வரையறைசெய்து முற்றறிவோடு செந்தமிழ்க்கு இலக்கணம் வகுத்த தெய்வப்பெரியாரான ஆசிரியர் தொல்காப்பியனாரே இங்ஙனம் உரைத்தார். இவ்வுண்மை,

> "ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
> இரண்டறி வதுவே அதனொடு நாவே
> மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
> நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
> ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
> ஆறறி வதுவே அவற்றொடு மனனே"*

---

*தொல், மரபு, 27-32.

"மக்கள் தாமே ஆறறி வுயிரே"*

என்று அவர் கூறும் நூற்பாக்களால் இனிது வெளியப்படுகின்றது.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார்தாம் இயற்கைக்கு மாறாக ஈங்ஙனங் கூறுவாரெனின், முற்றறிவு வாய்ந்த தெய்வ முதலாசிரியரான அவர் இயற்கைக்கு மாறாக யாதுங் கூறுவரோ? கூறார். மக்கட்குஞ் சிற்றுயிர்கட்கும் உள்ள இம் முதன்மையான வேறுபாட்டினை ஆசிரியர் மரபியலில் வைத்து விளக்குதலால், அவ் வியலின் விளக்க நூலில் அதனை விரிவாக விளக்க இடமிருக்கின்றது. ஆதலின் அதனை அங்கே கண்டு கொள்ளவேண்டும்.

இனி, இங்ஙனமெல்லாஞ் சிற்றுயிர்களுக்கு மேலாக மாந்தர் தமது பகுத்துணர்வால் நுகரும் மாட்சிமையான இன்பத்திலும் பல நிலைகள் உண்டு. அவற்றையெல்லாம் பாகுபடுத்தி அவற்றில் உயர்ந்ததாயுள்ள இன்ப நிலையை நன்கு விளக்கி, அதனை மக்களெல்லாரும்

*தொல், மரபு, 33.

அறிந்து அடைந்து இன்புறவேண்டும் என்னும் பேர் இரக்கத்தால் ஆசிரியர் தொல்காப்பியர் 'பொருளதிகாரம்' அருளிச்செய்திருக்கின்றார். அங்ஙனம் அருளிச் செய்தவர், அதன் முதற் பகுதியை 'அகத்திணையியல்' என்று வகுத்து நிறுத்தியிருக்கின்றார். 'இன்ப வொழுக்கத்தைப் பற்றிக் கூறும் இலக்கணம்' என்பது அதன் பொருள். அதன்கண், அவ் வின்ப வொழுக்கத்துக்குத் தேவையாயுள்ள முதன்மையான கருவி யறிவுகளெல்லாம் ஒருங்கே தொகுத்து அறிவுறுத்தியிருக்கின்றார்.* அவற்றைக்கொண்டு உலகத்தில் உயர்ந்த இன்ப நிலை இன்னதென்பதும், அதனை அடைதற்குரிய ஏதுக்களும் அதனை முதிரச்செய்யும் முறைகளும் இன்ன என்பதும் நன்கு தெரிந்துகொள்ளலாம். ஆதலால், அம் முதற் பகுதியில் அவர் அருளிச்செய்யும் அரிய நுண்முறைகள்வழியே சென்று அவ் வின்ப வாழ்வு எய்தும் முறைகளும் பிறவும் ஆராய்வோம்.

---

*தொல், அகத், 1-ன் உரை நச்.

அதற்கு, அகத்திணையியலில் அவர் வகுக்குந் நூற்பாக்களுள், உரைக்குங் கருத்துக்களு மெல்லாம் அவர் உரைக்குமாறே பொருத்தி, முதலில் உரைநடைப்படுத்திக்கொள்ளுதல் நல்லது.

---

## 2. தொல்காப்பியம்-அகத்திணையியல் நூற்பாக்கள்.

### இன்பவொழுக்கத்தின் வகைகள்.

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப. 1

### உயர்ந்த இன்பவொழுக்கம் இன்னதென்பதும், அதனை அடைதற்குரிய ஏதுக்களும்.

அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே. 2

முதல், கரு, உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே;
பாடலுட் பயின்றவை நாடுங் காலை. 3

முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பு:என மொழிப இயல்புஉணர்ந் தோரே 4

மாயோன் மேய காடுஉறை உலகமும்,
சேயோன் மேய மைவரைஉலகமும்,
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்,

வருணன் மேய பெருமணல் உலகமும்,
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே. 5

காரும் மாலையும் முல்லை; குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர். 6

பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப. 7

வைகறை* விடியல் மருதம்; எற்பாடு
நெய்த லாதல் மெய்பெறத் தோன்றும். 8

நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே. 9

பின்பனி தானும் உரித்தென மொழிப. 10

இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்†
உரிய தாகும் என்மனார் புலவர். 11

---

*'வைகுறு' எனவும் பாடம்; நச்.

†'தோன்றலும்' ,, ,, இளம்.

திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே;
நிலன்ஒருங்கு மயங்குதல் இன்று என* மொழி
புலன் நன்கு உணர்ந்த புலமை யோரே. [ழிப

உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல்
ஊடல்; இவற்றின் நிமித்தம்; என்று இவை
தேருங் காலைத் திணைக்கு உரிப் பொருளே. 14

கொண்டுதலைக் கழிதலும்† பிரிந்தவண் இரங்க
உண்டுஎன மொழிப ஓர்இடத் தான. [லும்‡

கலந்த பொழுதும், காட்சியும் அன்ன. 16

முதல்எனப் படுவது ஆ இருவகைத்தே. 17

தெய்வம், உணவே, மா, மரம், புள், பறை,
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கரு என மொழிப. 18

---

*'இல் என' எனவும் பாடம் இளம்.

†'கழியினும்' ,, ,, நச்.

‡'இரங்கினும்' ,, ,, ,,

எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்,
வந்த நிலத்தின் பயத்த ஆகும். 19

## இன்ப வொழுக்கத்துக் குரிய மக்கள் நிலைகள்

பெயரும் வினையும் என்றா இருவகைய;
திணைதொறும் மரீஇய* திணைநிலைப் பெயரே 20

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்;
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே. 21

ஏனோர் பாங்கினும்† எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே. 22

அடியோர் பாங்கினும், வினைவலர்‡ பாங்கினும்
கடிவரை இல; புறத்து; என்மனார் புலவர். 23

ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர். 24

---

*'மருவிய' என்பதன் திரிபு.

†'மருங்கினும் எனவும் பாடம், இளம்.

‡'வினைவல' ,, ,, நச்.

## இன்பம் மேம்படுத்தும் பிரிவொழுக்க முறைகள்

ஓதல் பகையே தூதுஇவை பிரிவே. 25

அவற்றுள்,
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன. 26

தானே சேறலும், தன்னொடு சிவணிய*
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே. 27

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்†
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்,
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே. 28

மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே. 29

---

* 'சிவணி' எனவும் பாடம் இளம்.

† நூற்பா 5-லும் இவர் இங்ஙனமே முறை கூறினர்; ஆசிரியர் காலத்தில் இம்முறையே பெரிதும் பயின்று வந்ததாகல்வேண்டும்; 'சொல்லிய முறையால்' என்று இரண்டு நூற்பாக்களிலும் ஆசிரியர் உரைப்பதும் இதனை வலியுறுத்தும்.

மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப. 30

உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தின் ஆன. 31

வேந்துவினை இயற்கை வேந்தனின்* ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்திட னுடைத்தே. 32

பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே,
உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான 33

முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை. 34

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான. 35

## இன்ப வொழுக்கப் பேச்சுகள்

தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தலென்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ,
முன்னிய காலம் மூன்றுடன்† விளக்கித்

---

*'வேந்தன்' எனவும் பாடம் இளம்.

†'மூன்றொடு' ,, ,, ,,

தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்,
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய. 36

ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே. 37

அயலோ ராயினும் அகற்சி மேற்றே. 38

தலைவரும் விழுமம் நிலைஎடுத்து உரைப்பினும்,
போக்கற் கண்ணும், விடுத்தற் கண்ணும்,
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும் [டித்
வாய்மையும் பொய்மையும் கண்டோர்ச்* சுட்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித் தன் நெஞ்சுகலுழ்ந் தோளை
அழிந்தது களைஇய† ஒழிந்தது‡ கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு
என்றிவை யெல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன. 39

---

*'கண்டோன்' எனவும் பாடம், இளம்.
†'களையென' ,, ,, ,,
‡'மொழிந்தது' ,, ,, ,,

பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்
ஊரது சார்வும்* செல்லும் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்†
புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுப்பினும், ஆங்குத்
தாய்நிலை கண்டு தடுப்பினும், விடுப்பினும்,
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப. 40

ஒன்றாத் தமரினும், பருவத்தும், சுரத்தும்,
ஒன்றிய தோழியொடு‡ வலிப்பினும், விடுப்பினும்,
இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலின்|| கலங்குஅஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பால் பட்ட ஒருதிறத் தானும்,
நாளது சின்மையும் இளமையது அருமையும்

*'சார்பும்' எனவும் பாடம், இளம்.
† 'கிளவியும்' ,, ,, நச்.
‡ 'மொழியொடு' ,, ,, இளம்.
|| 'பெயர்தலின்' ,, ,,

காளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்,
வாயினும் கையினும் வகுத்த பக்கமொடு*
ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்,
புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்,
தூதுஇடை யிட்ட வகையி னானும்,
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்,
மூன்றன் பகுதியும் மண்டிலத்து அருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்,
பாசறைப் புலம்பலும், முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்,
காவல் பாங்கின் ஆங்கு ஓர்† பக்கமும்,
பரத்தையின் அகற்சியின் பரிந்தோள்‡ குறுகி

---

*'பக்கமோடு' எனவும் பாடம் இளம்.
‡'பிரிந்தோள்' ,, ,, ,,
†'ஆங்கோர்' என்பதை ஒரு சொல்லாகக் கொண்டு 'அவ்விடத்தோர்' என்னுங் கருத்தில் உரை கூறுவர், நச்.

இரத்தலும் தெளித்தலும் எனஇரு வகையொடு
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன. 41

எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே. 42

நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும். 43

நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே. 44

மரபுநிலை திரியா மாட்சிய ஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப. 45

## இன்பம் முதிரப் பேசும் வகைகள்

உள்ளுறை உவமம், ஏனை உவமம், எனத்
தள்ளா தாகும் திணைஉணர் வகையே. 46

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்*
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே. 47

உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகஎ
உள்ளுறுத்து இறுவதை† உள்ளுறை உவமம்.[ன.

ஏனை உவமம் தான்உணர் வகைத்தே. 49

---

*‘நிலமென’ எனவும் பாடம், இளம்.

†‘உரைப்பதே’ ,, ,, ,,

## தாழ்ந்த இன்ப நிலைகள்

காமம் சாலா இளமை யோள்வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே. 50

ஏறிய மடல்திறம், இளமை தீர்திறம்,
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்,
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே. 51

முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப. 52

## இன்ப வொழுக்கம் பற்றிய நூன்முறைகள்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி* வழக்கம்

*'புல நெறி' எனவும் பாடம், நச்; 'புலவ ராறு' என்பர்; 'வினைவல பாங்கினும்' என்பதை 'வினைவலர் பாங்கினும்' என்றாற்போல; அகத், 23 உரை.

கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்*
உரிய தாகும் என்மனார் புலவர். 53

மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர். 54

புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே. 55

தொல்காப்பியம்-அகத்திணையியல்

நூற்பாக்கள் முற்றும்.

*'பாவினும்' எனவும் பாடம், இளம்.

# 3. தொல்காப்பியம்-அகத்திணையியல்

## உரை.

### I

1. முதன்மைதோன்ற எடுத்துச்சொன்ன அகவொழுக்கங்கள், 'கைக்கிளை' யென்னும் ஒழுக்கம் முதலாகப் 'பெருந்திணை' யென்னும் ஒழுக்கம் ஈறாக ஏழாகுமென்பர் ஆசிரியர்.

கிளந்த, கிளந்தவை; பெயர்.

### II (2—19)

2. அந்த ஏழுதிணைகளுள், கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் நடுவில் நின்ற ஐந்து ஒழுக்கங்களுக்கும் பொதுவானதாயுள்ள பாலையொழுக்கம் என்பது நீங்கலாக, மற்றக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும் நான்கு ஒழுக்கங்களுக்கும், ஒலிக்குங் கடல் சூழ்ந்த இந் நிலப்பரப்பு நான்காகப் பகுக்கப்பட்ட இயற்கையுள்ளதாயிருக்கின்றது.

3. சான்றோர் பாட்டுகளுள் அடிப்பட்டு வருங் கருத்துகளை ஆராயும்பொழுது, அவற்றைக் குறித்துச் சொல்லுங்கால், முதற்பொ

ருள் கருப்பொருள் உரிப்பொருள் என்னும் மூன்று வகைகளே பொருத்தம் மிக்கனவா யிருக்கின்றன.

பயின்றவை, தொன்றுதொட்டுச் சொல்லப் பட்டுவருங் கருத்துகள்; முறை, பொருத்தம்; சிறந்தன, மிக்கன.

4. முதற்பொருள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது நிலம் காலம் என்னும் இரண் டின் இயற்கையை! என்று கூறுவர் இலக்கணம் உணர்ந்த ஆசிரியன்மார்.

'எனப்படுவது', என்று சிறப்பித்துச் சொல் லப்படுவது; 'இயல்பு உணர்ந்தோர்' என்பதில், 'இயல்பு', இலக்கணம்.

5. பசிய நிறமுள்ள திருமால் விரும்பிய காடு பொருந்திய நிலத்தையும், செந்நிறமுடைய முருகவேள் விரும்பிய மேகமுலாவு மலைகள் பொருந்திய நிலத்தையும், வளம் மிக்க வேந்தன் விரும்பிய இனிய நீர்வளம் பொருந்திய நிலத் தையும், செய்கைத் திறமுடைய அலைக்கடவுள் விரும்பிய மிகுமணல் பொருந்திய நிலத்தையும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று முன்னோர் சொல்லிய முறையால் சொல்லவும் படும்.

'மா', பசுமை; மாயோன், பசிய நிறமுள்ளவன்; 'சே', செம்மை; சேயோன், செந்நிறமுள்ளவன்; 'மை', மேகம்; 'உலகம்', இங்கே நிலப்பரப்பு. 'தீம் புனல்' என்றார், கடல் நீரினின்றும் பிரித்தற்கு; பெரு மணல், மணல் மேடு*.

6 கார் காலமும் அதன் மாலைக் காலமும் முல்லையொழுக்கத்துக்குக் காலம்; குறிஞ்சியொழுக்கத்துக்குக் கூதிர்க்காலமும் அதன் நள்ளிராப்போதும் ஆம் என்பர் புலவர்.

கார் காலம், ஆவணித் திங்களும் புரட்டாசித் திங்களும்; இது முதற்பெயல் தொடங்கி மழைபெய்யுங் காலம். கூதிர்க் காலம், ஐப்பசியுங் கார்த்திகையும்; இது மிகு மழையாற் குளிர் மிக்க காலம். புலவர், அறிஞர்; அவற்றின் இலக்கணம் அறிந்தோர்.

---

* நச். 'நெடுங்கோட் டெக்கர் நிலன்' என்றமை நினைவுகூர்க.

7. குறிஞ்சியொழுக்கத்துக்கு முன்பனிப் பருவமும் உரித்தென்று சொல்லுவர்.

எதிர் பருவம், எதிரும் பருவர்; முன்ப னிக்கு வந்தது. அப்பருவம் மார்கழியுந் தையும்.

8. வைகறை நேரமும் விடியற் காலமும் மருதவொழுக்கத்துக்குக் காலம். கதிரவன் சாயுங் காலம் நெய்தலொழுக்கத்துக்காதல் மெய்ம்மைபெறத் தோன்றும்.

கால இயற்கைகள், உரிய ஒழுக்க உணர்ச் சிகளைத் தவறாமல் விளைவிக்கும் என்பதற்கு 'மெய்பெறத் தோன்றும்' என்றார். எல்லாவற் றிற்கும் இது பொருந்தும். எல் படு பொழுது, பகற்பொழுதின் கடைசி காலம்.

9. மற்ற நான்கு ஒழுக்கங்களுக்கும் பொது நிலையொழுக்கமாகிய பாலையொழுக்கம், நடுப்ப கல்நேரம் வேனிற்பருவத்தோடு ஒத்து முடி கின்ற நிலையையுடைய வகையாக ஆசிரியர்கள் கருதிய முறைமையையுடையது.

'நண்பகல் வேனிலொடு முடிவுநிலைமருங்கு' என்பதற்கு வேனிற்காலத்து நண்பகல்நேரம்

என்பது கருத்து. முன்னிய, கருதிய. பாலைக்கெனத் தனி நிலம் இல்லாமையால், காலமுங் கருப்பொருள் முதலியனவுங் கொண்டு ஆசிரியர்களால் உள்ளத்தளவாகக் கருதப்பட்ட நிலைமையையுடையதென்பதற்கு 'முன்னிய நெறித்தே' என்றார். பொதுவாக வேனில் என்றமையால் இளவேனில் முதுவேனில் என்னும் இரண்டுங் கொள்ளப்படும். இளவேனில், சித்திரையும் வைகாசியும்; முதுவேனில், ஆனியும் ஆடியும்.

10 பாலைக்குப் பின்பனிப் பருவமும் உரித்தெனச் சொல்லுவர். இது மாசியும் பங்குனியும்.

11. 'கடலின் வழியாகப் பிரிதல்' 'நிலத்தின் வழியாகப் பிரிதல்' என்னும் இருவகைப் பிரிவும், உள்ளத்தளவாக நில்லாமல் நிலையாகச் செயலளவில் தோன்றிவிட்டாலும் அதற்கும் பின்பனிப்பருவம் உரியதாகும் என்று சொல்லுவர் புலவர்.

அடுத்து வரும் வேனிலிற் பிரியவேண்டுமென்று உள்ளத்தளவாய் எண்ணிக்கொண்டி

ருப்பது பின்பனிப் பருவத்திலேயே பிரியும்படி நிலைபெறினும் அப்பருவம் இருவகைப் பிரிவுக்கும் உரித்தென்பது. மேல் நூற்பாக்களில் (6–11), பெரும்பொழுதுமட்டுங் கூறிய இடங்களில் அவற்றிற்கு இனமான சிறுபொழுதுகளும், சிறுபொழுதுமட்டுங் கூறிய இடங்களில் அவற்றிற்கு இனமான பெரும்பொழுதுகளுங் கொள்க.

12. ஒழுக்கத்துக்குரிய முதற்பொருள் மற்றேரொழுக்கத்துக்குரிய முதற்பொருள்களோடு கலந்து நிற்றலும் நீக்குநிலைமை யில்லை. முதற்பொருள் எனப்படும் நிலம் பொழுது இரண்டனுள், நிலம்மட்டும் ஒன்று மற்றொன்றோடு ஒன்றுசேர்தல் இல்லை என அந்நிலவியல்பினை நன்குதெரிந்த புலமையுடையோர் சொல்லுவர்.

திணை, ஒழுக்கம்; புலன், நிலம்; இங்கே நிலத்தின் இயல்புகள்.

13. உரிப்பொருளல்லாத மற்றவைகள், தம்முள் ஒழுக்கத்துக்குரியவை மற்றேரொ

ழுக்கத்துக்குரியவற்றோடு கலந்து நிற்கவும் பெறும்.

இதனால் உரிப்பொருள்கள் தம்முள் மயங்கி வாரா என்பது பெறப்பட்டது. அல்லாதவை என்றது, முதற்பொருளிற் காலமும், ஏனையெல்லாக் கருப்பொருள்களும் என்க.

14. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்னும் ஐந்து ஒழுக்கங்களும் இவை நிகழ்வதற்குக் காரணமான இவற்றின் குறிப்புகளும் என்று சொல்லப்படுகின்ற இவ்விருவகைகளும், ஆராயுங்கால், திணைக்கு உரிப்பொருள்களாம்.

திணை, இங்கு நிலம்; நிகழுமுறைப்படி 'புணர்தல்' முதலாக முறை கூறினார்.

15. தலைவியை உடன்கொண்டு அவளிருப்பிடத்தினின்று நீங்குதலும், இடருக் கஞ்சித் தலைவன்மட்டும் பிரிந்தவிடத்துத் தலைவி இரங்குதலும் ஒரோவோரிடத்தில் நிகழ்தலுண்டு எனச் சொல்லுவர்,

'பிரிந்தவன்', பிரிந்தவிடத்து;* எங்கேனும் அருகிநிகழுமென்பதற்கு 'ஓரிடத்தான' என்றார் இவையும் பிரிவைச் சேர்ந்தனவேயாகலின், காலம் இருவகை வேனிலுங் கொள்க. மேல் வரும் நூற்பாவுக்கும் இது பொருந்தும்.

16. உடன்போக்கில் இருவரும் சேர்ந்து சென்ற காலமும், முதன்முதல் இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைக் கண்டகாட்சியும் பிரிவு உணர்ச்சிக்கு இடமானவையேயாம்.

உறவினரையும் இடத்தையும் பிரிந்து தனிப் பட்டமையாற் பிரிவுணர்ச்சியைச் சேர்ந்தவை யாயின. பிரிவு எனப்பட்டமையால் இரண்டற் குங் காலம் இருவகை வேனிலுங் கொள்க.

17. முதற்பொருளென்று சொல்லப்படுவது முன்சொன்ன 'நிலம்' 'பொழுது' என்னும் அவ் விருவகையினையே உடையது.

இஃது ஐயம் நீக்கியபடி; இடையே 'புணர் தல்' முதலான உரிப்பொருள்களுங் கூறநேர்ந்த

---

* இளம்பூரணரும் இங்ஙனங் கருதினர்.

மையால், மயங்காமைப் பொருட்டு இங்ஙனங் கூறினார்

18. தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, மேளம், தொழில் என்பவற்றை இன்னிசை வகையோடு கூட்டி அவ்வகைப்பட்ட பிற பொருள்களும் கருப்பொருள்கள் எனச் சொல்லுவர்.

ஒவ்வொரு நிலத்துக்கும் இவை உண்டு. இவை நிலமுங் காலமும்பற்றி வருவனவாதலால், நிலமின்றிக் காலமட்டுங் கூறப்படும் பாலையொழுக்கத்துக்கு அக் காலம் ஏதுவாகத் தோன்றி உருவாகுங் கருப்பொருள்கள் கொள்ளப்படும்.

19. நால்வகை நிலத்துள் எந் நிலச் சார்பான மலரும் பறவையும் அந் நிலத்தோடும் காலத்தோடும் ஒத்து வளராவாயின், அவையுந் தாம் வந்து சேர்ந்த நிலத்தின் கருப்பொருள்களாகக் கொள்ளப்படும்.

அவையும், வந்த நிலத்தின் கருப்பொருள்களாமென்பதற்கு உம்மை கொடுத்தார். கருப்

பொருள்கள் நிலத்தின் பயனாகத் தோன்றி உருவாதலால் அவற்றை 'நிலத்தின் பயத்த' என்றார்.

## III (20—24)

20. ஒவ்வொரு நிலத்தையுஞ் சார்ந்த, அந் நிலத்து மக்கட்கே நிலையாய் வழங்கும் பெயர்கள், அந் நிலத்தின் பெயரும் அந் நிலத்தின் தொழிலுமென்று அவ்விரண்டு வகையினால் அமைந்தனவாயிருக்கும்.

அவ்விரண்டுவகையான ஏதுக்களால் அமைந்தனவாயிருக்குமென்பது கருத்து. திணை, இங்கே நிலம்.

21. ஆயர் வேட்டுவர் முதலியன முல்லை நிலத்து ஆண்மக்களின் பெயர்கள்; அவ் வகுப்புகளில் தோன்றும் அந்நிலத்து ஆட்சியாளரும் உளர்.

'ஆயர்' 'வேட்டுவர்' முதலியன நிலமக்கள் பெயர்; 'கிழவர்', தலைமக்கள்; அவர்கள் பெயர்கள் 'அண்ணல்' 'தோன்றல்' என்றாற்போல்வன

22. குறிஞ்சி முதலிய மற்ற நிலத்தவர்கள் சார்பினும் எண்ணும்போது திணைநிலைப் பெயர்கள் பலவாய் அவ்வகையவேயாம்.

ஆறு, பலவாக என்னும்பொருட்டு. திணை நிலைப்பெயர், அவ்வத்திணை மக்கட்கே நிலையாக வழங்கும் பெயர்.

23. அகத்திணைகள், குற்றேவல் மக்கள் சார்பினும் தொழில்வல்லவர் சார்பினும், ஐந்திணை யொழுக்கங்கட்குப் புறத்தில், நீக்குமளவின அல்ல என்று சொல்லுவர் புலவர்.

'புறத்து' என்றமையால் ஐந்திணை யொழுக்கங்கட்குப் புறத்தவான கைக்கிளை பெருந்திணை யொழுக்கங்களே பெரும்பான்மையும் அவர்கட்கு உரியவென்பது கருத்தாம்

24. எவ்வுதல் நிலைமையுடைய வினை, நிலமக்களுந் தலைமக்களுங்கூட ஒரோவொருகால் இக் கைக்கிளை பெருந்திணைகட்கு உரியர். அவரும் அங்ஙனம் ஆகிய நிலைமை அக் கீழ்மக்கள்போல் வழுவி யொழுகுதலாலென்க.

அன்னராதலின் அவரும் ஆகிய நிலைமையின ராயினர். அன்னராதலாவது தமது ஐந்திணை யொழுக்கத்தினின்றும் வழுவி அடியோர் வினை வலர் போன்றாராதல். உம்மையால், அவருட் சிலரே ஓரோவொருகால் அங்ஙனமாகு நிலை மை பெறப்படும்.

## IV (25—35)

25. ஓதற் பிரிவும், பகைவயிற் பிரிவும், தூதிற் பிரிவும் என்னும் இவை பிரிவுகளாம்.

இப் பிரிவுகள் பொதுநலத்தின்பொருட்டாத லால், இவையே முதன்மையானவையென்பது கருத்து.

26. அவைகளுள், ஓதற் பிரிவும் தூதிற் பிரி வும் அவ்வந் நிலங்களில் உயர்ந்தோரான ஏவல் கொள்வோருக்குள் நிகழும்.

அவர், நிலமக்களும் தலைமக்களும்.

27. பகை காரணமாக அரசன் தானே பிரிந் துசெல்லுதலும், அவனோடு ஒத்த ஏனையோர் பிரிந்துசெல்லுதலும் அரசியலாளர்பால்நிகழும்.

இவை அவ்வந் நிலத்து ஆட்சியாளர்கள்பால் நிகழும் பிரிவு. 'சிவணிய வேனோர்' என்பவர் அரசனைப்போல் நின்று ஆட்சிசெலுத்தும் அவன் சார்பாளர். இவர் கூறப்பட்டமையால், இவர் பிரிவில் தூதிற் பிரிவும் அடங்கும்.

28. பொருந்திய சிறப்பினையுடைய, மன்னன் சார்பாளர், அரசனைப்போல் நிலங்காோறுஞ் செய்யுஞ்செயல்கள், முல்லைமுதலாகச்சொல்லிய அவ்வந்நிலத்து வேறுபாட்டுமுறைமையால் இடையே சீர்கெட்டுப்போனமை, மேலும் அங்ஙனங் கெடாமை விரும்பி அதன்பொருட்டும், அச் சார்பாளர் அங்கங்கே ஏற்பாடு செய்திருக்கும் மிகுந்த பொருள்வருவாய்கள் திரட்டப்படுதற்கும், முதலிற்சொன்ன அரசியலாளர்பாற் பிரிவு நிகழும்.

ஒண் பொருள், மிக்கபொருள். 'படிமைய', ஒப்பச் செய்யுஞ் செயல்கள்.

29. மேலேசொன்ன அரசியலாளரது பிரிவு முறைமை ஒவ்வொரு நிலத்திலுமுள்ள ஏவல் கொள்வோர் இருவகையர் ஏவல்செய்வோர்

இருவகையர் என நால்வகையோருக்கும் உரியது.

எல்லா மக்கட் பிரிவினரும் அரசனது ஆரியல் அலுவல் பார்த்தவருவராதலால் இங்ஙனங் கூறினார்

30 அரசன் சார்பாளராய்த் தலைமைதாங்கிச் செல்லுதற்குமட்டும் அவனுக்கு அடுத்த பெருங்குடியாளர் உரியர்.

இவர் ஏவல்கொள்வோர் இருவகையோருள் உயர்ந்தோர்; அவ்வந் நிலத்துத் தலைமக்கள்.

31. அறநூல்களுட் கூறிய முறைப்படி பிரிவு நிகழ்த்தும் வகைகள் உயர்ந்தோரான ஏவல்கொள்வோர்க்குரியன

32. வேந்தனது ஆட்சித் தொழிலியல்பு, வேந்தன் நீங்கலாக ஏனையெல்லா மக்கட் பிரிவினரிடத்தினும் அவரவர் செயல்களில் நிகழு நிலைமையுடையது.

அவரவர் செயல்களின் ஆட்சி காரணமாக எல்லார்க்கும் வேந்தனைப்போற் பிரிவு உண்டு என்பது கருத்து. பிறர்க்கு அத்துணைச் சிறப்

பின்ருகலின், சிறப்பாக ஒரோவொருகால் நிகழ்
தல்பற்றி 'எய்து இடனுடைத்து' என்ருர்.

33. வேறு நாடுகட்குப் பொருள்வயிற் பிரித
லும் அவர்பால் உரித்து. அவருள் ஏவல் கொள்
வோரான உயர்குடிமக்களின் பொருள்வயிற்
பிரிவு ஒழுக்கத்தவறில்லாத வகையினதாம்.

பெரும்பாலும் தம் நாட்டிலேயே பொருள்
தேடுவாரான நிலமக்கள் முதலியோருள் ஒரோ
வொருவர் ஒரோவொருகால் பிற நாடுகட்கும்
பொருள்வயிற் பிரிந்துசெல்வாராகலின் இது கூறி
ஞர். உயர்குடிமக்கள் அறத்துக்கு மாருகாமற்
பொருள்தேடுவரென்பது கருத்து.

34. கடல்வழியாகப் பிரியும் வழக்கம் மக
ளிரோடில்லை

ஆடவர்மட்டுங் கடல்வழியாகப் பிரிவரென்
பது கருத்து. இதனல் ஒரோவொருகால் நிலத்
தின்வழியாகப் பிரியும் வழக்கம் மகளிரோடு
உண்டு என்பது பெறப்படும். இது 'வளங்காண்
டல்' முதலியவற்றிற்குப் பெரும்பான்மை நிக
ழும்.

35. மிக்க காமத்தில் உழலும்போதுகூட எந்த நிலத்தின்கண்ணும் மகளிர் மடன்மேல் ஏறுதலில்லை அது சிறப்புடைய முறைமையில் லாமையால்.

ஆதலின் பொதுவான காலங்களில், அலுவல் பொருட்டு, மகளிர், அதுவும் பிறநாடுகட்கு, அதுவுங் கடலின்வழியாகப் பிரிதல் இல்லை யென்பது பெறப்படும்

V (36—45)

36. தன் புதல்வி தலைவனோடு உடன்போக்கிற் பிரிந்துபோகிய வகையில், நற்றாய், தன்னையும் தலைவனையும் தலைவியையுங் குறித்து நினைத்து, அந்நேரத்திற் பொருந்தும் நிமித்தங்கள் நற்சொற்கள் தெய்வ நிகழ்ச்சிகள் முதலியவற்றோடு, நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் சென்ற கால நிகழ்ச்சிகள்மேலும் எனக் குறித்த காலம் மூன்றுடன், தலைவிக்கும் தனக்கும் உண்டாகும் நலங்கள் பொலங்கள் அஞ்சத்தக்கவைகள் உண்டாதலென்று இவைபோல்வன

பிறவுங்கூட்டி ஆராய்ந்துபார்த்துத், தோழியி னிடத்திலும் எதிர்ப்பட்டவர்களிடத்திலுமெல் லாம் வருந்திக் கூறலுமான பேச்சுகளும் அந் நோத்தில் நிகழ்வதற்குரியன.

சுட்டி, குறித்து நினைத்து; மன்னும், பொருந் தும்; நிமித்தம், பல்லி முதலியன சொல்லுஞ் சொல்; மொழிப்பொருள், மொழியாகியபொ ருள்; அது நற்சொல். தெய்வம், தெய்வ நிகழ்ச் சிகள்; அவை, கட்டினுங் கழங்கினும் இட் டுப் பார்த்தல் தெய்வ ஆவிகளை வருவித்துக் கேட்டல் முதலியன. இன்னின்ன காலத்தில் இன்னின்னவை உண்டாகுமென்று நற்ருய், குறித்துக் கருதுங் காலமென்பதற்கு, 'முன்னிய காலம்' என்றார். விளக்கி, ஆராய்ந்து பார்த்து; நெஞ்சில் ஆராய்ந்து விளக்கிக்கொள்ளுதல் என் று கொள்க. போகிய திறத்து, தலைவி உடன் போகிய வகையில்; தெளிவின்பொருட்டு அது முதலில் உரைத்துக்கொள்ளப்பட்டது. புலம் பல், தனது தனிமை தோன்ற வருந்திக்கூ றல்; அவ்வழி, அந்நோக்கிலென்று காலங்

குறித்து நின்றது. நற்றாய்க்கு உரை நிகழுஞ் சுவையான பகுதிகள் இதிற் காட்டப்பட்டன.

37. பாதுகாப்பு மிக்க தமது பெரிய ஊரின் சுற்றுச் சேரிகளினும், அவற்றிற்கப்பாற் செல்லும் வழிநிலங்களினும், தாமே சென்று தேடும் தாயரும் உளர்

'பேரூர்', நகரம்; 'சேரி', புறஞ்சேரிகள்; தாயர், செவிலி முதலியோர். ஆடவர்கள் சென்று தேடுதலோடு இவர்களும் பிறர் ஏவாமல் அவன் பினல் விரைந்துசென்று தேடுதலின், 'தாமே செல்லுந் தாயரும்' என்றார். இந்த அன்பின் விரைவு நற்றாய்க்கும் இருக்குமாதலால் அவளுஞ் சேரிவரையிற் சென்று தேடுதல் நேரும். 'தாயர்' எனப்பொதுப்படக் கூறினமையாலும் உம்மை எண்ணொடு சிறப்பாதலாலும் இது பெறப்படும்.

38. மனைக்கு அயலிடத்தே பிரிந்தாராயினும் அதுவும் பிரிவின்பாலதாம்.

முன் நூற்பாவிற் சேரியும் என வந்தமையால் அவ்வளவு அணுக்கமான இடத்திற் பிரிந்தால்

அதுவும் ஒரு பிரிவாகுமோ என ஐயுறுவார்க்கு அதனினும் அணுக்கமான மனையயற்கண் பிரிந்தாராயினும் அதுவும் பிரிவேயாம் என்றார். உடன்போக்காதலின் இங்ஙனங் கடுமையாகக் கருதப்பட்டது.

39. பின்பு மூண்டுவருந் துன்ப நிலைகளை முன்னுணர்ச்சியோடு தலைவனுக்கு எடுத்துரைக்கும் வகையினும், அவனோடு தலைவியை உடன்போக்கிற் போக்கும்வகையினும், அவர்களை வழிவிடும் வகையினும், அப்படி அனுப்பிவிட்டமையால் தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்கட்கும் அவள் பிரிவினால் உண்டான துன்பத்தை ஆற்றிக்கொள்ளும் வகையினும், வழியில் தலைவன் தலைவியரின் உண்மையும் பொய்ம்மையும் ஆராய்ந்து கண்டோரைத் தாய்க்குக் குறிப்பித்து அதனால் தன்பக்கம் மனம் மாறிவரும் அத்தாயின் நிலைமை நோக்கித் தலைவியை மீட்டுக்கொள்ள ஏற்பாடுகள்செய்யும் வகையினும் துன்பம் மிகப்பெருகித் தன் நெஞ்சு வருந்தியிருந்த தாயை இதுகாறும் அங்ஙனம் வருந்தி

யதை நீக்கும்பொருட்டு இனி நடக்க வேண்டுவ னவற்றைக் கூறி வற்புறுத்தல் கருதி நெருங்கி வந்ததன் வகையோடு என்னும் இவைபற்றிய பேச்சுகளெல்லாம், இயற்கைபொருந்த ஆரா யின், தோழியின்பால் அருளுணர்வோடுகூடித் தோன்றும் என்க.

தலைவியை உடனழைத்துச் செல்லாமையால் அவளுக்கும் அவள் காரணமாகப் பிறருக்கும் இனி மூண்டுவருந் துன்பநிலை இன்னதென்று தோழி தலைவனுக்கு எடுத்துக் கூறுவதென்பது முதலடியின் கருத்து. தம் உறு விழுமம், தமது மிக்க துன்பம்; பன்மை, தாய் முதலியோரை யும் உளப்படுத்தி நின்றது. 'கண்டோர்', வழி யில் எதிர்ப்படும் அறவோர் முதலியோர். வன் புறை, வற்புறுத்தல்.

40. மாலைக் காலமும் வழியின் அருமையும் அச்சம் வருமாறு தோன்றுதலால் அம் மாறு பாட்டானாகிய தீங்குகள் இவையென்று எடுத் துக் காட்டும் வகையினும், தமதூரின் அணிமை யும் தொலைவாகச் செல்லவிருக்குந் தேயமும்

பற்றி அன்பார்ந்த நெஞ்சத்தோடு சொல்லும் வகையினும், கூடிய காதலர்கள் சார்பில் விரும்பிய நெஞ்சத்தோடு இரங்கி அவர்கள் கேட்பதற்கு எதிர்மொழிகள் கூறி வழிவிடும் வகையினும், அவ்வழியில் அவர்களைப் பின்பற்றித் தேடிவரும் அச் செவிலித்தாயின் வருத்தநிலை கண்டு அவளை அதன்மேற் செல்லவொட்டாமல் தடுக்கும் வகையினும், அல்லது போகவிடுக்கும வகையினும், கொலைவிடத்துக்குச் சென்றுவிட்ட தலைவன் தலைவியாது போக்கின் வகையினும், அவர்கள் மீண்டுந் திரும்பிவரும் வரவின் வகையினும், கண்டோர், பேச்சு நிகழ்த்துதல் வழக்கத்திற் கண்டது என்பர்.

சூற்றம் எடுத்துக் காட்டல், உடன்போக்கிற் பிரிவோரை, அணிமையிலுள்ள தமதூருக்கு வந்து இருக்கலாம் என்று விருப்பி அழைத்தல் முதலியன ஆர்வ நெஞ்சமொடு சொல்லுதலெனக. நெஞ்சம் முதலறக் கரைந்துருகியென்றற்கு, 'அழிந்து' என்றார், உடன்போக்கிற் பிரியுந் தலைவன் தலைவியர், தம்மை எதிர்ப்

பட்டாளை வழி நிலைமை முதலியன கேட்பாராகலின், கண்டோர், அவர்கட்கு எதிர்மொழி கூறி விடுப்பாராயினர். எதிர்மொழி, விடைமொழி.

41. வரைவுக்கு இணங்காத சுற்றத்தாரைப் பற்றியும், தலைவியை உடனழைத்துச் செல்லும் போது அவள் மென்றன்மைக்கு ஒவ்வாத கடுவேனிற் காலத்தைப் பற்றியும், கொடிய சுரத்தைப்பற்றியும், தனக்கு இணங்கிய தோழியின் கருத்தோடு தானும் வலுகட்டாயமாய் உடன்போக்கிற் பிரிய இணங்கும் வகையினும், அல்லது இன்னுஞ் சிலகாலம் தலைவியைத் தோழியினிடமே விடுத்துச்செல்லும் வகையினும், இடைவழியின்கண் தலைவியின் சுற்றத்தார் பின்பற்றி வந்து அவளை மீட்டுச்செல்ல முயல்கையில், தலைவி நெஞ்சங் கலங்கும் வருத்தமடைந்து முடிவில், கற்போடு கூடியதாகலின் அவ் அலரும் பொருட்படுத்தாது உட்கொண்டு அவ் உடன் போக்கின்கண்ணேயே போக ஒருப்பட்ட சிறந்த வகையினும்,

சுரம், கற்களும் முட்களும் உள்ள அருவழி; வரைவுக்கு உறவினர் உடன்படாமையும் தலைவியின் ஆற்றாமையுங் கருதிய தோழி, தலைவனை அணுகி உடன்போக்கு மேற்கொள்ளுமாறு வற்புறுத்தலால் அவள் வலுகட்டாயத்துக்காகத் தலைவன் இணங்கிவர நேர்தலின், 'ஒன்றிய தோழியொடு வலிப்பினும்' என்றார். தலைவி, கற்பொடு புணர்ந்த கௌவையும் மனங்கொண்டு உடன்போக்கிலேயே ஒருப்பட்ட ஒரு திறத்தில் தலைவனுக்குப் பேச்சு நிகழ்தலென்பது, அவள் உறுதியின் அருமை பாராட்டுதலென்று கொள்க. கௌவை, பழிச்சொல்.

வாழ்நாள் சிலவாதலும் ஆனால் இளமையின் அருமைப்பாடும்; முயற்சியின் சார்பும் ஆனால் தனது அறவழியின் அமைதியும்; சில பொருள்கள் இல்லாமையின் இழிவும் ஆனால் ஏனைய செல்வாக்கு நிலையின் மேம்பாடும்; தலைவியைச் சிலகாலம் பிரிதலால் தனக்கும் அவட்கும் இடையில் உண்டாகும் அன்பின் பெருக்கமும் ஆனால் அங்ஙனம் பிரிந்திருப்பதின் அருமையும் ஒன்

நிற்கொன்று ஒவ்வாத நிலையிற் பொருள் முயற்சியில் உள்ளங்கொண்ட வகையினும்;*

வாழ்க்கைநாள் சிலவாதல் கருதிப் பொருள் தேடுதலில் ஊக்கங்கொள்ளும்போது இளமையின் அருமைப்பாடு தோன்றி இன்பத்தில் ஈர்த்துத் தடுத்தலால், இவற்றின் ஒவ்வாமை பெறப்படும். பிறவற்றிற்கும் இங்ஙனங் கொள்க.

வாயினானும் கையினானும் வகுத்துக்கொண்ட அலுவல் வகையோடு மறுமைக்கு ஊதியம் கருதிய சிறந்த வகையினானும், பிரிந்து பொருள் முதலியன தேடுதலால் உண்டாகும் புகழும் அங்ஙனம் பிரிந்து தேடாமையால் உண்டாகுங் குற்றமும் எடுத்து வற்புறுத்திக்கூறும் வகையினும், தூதிற் பிரிவு இடையில் நேர்ந்த வகையினாலும், தமக்கு ஆக்கமாகித் தோன்றும் நண்பர் பொருட்டுப் பிரியும் வகையினும், தன்வலி துணைவலி வினைவலி என்னும் மூன்று பகுதிகளும் நாட்டின் அருமைப்பாடுகளுங் காணப்படுதல்

---

* இப் பகுதிக்கு நச். உரைத்த உரை நல்ல உலகியற் பழக்கமும் நுட்பமும் மிக்கது.

அமைந்த பகையரசர்களின் மேம்பாடு காரணமா கப் பிரியும் வகையினும், பிரிந்து சென்றபின் பாடிவீட்டின்கண் தலைவியை நினைந்து தனிமை கூறி இரங்கும் வகையினும், முயற்சிமுடிந்தபின் தலைவியை விரைந்து சேரற்பொருட்டுத் தேர்ப் பாகன் வினைத்திறத்தை அவனோடு விரும்பிய வகையினும், நாடுகாக்குங் காவற்சார்பில் உண் டாகும் சிறந்த பிரிவுகள் வகையினும், பரத்தை யர்ப்பிரிவில் வருந்திய தலைவியை அணுகி அவளை வேண்டிக்கொள்ளுதல், அவள் வருத்தம் தெளி வித்தல் என இருவகையோடு, உரைவகைக் குறிப்புகள் தலைவன்பாலன.

'வாயின்' என்றது, ஓதல்; 'கையின்' என்றது, படைக்கலமெடுத்தல் ஓவியம் எழுதுதல் முதலி யன. 'ஊதியப்', இங்கே அறம். மாற்றோர்மேன் மையிற் பிரிதலென்பது, அவர் மேன்மைகண்டு தலைவன் தன்னையும் மேம்படுத்துக்கொள்வதற் குப் பிரியும் பிரிவெனக் கொள்ளப்படும். பாடி வீடுகள், பசிய தூறுகளால் வேலிவளைத்து அறைகோலப்படுதலின், 'பாசறை' எனப்பட்

டன. பகைவயிற் பிரிவு முற்கூறப்பட்டமை யாற், 'காவற்பாங்கின் பக்கம்' என்பது, தன் நாட்டு ஆட்சி காரணமாகச் செல்வது முதலி யன.

42. கூறுது எஞ்சி நின்றோர்க்கும் பேச்சு நீங்குதலில்லை.

எஞ்சி நின்றோர், நற்றாய் செவிலி முதலி யோர்; அவர்க்கும் பேச்சு உண்டு என்பது.

43. முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பின் நினைத் துப் பேசுதற்கு ஏதுவுமாகும்.

44. முன் பிரிந்துசென்ற நிகழ்ச்சிகள்குறித் துப் பேசிக்கொண்டிருப்பதும் பிரிவொழுக்கமே யாம்.

நிலையல், நிற்றல்; பேசிக்கொண்டு நிற்றல்.

45. மரபுநிலைக்கு மாறுகாத மாட்சிமையுள் ளவாய்ப் புதியவாகக் கலக்குங் கருத்துகளும் இப்பிரிவொழுக்கத்திற் கலந்துவரும் என்று தழு வுவர் ஆசிரியர்.

அவை, பாசறைக்கண் தலைவியின் தூது கண் டு தலைவன் கூறுதல் முதலியன.

## VI (46—49)

46. உள்ளுறையுவமம், ஏனை, உவமம்போல அகத்திணைகள் உணரும் வகையைத் தள்ளாதாய் வரும்.

'ஏனை' யென்றது, உள்ளுறையுவமத்தை நீக்கிற்று. 'என', உருபு. அகத்திணையைச் சுவைபெருக்கி உணர்த்துதற்கு ஏனை உவமத்திலும் பார்க்க இவ்வுள்ளுறை யுவமம் இன்றியமையாது என்பது 'ஆகும்' என்பதனாற் கொள்ளப்படும்.

47. உள்ளுறை யுவமம் என்பது கருப்பொருள்களுள் தெய்வம் நீங்கியதைத் தனக்குரிய இடமெனக் கொள்ளும் என்பர் அதன் இலக்கணம் அறிந்தோர்.

'தெய்வம் ஒழித்தது' என்றது, தெய்வம் நீங்கலாக உணவு விலங்கு முதலிய ஏனைக் கருப்பொருள்களை; குறி, இலக்கணம்.

48. புலவன் ஒரு கருத்தை உள்ளத்தே கருதிக்கொண்டு, இக் கருத்தோடு ஒத்து மேலே கூறுங் கருப்பொருள்கள் முடிகவெனத், தனது

கருத்தை அவற்றின் உள்வைத்து, ஏற்பச் சொல்லுவதே உள்ளுறை யுவமம்.

'உள்ளுறுத்து உரைப்பதே' யென்றமையால் இஃது உவமந்தான் என வெளிப்படையாய் உணரும்வகையில் வராதென்பது கருத்து; 'உள்ளுறை யுவமம்' என்பதன் சொற்பொருள் இது.

49. ஏனை, 'உவமம்' என்பது, தான் வெளிப்படையாய் உணரும் வகையையுடையது.

## VII (50—52)

50. காம உணர்வு அமையாத இளம்பெண்ணினிடம் உய்யும்வழி அமையாத பெருந்துன்பங்கொண்டு புகழ்தலும் பழித்தலும் என்று இருவகைகளால், தன்னொடும் அவளொடும் பொருந்திய சில கருத்துகளைக் கூட்டி விடைமொழி எதிர்பெறாதவனாய்த் தானே பேசிக் கொண்டு இன்புறுதலைப் பொருந்தித்தோன்றும், கைக்கிளைக் குறிப்பு என்பது.

'காமஞ் சாலா இளமையோள்', கைக்கிளைக்குச் சிறப்பு. 'ஏமம்', உய்வு என்னும்பொருட்டு;

சுருக்கிய, சுருக்கிய கருத்துகள்: ஒத்த கருத்து கள் என்க.*

51. ஏறிய மடல்வகையும், இளமை நீங்கிய வகையும், தெளிவு இழந்த காம நிலையில் மிகு கின்ற வகையும் அம் மிக்க காமத்தின் வற்புறுத் தலோடு கூட்டிச் சொல்லப்பட்ட நான்கும் பெருந்திணைக் குறிப்பாம்.

'ஏறிய மடற்றிறம்' என்றமையால், மடலே றுவேன் என்று சொல்லளவிற் சொல்வது பெ ருந்திணையாகாதென்பது பெறப்படும். அங்ங னம் தலைவன் ஒரோவொருகால் களவொழுக்கத் திற்சொல்வது, தன் கருத்து முடித்தற்கென்று கொள்க.

52. முன் நிகழ்ந்த காட்சி முதலான நான் கும், முன் நூற்பாவிற் சொன்ன கைக்கிளைக்கு உரியதென்பர்.

முன் என்றது, இயற்கைப் புணர்ச்சியை.

---

* 'ஒத்தன' என்பது, இளம்பூரணர் உரை.

## VII: (53—55)

53. நாடக வழக்கங்கொண்டும் உலகியல் வழக்கங்கொண்டும் பாடல் அமைந்த அகத்திணைப் புலனெறி வழக்கம், கலிப்பாட்டு பரிபாட்டு என்னும் அவ்விரு செய்யுள் வகையினும் நடைபெறுதற்குரியதாகுமென்று சொல்லுவர் புலவர்.

அவ்விரு செய்யுள் வகைகளும் அகத்திணை பாடுதற்குச் சிறப்பாக உரியன என்பது. 'புலனெறி வழக்கம்', அறிவான் நெறிப்பட்டுவரும் வழக்கம். உலக வழக்கத்தையும் இது தழுவி நிற்றலின், அனைவராலும் பின்பற்றப்பெறும் முதன்மை இதற்குக் கொள்ளப்படும்.

54. மக்களைத் தலைவராக வைத்துக்கூறும் அகமென்னும் ஐந்திணைகளிலும், ஒருவரது பெயரையும் இன்னதென்று சுட்டிச் சொல்லப் பெறார் ஆசிரியர்.

ஐந்திணையை 'அக'மென்று சிறப்பித்தார்; முன்பு (நூற்-23) அதன் இருபுறத்துமுள்ள

கைக்கிளை பெருந்திணைகளைப் 'புறத்து' என்றமை நினைவுகூர்தற்குரியது. பெயர் என்றது, இயற்பெயரை.

55. அகத்திணைப் பாட்டுகளில் மக்கள் பெயர்கள், அவற்றிற் கூறப்படும் புறத்திணைப் பகுதிகளிற் பொருந்திவரினல்லது, அவற்றின் அகத்திணைப் பகுதிகளிற் கலத்தலில்லை.

இதனால், மாந்தரின் இயற்கைப் பெயர்கள் புறத்திணைகளில் வருமென்பதும் பெறப்படும்.

தொல்காப்பியம் - அகத்திணையியல்

இளம்பூரணர் உரை

முற்றும்.

# 4. 'அகத்திணையிய'லின் கருத்துகள்

## இன்ப ஒழுக்கத்தின் வகைகள்

(நாற்—1)

உலகத்தில் உயிரில்லாத பொருள்களிலிருந்து இன்பம் அடைவதைப் பார்க்கிலும் உயிர்ப்பொருள்களிற் சிறந்த மக்களின் நல்லியல்புகளில் அன்புவைத்து இன்பம் அடைவதே பொதுவாக உலக இன்பங்களில் மேலானதாகும்.*

தலைமைபற்றிக் காதலின்பம் இங்கே எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகின்றது†

பொதுவாக இன்பம் மூன்று வகைப்படும் எங்கும் எவர்க்கும் இம் மூவகையாலல்லாமல் வேறு இன்பம் என்பது இல்லை. அவற்றுள்

---

* 'நல்லார் இணக்கம்' இதனாலேதான் எந்நிலையிலும் விரும்பப்படுகின்றது.

†. பொருள் தேடும் ஒழுக்கம் எல்லார்க்கும் பொதுவேயாயினும், அதைப்பற்றிப் பேசும் பொருட்பாலில் தலைமைபற்றி அரசவொழுக்கமே நூல்களில் எடுத்துக்காட்டப்பட்டமைபோல

'ஒருவர், தான்மட்டும் மற்றவர் நலங்களில் அன்புகொண்டு தன்னளவில் அதனால் உண்டாகும் இன்பத்தை அடைதல்' என்பது ஒரு வகை;* இனி, 'இருதிறத்தாரும் ஒருவரொருவர் நலங்களில் ஒத்த அன்புகொண்டு அதனால் உண்டாகும் இன்பத்தை ஒத்த அளவாக ஒருங்கு அடைதல்' என்பது மற்றொரு வகை.‡ இனி 'இருதிறத்தாருமே ஒருவரொருவர் நலங்களில் அன்பு கொள்வதாயினும், அஃது ஒத்த அன்பாய் அமையாமல் அதனால் உண்டாகும் இன்

---

* இது கைக்கிளை. அதாவது ஒரு மருங்கு காதல். கை என்பது ஒரு பக்கம்; கிளை என்பது கிளைத்தல்'; 'ஒருவருள்ளத்தில் உண்டாகும் இன்பம்' என்பது பொருள். நச். கருத்தும் இது. அவர் இதனை 'ஏழாவதன் தொகை' என்று கூறுகின்றமை காண்க.

‡ ஐந்திணை என்பது இது. அதாவது ஒத்த காதல்; ஐந்து வகையான ஒழுக்கமாய்ப் பிரிந்து நிகழ்ந்து அவ்வின்பத்தை மேன்மேல் முதிரச்செய்தலின் இப் பெயர் பெற்றது.

பத்தை ஏற்றத்தாழ்வாய் அடைதல்' என்பது இன்னொரு வகை†.

இம் மூவகை இன்பங்களுள்ளும் நடுவிலே சொல்லப்பட்ட 'ஒத்த அன்பால் உண்டாகும் இன்பம்' என்பது, ஐந்து வகையான ஒழுக்கங்களாய் நிகழ்ந்து அவ்வின்பத்தை முதிரச்செய்யும். அவை இன்னவை என்பது மேலே கூறப்படும். ஆதலால் இந்த ஐந்துவகையான ஒழுக்கங்களோடு இங்கே முன்னும் பின்னுமாகச் சொன்ன இரண்டு ஒழுக்கங்களுஞ் சேர இன்பவொழுக்கங்கள் ஏழாயின. இவை காரணமாகவே எல்லார்க்கும் புறவொழுக்கங்கள் நிகழ்த

---

†. இது பெருந்திணை. அதாவது ஒவ்வாத காதல்; "பெருந்திணை, நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்குங் குறைந்தும் வருதல்" என்பர் இளம். தொல், அகத், 1; பெருந்திணை என்பது இழிவினால் வந்த பெயர். முரட்டு ஒழுக்கம் என்பது கருத்து. ஆசிரியர் "ஏறிய மடற்றிறம்" (அகத், 51) என்னும் நூற்பாவிற் கூறிய பெருந்திணையியல்புகள் முரட்டியல்புகளேயாதல் கண்டுகொள்க.

லால், இவ்வின்ப வொழுக்கங்களே முதன்மை பாக வைத்து முதலிற் சொல்லப்பட்டன.*

உயர்ந்த இன்பம் இன்னதென்பதும்,

அதனை அடைதற்குரிய ஏதுக்களும்.

(நூற்பா 2-முதல் 19-வரையில்.)

அவற்றுள், நடுவே சொல்லப்பட்ட ஐந்துவகையான ஒழுக்கங்களேசிறப்புடையன. இதனால், இவைமட்டுமே 'அக' மெனவுங் கூறப்படும்.† இந்த ஐந்து வகையான ஒழுக்கங்களுள் ஓர் ஒழுக்கம் மற்ற நான்கு ஒழுக்கங்களுக்கும் முதன்மையானதாய் அந்நான்கும் முதிர்ந்து பேரின்பம் பயப்பதற்குப் பெரிதும் ஏதுவாகப் பொதுவாய்த் திகழ்கின்றது. இங்ஙனம் நடுநிலை

---

* 'முற்படக் கிளந்த' என்பதற்கு முதன்மைப்படக் கிளந்த என்று உரை கொள்க.

† நூற் 54-ல் ஆசிரியரே 'அகன் ஐந்திணை' என வழங்குதல் காண்க.

காட்டி நிற்கும் அவ்வொழுக்கம்* ஒன்று நீங்கலாக மிச்சம் நான்கு ஒழுக்கங்களுள் இன்னது இன்னது இந்த உலகத்தில் இன்ன இன்ன இடத்தில் நிகழும் என்று நிலம் பகுக்கப் பட்டதாயிருக்கின்றது.† (நூற்—2).

உயிர்களுக்கு நிகழும் இன்பம் உலகப் பொருள்களால் நன்கு முதிர்ச்சி யடைகின்றது சான்றோர் அவ்வியல்புகளைத் தம் பாடல்களுள் நன்றாய் விளக்கியிருக்கின்றார்கள். அவற்றை ஆராயும்போது பலபடியான இன்பவுணர்வுகளும் அவை தோன்றுவதற்கும் உருவாவதற்கும் முதிர்வதற்கும் ஏதுவாயிருக்கும் பலவகையான உலகியல்புகளுமெல்லாம் நமக்குப் புலப்

---

* 'நடுவணது' என்னும் பாலை. 'நடுவணது' என்பது. இங்குப் பொதுவானது என்னும் பொருளில் வந்தது; 'நடுவுநிலைத் திணை' யென்ப மேலும்; (அகத், 9). 'நான்கற்கும் பொதுவாகிய பாலைத் திணை' யென்னுங் கருத்தில் நச். உரையெழுதியிருத்தலும் நினைவுகூர்க.

† 'பாத்திய பண்பே' என்பதன் பொருள்.

படுகின்றன. ஆயினும் அப் பொருட் பரப்புகள் அவ்வளவையும் மூன்று வகையான தலைப்புகளில் அடக்கி ஆராயலாம். முதல் தலைப்பு: இன்பம் எழுவதற்கு அடிப்படையாயுள்ள பொருள்கள்.* இரண்டாவது தலைப்பு: அங்ஙனம் எழுந்த இன்பம் நன்றாய்க் கருக்கொள்வதற்கு ஏதுவாயுள்ள பொருள்கள்.† மூன்றாவது தலைப்பு: அங்ஙனம் இருவகையினாலும் எழுந்து கருவாகி நின்ற இன்பம் மேன்மேல் முதிர்ந்து பயன் தருதற்குரிய ஒழுக்கங்கள்.‡. இந்த

---

* இவை 'முதற் பொருள்'; 'முதல்' என்பதற்கு 'அடிப்படையான' என்று உரை கூறுக.

. இவை கருப்பொருள்; 'கருவான பொருள்' என்று உரைத்துக் கொள்க.

. இவை உரிப் பொருள்; உரிய பொருள் என்பது உரை.

முதற்பொருள் கருப்பொருள் என்பவற்றில், 'பொருள்' என்பது உலகுயிர்களையும், உரிப்பொருள் என்பதில் அச் சொல் ஒழுக்கத்தையும் உணர்த்தும்.

மூன்று நிலைப்புகளை ஆராய்வதற்குப் பொருத்த முள்ளனவாயிருக்கின்றன.* [நூற்—3].

இனி, இன்பம் எழுவதற்கு அடிப்படையா யுள்ள பொருள்கள் உலகத்தில் இரண்டு; அவை நிலமும் காலமும்; அவ்விரண்டின் இயல்புகளே† நமக்கு இன்பந் தோன்றுவதற்கு அடிப்படையான ஏதுக்களாயிருக்கின்றன (நூற்—4). முதலில் நில இயற்கைகள் மட்டும் எடுத்துக்கொள்வோம். உலகத்தில் இன்பந்தரும் நில இயற்கைகள் நான்கு வகைப்பட்டுத் தோன்றுகின்றன.‡

* "முறை சிறந்தனவே" என்பதற்கு உரை.

† "இயல்பெனமொழிப" என்றதன் கருத்து.

‡ பாலை நிலம்' இன்பந்தருங் கவர்ச்சியான நிலம் அல்லாமையால் ஆசிரியர் அதனை நிலவகைகளிற் சேர்க்கவில்லை. 'பாலைத் திணை' என்று ஒழுக்கத்தில் மட்டுஞ் சேர்த்துக்கொண்டார்; ஏனென்றால், அது மற்ற நான்கு ஒழுக்கங்களும் நிகழ்தற்குத், தான் ஏதுவாய் நிகழ்ந்து காதலர் இன்பத்தை முதிரச்செய்தலின் என்பது. ஒழுக்கத்திற் சேர்க்கவே அதற்குக்

பச்சைப் பசேலென்று ஒரே பசும்போர்வை போர்த்தாற்போல் இலைகள் தழைத்துச் செடி-கொடிகள் நிரம்பிய பசுமையான நிலவகை ஒன்று. இது கான் நிலம். இங்கே இறைவனது பசுமையியல்பு* நன்ருய் விளங்குகின்றது.

ஞாயிறு செங்கதிர்கள் பரப்பி ஒரே செவ்வொளியை நாற்புறமும் வீசுதலால் இள நீலமேகங்கள் தழுவிய அழகிய மலைபடுக்குகள் பெருகிட்ட பொன்னிறமேனியாய் நிறங்கொண்டு கவர்ச்சிதோன்ற விளங்காநிற்கும் பொன்னிற நிலவகை மற்ருென்று. இது மலை நிலம். இங்

---

காலமுங் கூறினூர். செயலுக்குக் காலம் முதன்மையாதலின் என்க.

* இப் பசுமை யியல்பே மாயோன்; மாயோனுக்கு நிறம் பசுமை; "பைங்கண் மாஅல்" என்னும் பரிபாடல் அடியில் (3-82) வரும் 'பைங்கண்' என்பதற்குப் பரிமேலழகர் "பசிய உடம்பினையுடைய' என்று உரை கூறினமை நினைவு கூர்க. இருத்தலொழுக்கத்தில் மேனி பசத்தலுங் கருதுக.

நிலப் பாப்பில் இறைவனது பொன்னிற இயல்பு* நன்கு வெளிப்படுகின்றது.

நல்ல வெள்ளியை நீராய் உருக்கி நிலமெங்கும் ஊற்றினாற்போல வெள்ளை வெளேரென்று பளபளப்பாய் இனிய நீர்வளம் நிரம்பித் திகழும் வெண்ணிற நிலவகை இன்னொன்று. இது வயல் நிலம். இங்கே இறைவனது வளமாந் தன்மை† விளங்குகின்றது.

நெடிய அலைகள் நொடிதோறும் எழுந்து தோன்றி மறு நொடிதோறும் அழிந்து மறைவதாய், அதனாலான மணல்மேடுகள் அங்கங்குங் கரைதோறும் விளங்க, நீர் இருக்கும் அடையா

---

* இப்பொன்னிற இயல்பே, சேயோன்; சேயோன், செந்நிறமேனியன்; புணர்ச்சி யொழுக்கத்தில் உறுப்புச் சிவத்தலும் இங்கே கருதுதற்குரியது.

† இவ் வளமாந் தன்மையே வேந்தன் என்பது; வளமாந் தன்மையைப் 'போக' வியல்பு எனவுங் கூறுப; ஊடுதல் இன்ப வளத்தின் நிகழ்ச்சி; இவ்வளமாம் நிலையிலிருப்பவர் மேனி பளபளப்புக்கொள்ளுதலுங் கருதுக.

ளங்கள் காட்டிப் பலவகையான ஆக்க அளிப்பு அழிப்புகளையும் அவற்றின் நிலையாமைகளையும் நினைவுகூர்விப்பதான கருநிற நிலவகை வேறொன்று. இது கடல் நிலம். இதன்கண் இறைவனது செய்கைத்திறம்* விளங்குகின்றது.

என இந் நான்கு வகையான நிலங்களும் இன்ப முதிர்ச்சிக்கு ஏதுவான பலவகை உணர்வுகளை எழுப்பிவிடுவனவாயிருக்கின்றன † முத

---

* இச் செய்கைத் திறமே வருணன்; 'வருணம்' என்பது அலை; அலைக்கடவுள் என்பது பொருள். நெய்தலொழுக்கத்திற் கழிவிரக்கந்தோன்றி மேனி கருகுதலும் நினைவுகூர்க. நச். 'வருணன்' என்பதற்குக் 'கருங்கடற் கடவுள்' என்பர். இதனாலுங் கருநிறங் கொள்ளப்படும்

இங்ஙனங் கவர்ச்சியான பகுதிகள்கொண்டு மிகப் பழைய காலத்திலேயே நிலத்தை 'நானிலம்' என்று பாகுபாடுசெய்த தனிப் பெருமை நம் தமிழ்ச் சான்றோர்கட்கு உரியது. இவை தவிர இந் நிலவுலகத்தில் இவற்றினுங் கவர்ச்சியான வேறு பகுதிகளும் உண்டோ? இக்கால ஐரோப்பிய அறிஞர்களும் இயற்கை

விற் சொன்ன செடி கொடிகள் நிரம்பிய நிலம், தன்னிடம் வருவார் உள்ளத்தைத் தனது தழைத்த பசுமையாற் கிளர்ச்சிபெறச் செய்து அன்பு உணர்வை* எழுப்புகின்றது. இனி, இக் கான் நிலத்திலிருந்து மேல் ஏறி மலை நிலஞ் சென்றால் அங்கே உருகித் தெரியும் பொன்னிறவொளியால் உள்ளம் மிகவும் பிணிப்

---

யை இங்ஙனம் பகுத்து இன்புறுகின்றனர். See Prof. Bower's Article in *Nature*, 18th sep 1926.

* இது முல்லை; இச்சொல் கற்பு என்னும் பொருளில் வழங்கும்; (சிந், காந்தருவ, 194; நச். உரை) கற்பு என்றது அன்பின் வெற்றியேயாம். தலைவன் பிரிவில் தலைவி அன்பு வழுவாமல் இருந்து வெற்றி பெறுதலால், இதனை இருத்தலொழுக்கம் எனவுங் கூறுவாராயினர். "முல்லை சான்ற புறவு" (மதுரைக் காஞ்சி, 285) என்பதில் 'முல்லை' இப்பொருளில் வந்தது, நச்.; அன்பின் வெற்றி என்னும் இக் கருத்திற் புறப்-வெ-மாலையிலும் இச் சொல் பலபடியாக வந்து வழங்குதலும் நினைவு கூர்க.

புண்டு அணுக்கமான நட்பு உணர்வு* உண்டா கின்றது. இனி, ஏராளமான விளை நிலங்களும் நகரங்களும் மாட மாளிகைகளுமான நீர்வள முள்ள நாட்டுக்கு வந்தால் அதன் பளபளப் பான வெண்ணிற நீர்ப் பரப்பும் பிறவும் பல அரிய செயல் முனைப்புகட்கும் ஆராய்ச்சிகட் கும் இடந்தந்து நல்ல அறிவு நிலையைத்† தோற்

---

* இது குறிஞ்சி. குறுகுதல் என்பது இதன் பொருள் அணுக்கம் என்பது கருத்து. நட்பு, கூட்டம் என் பனவும் இது. தழுவுதல் தழிஞ்சியென வந்தாற்போ லக் குறுகுதல் குறிஞ்சியென வந்தது. "அழிபடை தட்டோர் தழிஞ்சியோடு" (தொல், புறத், 8 நச் உரை) என்பதில் 'தழிஞ்சி' தழுவுதற்பொருளில் வந்தமை காண்க.

† இது, மருதம். அறிவு முனைப்போடு கூடிய ஊடல் நிகழ்ச்சிகளால் இன்பம் முதிர மருவுவது மருதமா யிற்று; இதனால் மண நிகழ்ச்சிகளில் தொடர்பாக மருவு, மருமகன், மருமகள் முதலிய பெயர்களும், அதனால் அச் சொல்லுக்கு 'மணம்' என்னும் பொ ருளும் வழங்குவவாயின

றுவிக்கின்றன. இனி, அதனை அடுத்துள்ள மணல்மேடுகள் நிறைந்த கரிய கடல்நிலஞ் செல்லுங்கால், அங்கே நிகழும் பல தலைபான நிலையாமைக் காட்சிகள் இரக்க உணர்வை* உண்டு பண்ணுகின்றன. (நூற்-5).

---

* நெய்தல்; உருகுதல் என்பது இதன் சொற்பொருள்; வெண்ணெய் உருகுதலாலேதான் 'நெய்' என்பதும் பெயராயிற்று. இங்கே 'இரக்கம்' என்பது உருக்கவுணர்வு.

நிலையாமை என்பது மலவிருளால் நிகழ்வதாதலின் அதனை நினைவூட்டுங் கடலிற் கருமை கலந்திருப்பது பொருத்தமாகவேயிருக்கின்றது; இறைவன் மலவிருளிற் கலந்து தொழில் புரிகின்றனாதலின், கருங்கடலிற் செயல் திறம் விளங்குகின்றது.

இங்கே நிலையாமை உணர்வு தோன்றுதலால் உலகத்தில் இன்பம் நிகழும் நேரம் சிறிதேயாதல் கண்டு அதனால் அந் நேரத்தின் அருமை தெரிந்து அதனை நன்கு நுகரச் செய்தலின் இந்த

இனிக், கால இயற்கைகளும் பலவகைப்பட்டு இன்பம் எழுப்புவனவாயிருக்கின்றன. அவற்றுள், பருவ காலங்களின்* வேறுபாடுகள் நன்றாய் விளங்கித் தெரிகின்றன. ஓர் ஆண்டுக்கும் மற்றோர் ஆண்டுக்கும் அங்ஙனம் வேறுபாடுகள் விளங்கித் தெரியவில்லை. சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டுந் தோன்றுகின்றது. இதற்கு அடுத்த ஆண்டும் இங்ஙனமே தோன்றும். ஆனாற், பருவ காலங்கள் அங்ஙனம் ஒன்றுபோல் நிகழ்வதில்லை. மழை காலம்போல் வெயிற் காலம்

---

இரக்க உணர்ச்சியும் இன்பத்தை முதிர்விப்பதேயாம்.

கான் நிலத்தில் இறைவன் பெண்மையும், மலை நிலத்தில் அவன் ஆண்மையும், வயல் நிலத்தில் அவன் வளமும், கடல் நிலத்தில் அவன் செயலும் மிகுதியாகக் கண்டு தமிழ்மக்கள் இன்புற்றனர் என்க.

* இது பெரும்பொழுது; பருமையான காலமாதலின், பருவகாலம், பருவம் எனப்பட்டது.

இருப்பதில்லை. இரண்டின் இயற்கைகளும் வேறு வேறாயிருக்கின்றன. ஆகையால் இப் பருவகால வேறுபாடுகளை உணர்ச்சியைப் வேறுவேறாய் எழுப்பும் இயற்கைகள் வாய்ந்தனவாயிருக்கின்றன.

இனி இதற்கு அடுத்தபடி காலை மாலை முதலான நாட் காலங்களும்* இங்ஙனம் வேறுவேறான இயற்கைகள் வாய்ந்தனவாய் அவற்றிற்கேற்ப உணர்ச்சியை வேறுபடுத்துவனவாயிருக்கின்றன. அவற்றுள், கார்காலத்து மாலைப்பொழுது கான் நிலத்தில் நல்ல அன்புணர்ச்சியை எழுப்பக் காண்லாம்.† குளிர் காலத்து நள்ளிராப் பொழுது மலை நிலத்தில் அணுக்கமான நட்புணர்வை எழுப்புகின்றது.‡ (நூற்–6). இ

---

* சிறுபொழுது; பெரும்பொழுது 'பருவம்' எனவும் சிறுபொழுது 'பொழுது' எனவும் வழங்கும். (இளம், உரை காண்க; நூற்-12)

காரும் மாலையும் முல்லை;

குறிஞ்சி கூதிர் யாமம்

தனை முன்பனிப் பருவத்து வைகறைநேரமும்* எழுப்பும். (நாற்-7). முன்பனி பின்பனிப் பருவங்களின் விடியற்காலமும் காலைநேரமும் வயல் சூழ் நகரத்தில் நல்ல அறிவுநிலையை உண்டாக்குகின்றன. பிற்பகல் நேரம் கடல் நிலத்தில் இரக்கவுணர்வை எழுப்புதல் காணலாம். (நாற்-8)

ஒத்த அன்பால் உண்டாகும் இன்ப ஒழுக்கங்கள் ஐந்துவகையாய் நிகழ்கின்றனவென்றும், அ

---

*. முன்பனிப் பருவம் என்றமையால் அதற்கு இனமான சிறுபொழுதுங் கொள்ளப்பட்டது. இங்ஙனமே பாலைக்குப் பின்பனி நேரமுங் கூறினமையால் அதற்கு இனமான சிறுபொழுதுங் கொள்ளப்பட்டது. எனவே, மருதத்துக்கு வைகறுவும் விடியலும், நெய்தலுக்கு எற்பாடுங் கூறினமையால் அவற்றிற்கு இனமான பெரும் பொழுதுகளுங் கொள்ளப்பட்டன. இவற்றை அங்கங்குங் கண்டுகொள்க. இலக்கியங்களில் வேறு முறையாய் வரின் அவற்றைத் திணைமயக்கமாகக் கொள்க. "திணைமயக்குறுதலும்" என்பதனுல் இது முடிக்கப்படும். (அகத், 12)

வற்றுள் ஓர் ஒழுக்கம்* மற்ற நான்கு ஒழுக்கங்கட்கும் பொதுவாய், அவற்றை நன்கு முதிரச் செய்வதாய், நிகழுமென்றும் முன்னே சொன்னோம். அன்பு நட்பு அறிவு இரக்கம் என்னுந் தலையான நான்கு உணர்வுகளும் அருள் காரணமாக நிகழின், அவை நன்கு முதிர்ந்து இன்பங் காட்டும். அருள் நினைவு யார்க்கும் பிரிவினால் வலுப் பெறுகின்றது. ஆகலாற் பிரிவு ஏதுவாக நிகழும் அருள் நினைவு† இன்ப ஒழுக்கமாகிய அ

---

* நடுவு நிலைத் திணை.

†. இது பாலை; பால் என்பது பிரிவு. 'பாலை' யென்பது பிரிவு ஒழுக்கம். "பாஅலஞ்செவி" என்னுங் கலியில்(5) 'பால்' என்பதற்குப் பகுதி யென்று நச். உரைத்தமை நினைவுகூர்க; இவரே வேறோரிடத்திற் "பாலை என்பது ஒன்று பிரிந்து பலவாகிய கூற்றின்மேற்று.................................."குணங் காரணமாய்ச் செம்பால் செம்பாலையாயினாற் போல நின்றது" என்று உரைத்ததுங் காண்க. (அகத், 13-உரை)

கத்திணையில் மிகச்சிறந்ததாய்த் திகழ்கின்றது.* பிரிவினால் நேரும் இவ் வருளுணர்வை வேனிற் பருவத்து நடுப்பகல் நேரம் நன்கு எழுப்பவல்ல தாயிருக்கின்றது. (நூற்-9). பின்பனிக் காலத்துக் காலை நேரத்துக்கும் இவ் வியல்பு உண்டு. (நூற்-10).. அருளுணர்வை எழச்செய் யும் பிரிவொழுக்கம் பனி நீங்கிய வேனிற் காலத் தில் நிகழ்தல் இயல்பென்பது இதனால் தெரிகின் றது. பிரிவு வேனிலில் நிகழுமாயினும் அப் பரு வத்தின் முன் பருவமாகிய பின்பனிப் பரு வத்திலேயே அப் பிரிவின் உணர்ச்சி உள்ளத் தளவாகவேனும் நிகழ்ந்துகொண்டிருக்கும். அ தாவது, அடுத்துவரும் வேனிலிற் பிரியவேண் டும் என்று எண்ணிக்கொண்டிருத்தல். பின்ப னிப்பருவத்தில் அங்ஙனம் உள்ளத்தளவாய் எண்ணிக்கொண்டிராமல், ஒரோவொருகால் அப்

---

*. அகத்திணையியலிற் பாலையை மட்டும் ஆசிரியர் விரித்தோதியதற்கு இம் முதன்மையும் ஒரு காரண மாம்.

பிரிவு அப்போதே செயலில் நிலையாக* நிகழ்வ தாயினும் அதற்கும் அப் பின்பனிக்காலம் கொள்ளப்படும் என்க. பிரிவு நிலத்தின் வழியாகத் தேர்களிற் பிரிதல் என்றும், கடலின் வழியாக மரக்கலங்களிற் பிரிதல் என்றும், இருவகைப்படுமாதலால், கடல்வழியாகப் பிரிதற்கும் பின்பனிக்காலம் உரியதாகும் என்பது இதனால் அறியப்படுகின்றது [நாற்-11].

இனி, இன்ன உணர்ச்சி தோன்றுவதற்கு இன்ன நிலமும் இன்னகாலமும் ஏதுவாயிருக்கின்றன என்று மேலே வரையறை செய்து காட்டப்பட்டிருக்கின்றது. அதுவே பொருத்தமாம். ஆயினும், இவற்றுட் காலம் மட்டும் மாறியும் நிகழக் காண்கின்றோம். குளிர்காலத்து நள்ளிராப்போது மிகவுங் குளிர்செறிந்து நிற்கின்றது. ஒரோவொருகால் வேனிற்காலத்து இராநேரங்களிலும் மிக்க மழைபெய்து அதனால் மிக்க குளிருண்டாதலுங் காண்கின்றோம். இதனால்,

---

* "நிலைபெறத் தோன்றினும்" என்பதன்பொருள்

குளிர்காலத்து நள்ளிராப்போதில் உண்டாகக் கூடிய அணுக்க நட்புணர்ச்சி வெயிற் காலத்து நள்ளிராப்போதிலும் உண்டாகுமன்றே? ஆகலின், ஒரு காலத்துக்கு உரிய உணர்ச்சி மற்றொரு காலத்தில் நிகழ்தலும் நேரக் கூடுமென்று தெரிகின்றது*. இங்ஙனம் நேர்வது இயற்கையே என்று சான்றோரும் அதனை நீக்காது தழுவிப்பேசுவர்†. இனி ஒரு கால இயற்கையில் மற்றொரு கால இயற்கை இங்ஙனங் கலப்பது போல் ஒரு வகை நிலத்தில் மற்றொரு வகை நிலம் பெயர்ந்து போய் ஒன்று சேர்வதென்பது இயற்கையில் நிகழக் கூடியதன்று என்பதும் நினைவில் வைக்க வேண்டும். (நாற்--12). இனி மூன்றாவது தலைப்பில் வரும் 'இன்ப வொழுக்கங்கள்'‡ என்பனவும் ஒன்றில் மற்றொன்று நிகழ்தற்குரியன அல்ல. இவை தவிர, மற்றவை

---

* இதுபோல்வன திணை மயக்கத்தில் அடங்கும்.

† "கடிநிலை யிலவே" என்பதன் பொருள்

‡ உரிப்பொருள்கள்.

யெல்லாம்* ஒரோவொருகால் ஒன்றற்குரிய இடத்தில் மற்றொன்று கலந்து வெவ்வேறு உணர்வுக்கு இடஞ்செய்து நிற்றலும் உண்டென்று கொள்ளவேண்டுமென்க. [நாற்-13].

மூன்றாவது தலைப்பில் வரும் அவ் வின்ப வொழுக்கங்களாவன: ஒருவரையொருவர் கூடுதல்; எப்போதும் ஒரே இடமாயில்லாமல் ஒருவரையொருவர் பிரிந்து மீளக் கூடுதல்; ஒருவர் பிரிந்தபோது மற்றவர் அவர் அருமைகளை நினைந்து நினைந்து நெகிழ்ந்திருத்தல்; ஒருவர் ஒருவர் நலங்களை விரும்பி நிற்றல்; பிரிந்தவர் மீளக்கூடும்போது தம் அருமை புலப்படுத்தி நிற்றல்; என்பனவாம்.† இவை நிகழ்தற்குக் காரணமாய் நிகழும் நினைவு குறிப்பு முதலாயினவும்‡ இதில் அடங்கும். இவை முறையே நட்பு அருள் அன்பு இரக்கம் அறிவு முதலான மெல்

---

* காலமுங் கருப்பொருள்களும்.

† இவை முறையே புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவாம்.

‡ நிமித்தங்கள்.

லிய உணர்வுகட்கு இடந்தந்து எல்லாம் இன்ப வுணர்வை ஒருங்கு முதிரச் செய்வனவாகும்: [நூற்-14]. தமது இருப்பிடத்தை விட்டு வேறோரிடத்துக்கு இருவரும் பிரிந்துபோக நேர்ந்தாலும், அல்லது தலைவியைவிட்டு நீங்கித் தலைவன் மட்டும் பிரிய நேர்ந்தாலும் இவற்றையும் பிரிவு ஒழுக்கமாகவே கொள்ளுதல்வேண்டும். [இப் பிரிவு, உறவினர் தமது காதலன்புக்கு இடையூறாயிருந்தால், தலைவன், தன் தலைவியின் விருப்பத்துக்கும் அவள் தோழியின் விருப்பத்துக்கும் இணங்கி அவளை யாரும் அறியாமல் உடன்கொண்டு செல்லுதலையும்* தான்மட்டுஞ் சிலகாலந் தலைவியைப் பிரிந்து தனியாயிருத்தலையும்† குறிக்கின்றது.] இவை எங்கேனும் ஒரோவோரிடத்தில் அருமையாக நிகழும்‡ [நூற்-15.]

---

* உடன் போக்கு.

† ஒருவழித் தணத்தல்.

‡ 'ஓரிடத்தான' என்பதன் பொருள்;

இவை பிரிவு ஒழுக்கமாதலால், வேனிற் காலமே இவற்றிற்குக் காலம். இங்ஙனந் தமது இருப்பிடத்தை விட்டு வேறோரிடத்துக்குப் பிரிந்துபோகும்போது இருவரும் ஒன்றாய்ப் போக நேர்ந்தாலும்* அது கூடுதலொழுக்கமாகாது. ஏனென்றால் அவர்கள் உள்ளத்தில் அப்பொழுது கூட்ட உணர்ச்சியைவிட எங்கோ பிரிந்துபோவதுபோலப் பிரிவுணர்ச்சியே நிகழும். இதுபோலவே முதன்முதல் இவர்கள் கூடிய கூட்டத்தில்† தாம் ஒருவரையொருவர் கண்ட காட்சியும்‡ எங்கோ தனியிடத்திற் பிரிவு உணர்ச்சியோடு நிகழ்ந்தது. ஆகலால் இவ்விருவகையும் நிகழ்ந்தகாலமும் வேனிற் காலமாகவே கொள்ளவேண்டும். ஏனென்றால், வேனிற் காலமே அருளுணர்ச்சியின் பிரிவு ஒழுக்கத்துக்கு ஏற்றதாதலின் என்பது [நாற்-16].

---

* 'கலந்த பொழுதும்' என்பதன் பொருள்.

† இயற்கைப் புணர்ச்சியில்.

‡ 'காட்சியும்' என்பதன் பொருள்.

இங்ஙனமாக இன்ப வொழுக்கத்தை எழுப்புதற்கு அடிப்படையாயுள்ள பொருள்கள், நிலமுங் காலமும் என்னும் இருவகைகளேயாகும் [நூற்-17]

இதுகாறும், முதல் தலைப்பின்* விளக்கம் முடிந்தது. இம் முதல் தலைப்பை விளக்கும்போதே மூன்றாந் தலைப்பாகிய† 'இன்ப வொழுக்கங்கள்' என்பனவும் இடையே விளக்கப்பட்டன.

இனி, எழுந்த இன்ப உணர்வுகள் நன்றாய்க் கருக்கொள்வதற்கு ஏதுவாயுள்ள பொருள்களையே ஆராயவேண்டும். இவையே இரண்டாந் தலைப்பில்‡ நின்றவை. இவை ஒவ்வொரு நிலத்திலும் அந்தந்தக் காலத்துக்கு ஏற்றவாறு

---

*. முதற் பொருள்.

†. உரிப்பொருள்.

‡ கருப்பொருள்; 'நிலத்திற், காலத்துக் கேற்பத் தோன்றி உருவாகும் பொருள்' என்பது உரை. கருவாதல், தோன்றுதலன்று; தோன்றி உருவாதல் என்க. உரையாசிரியர்கள் இதற்குத் 'தோன்றுத'

தோன்றி இன்பவுணர்வை உருக்கொள்ளச் செய்வனவாம். அவையாவன: தெய்வம்,* உணவு, விலங்கு, மரம், பறவை, மேளம், தொழில் இன்னிசை முதலியனவைகளும் இவைபோல உள்ள பிற பொருள்களுமாம். மலர்கள்† நீர் நிலைகள் முதலியவற்றை இவைபோலக் கொள்ளலாம் [நூற்-18]

இவற்றுள்ளும் ஒரு நிலத்துக்குரிய பூக்கள் பறவைகள் முதலியவை மற்றொரு நிலத்துக்கு

---

லென்று கூறுமிடங்களிலெல்லாம் இதுவே கருத்தாகக் கொள்ளப்படும். "நிலமுங் காலமும் பற்றி வருவன கருப்பொருள்கள்" என்று இளம். (நூற்-18) உரைப்பதும் நினைவுகூர்க.

* தெய்வமென்றது, தெய்வ வழிபாட்டு முறையை எனக்கொள்க. நச். கருத்தும் இது; நூற், 5-ன் உரை காண்க.

† "எந்நில மருங்கின் பூவும் புள்ளும்" (நூற், 19) என்று ஆசிரியரே மேலுங் கூறுதலால், அவர்க்குப் பூ முதலியவற்றைக் கருப்பொருளாகக் கொள்ளுதல் கருத்தேயாம்

வந்து அந்நிலத்துப் பொருள்களோடு கலந்து நிற்கக் கூடும். வந்த நிலத்திலேயே அவை நிலை யாயிருந்து அந்த நிலத்தியல்புக்குங் கால இயல் புக்கும் ஏற்ப வளர்ந்துவிடுமானல், அவை, வந்த நிலத்தின் பொருள்களாகவே யிருந்து, அந் நிலம் பொழுதுகளால் எழுந்த உணர்ச்சியை மேலும் உருப் பெறச் செய்தற்குப் பயன்படும். ஏனென்றால், அவை, தமக்கே உரிய நிலத்தினி யல்புக்கும், காலத்தினியல்புக்கும் ஏற்ப வளரா மையால் என்பது [நாற்-19].

என்று, இதுகாறும் இன்ப வுணர்வை எழுப் பும் 'நிலம்' 'பொழுது'களும், அதனை உருக்கொ ளச் செய்யும் 'தெய்வம்' 'உணா' 'விலங்கு' முதலிய பிற பொருள்களும், அதனை மேலும் முதிரவைத்துப் பயன்தரும் 'கூடுதல்' 'பிரிதல்' முதலான இன்ப வொழுக்கங்களுமென எல் லாம் மூன்று தலைப்புகளால் ஆராயப்பட்டன. இம் மூன்று வகைகளும் இன்பவொழுக்கத் துக்கு இன்றியமையாத இயற்கைக் கருவி களாகும்.

## இன்ப வொழுக்கத்துக் குரிய மக்கள் நிலைகள்

[நூற்-20 முதல் 24 வரையில்]

நிலங்கள் பலவகைப்படுதல் மேலே காட்டப் பட்டது. ஒவ்வொரு நிலத்திலும்* உயிர்வாழும் மக்கள் ஒவ்வொரு வகையா யிருப்பார்கள்.

ஒவ்வொரு வகையார்க்கும் வேறு வேறு பெயர்கள் உண்டு. அப் பெயருள்ளவர்கள் அந்தந்த நிலத்திலேயே நிலையாயிருந்து உயிர் வாழ்ந்து வருவார்கள். அவர்களில் மேன்மக்களாயிருப்ப வர்கள் வாணிபம் முதலான அலுவல்களின் மேல் வேறு நிலங்களுக்குச் சென்று திரும்புதலும் உண்டு. ஆயினும், 'இன்ன நிலத்துக் குடிமக்கள் இவர்கள்' என்று கூறும்படி அவரவர் நிலத்தின் பெயரே அவர்கட்கு நிலையான பெய

* நிலம், திணை யென்று வழங்கப்படும்; "திணைதொறும் மரீஇய திணைநிலைப்பெயரே" (அகத், 20) என்பதிற் காண்க

ராய் வழங்கும்.* ஆகலால் இவர்களை நிலமக்கள் என்று சொல்லுதல் பொருந்தும். இவர்கள் பெயர் அந்த அந்த நிலம் முதலியவற்றின் பெயராலும்,† அவ்வந் நிலத்து நிகழுந் தொழிலாலும்‡ அமைந்திருக்கும் [நாற்-20].

ஆயர், வேட்டுவர் முதலியவை கான் நிலத்தில் உயிர்வாழும் நிலமக்களில் ஆண்மக்கள் பெயராகும்.‖ இவர்களில் அந்நிலத்து ஆட்சியுரிமை பூண்டு தலைமக்களாய் விளங்குவோரும் உண்டு§. இவர்களைத் தலைமக்கள் என்று சொல்

---

* 'திணை நிலைப் பெயர்' என்பதன் கருத்துகள்.

'கானவர்' 'குன்றுவர்' முதலானவை நிலங்களின் பெயர்களால் உண்டானவை

'கோவலர்' 'வேட்டுவர்' முதலியவை தொழில்களால் வந்த பெயர்கள்.

'ஆண்மக்கள் பெயர்' என்றமையால் 'ஆய்ச்சியர்' 'வேட்டுவித்தியர்' எனப் பெண்மக்கள் பெயர்களும் வழங்குதலுண்டு என்பது பெறப்படும்.

'ஆவயின் வரூஉங் கிழவரும் உளரே' என்பதன் பொருள்

னுதல் பொருந்தும் [நூற்-21]. இனி, மலை நிலம், வயல் நிலம் முதலிய மற்ற நிலத்தவர்களைப்பற்றி ஆராயும்போது அவர்கள் பெயர்களும் அங்ஙனமே பலவகையாக* வெவ்வேறாய் அமைந்திருக்கின்றன. [நூற்-22.].

ஒவ்வொரு நிலத்திலும் இங்ஙனம் நிலமக்கள் தலைமக்கள் என்று கண்ணியமான இருவகைப் பெருங்குடியினர் இருப்பதோடு இவர்களுக்கு அவ்வப்போதும் இட்ட வேலைகள் செய்து கொண்டிருக்கும் குற்றேவல் மக்களும்† ஒவ்வொரு நிலத்திலும் இருப்பார்கள். இக் குற்றேவல் மக்கள் ஏதேனும் ஒரு கைத்தொழிலில் தலையான தொழில் திறம் உள்ளவர்கள் அல்லர். மேலே சொன்ன பெருங்குடி மக்களுக்கும் உலக நன்மைக்கும் தேவையான பலவகைக் கைத்தொழில்களும் செய்தற்கு வேறு பல குடி-

---

* 'ஆறு வகைய' என்பதன் பொருள். இளம். 'ஆன் அ வகைய' எனப் பிரித்து 'ஆன்' என்பதைச் சாரியையாகக் கொள்வர்

† அடியோர்;

கள் ஒவ்வொரு நிலத்திலும் உண்டு. அவர்கள் தாம் ஒவ்வொன்றிலுந் தொழில்திறம் உள்ளவர்கள் * இங்ஙனமுள்ள குற்றேவல் மக்களுக்குந் தொழிலாளர்களுக்கும் அவர்கள் மனமுவக்க வேண்டுவன உதவி, அவர்களை, முன்சொன்ன இருவகைப் பெருங்குடியினரும் ஏவிக்கொள்வர் இவ்வாறு ஒவ்வொரு நிலத்திலும் ஏவல் செய்வோரும்† அவரை ஏவிக்கொள்வோருமாய்‡ ஒருவருக்கொருவர் உதவியுந் துணையுமாயிருந்து அன்பும் ஒற்றுமையுங் கொண்டு இனிதாக வாழ்க்கை செலுத்தி வருவர்.

---

* வினைவலர். 'ஏவல் செய்வோர்' என்பவருள் அடியோரும் வினைவலரும் அடங்குவர் 'ஏவிக் கொள்வோர்' என்பவருள் கண்ணியமான பெருங்குடியினர் இருவகையோரும் அடங்குவர்; அவர், நிலமக்களுந் தலைமக்களுமாவர். இவர்கள் தொழில் செய்யாதவர்களுந் தொழில் திறம் அறியாதவர்களும் அல்லர். தாம் செய்யுந் தொழில்களுக்கே அடியோரையும் வினைவலோரையும் உதவியாக ஏவிக்கொள்வ ரென்க.

இவர்களுள் ஏவிக்கொள்ளுநும் இருவகைப் பெருங்குடியினரே* கண்ணியமானவர்களாதலின், அவர்களே, ஒத்த அன்பினால் நிகழும்

*'குடி' என்றது இஞ்ஞான்று சொல்லளவில் பிறப்பினால் கொள்கின்ற சாதியன்று; வாளா 'மக்கள் தொகுதியினர்' என்று குறிக்கும். இஞ்ஞான்று செயலளவிற் காணப்படுதல் போல ஏவல் செய்வார்க்குப் பிறப்பவன், சிறப்பினால் ஏவிக்கொள்வோனாயுந் திகழ்வான்; ஏவிக் கொள்வோர்க்குப் பிறப்பவன், திறமையில்லாமையால் ஏவல் செய்வோனாயும் இருப்பான்; அறிவு முதலிய சிறப்புகள்பற்றி உயர்வு தாழ்வுகள் கொள்ளப்பட்டனவேயல்லாமற் பிறப்பு பற்றி அல்ல. எல்லா வகையாரிடத்திலுங் கலந்தபடி உண்ணல் கலத்தல்கள் இருந்தன; தமிழ்மக்கள் அத்தனை பேரும் ஒரே சாதியினராகப் பண்டு ஒற்றுமையாயிருந்தனர்; களவியலில், ஒத்த குலத்தார் இருவர்க்கு ஒத்த அன்பு நிகழுமென்றது, பிறப்புப்பற்றிய குலமன்று; தமது அறிவு நிலை நாகரிக நிலை முதலியவற்றைப் போலவே அமைந்த மக்கள் தொகுதியினரில் அங்ஙனம் நிகழுமென்பது கருத்து. இங்ஙனம் பிறப்புப்பற்றிய சாதியில்லாமையே தமிழர் நாகரிகங்

சிறந்த ஐவகை இன்ப வொழுக்கத்தை நன்கு நடத்தி உயர்ந்த இன்பந் துய்க்கும் மேன்மக்களாய்ப் பெரும்பான்மையுந் திகழ்வர். ஏவல் செய்வோரான குற்றேவல் மக்களும் தொழில் வல்லோரும் அவ்வுயர்ந்த இன்ப வொழுக்கத்தை மேற்கொள்ளுதல் அருமையாயிருக்கும்.

ஆனால், அவ் ஏவல்செய்வோர் அவ் உயர்ந்த இன்ப வொழுக்கங்களுக்கு வேறாய்* ஒரு பக்க அன்பாலும்† ஏற்றத்தாழ்வான இருபக்க அன்பாலும்‡ நிகழும் எளிய இன்ப வொழுக்கங்களை நிகழ்த்துவோராயிருப்பர். ஆகலால், இன்ப வொழுக்கங்கள் பேசும்போது சான்றோர் அவர்களை முற்றும் நீக்கிப் பேசாமல் இவ் எளிய இன்ப ஒழுக்கங்களில் வைத்துப் பேசுவா

---

களில் முதன்மையானதென்க. இதனால் எல்லா நலங்களும் உண்டாம்.

* 'புறத்து' என்பதன் பொருள்.

† கைக்கிளை.

‡ பெருந்திணை.

ராயினர்* [நாற்-23]. இனி, ஏவிக்கொள்வோர் என்று மேலே குறிப்பிட்ட பெருங்குடியினரும் தம் நிலையில் தவறி ஒரோவொருகால்† இவர்களைப்போல் இவ்வெளிய இன்ப ஒழுக்கங்களில் வழுவிவிடுதலும் உண்டு [நாற்-24].

---

* "கடிவரை யில" என்பதன் பொருள்.

"ஏவன் மரபின் ஏனோரும்" என்னும் உம்மை யாற் சிறுபான்மை கொள்க. இங்ஙனம் ஆசிரியரே உம்மை கொடுத்துச் சிறுபான்மை உணர்த்தியிருத்தலின், தமிழகத்தில் ஒவ்வொரு நிலத்தின் நிலமக்களுந் தலைமக்களும் பெரும்பான்மையும் ஐந்திணை தழுவிய உயர்ந்த இன்ப வொழுக்கத்துக்கே உரியரென்பதும், ஆகவே ஐந்திணை யொழுக்கமே தமிழகத்திற் பெரும்பான்மையாய் நிகழ்ந்த தென்பதும் பெறப்படும். படவே, ஐந்திணையல்லாத பெருந்திணையே பெரும்பான்மையாய் நிகழ்ந்ததென்றும் அதனால் அதற்குப் 'பெரிய திணை' என்று பெயரும் அமைந்த தென்றும் உரையாசிரியர்கள் கூறுவது பொருந்தாமை கண்டுகொள்க

## இன்பம் மேம்படுத்தும் பிரிவொழுக்க முறைகள்

[*நூற்-25 முதல் 35-வரையில்*]

இனி, உயர்ந்த தன்மையாயுள்ள இன்ப வொழுக்கத்தை மேன்மேல் இனிது முதிரச்செய்யும் பிரிவொழுக்க வகைகள் கூறத்தொடங்கி, முதலில் இன்னார் இன்ன இன்ன அலுவல்கள்மேல் இன்னவாறு பிரிந்துசெல்வர் என்பதும் அதன் தொடர்பான வேறு சிலவும் இப்பகுதியில் ஆராயப்படுகின்றன. பிரிவு நேர்வதற்கு உரிய காரணங்களில் முதன்மையானவை மூன்று; அவை வருமாறு.

வாழ்க்கைக்கு இன்றியமையாத அறநூல்களும் பொருள் நூல்களும் இன்ப நூல்களும் வீட்டு நூல்களும் தமது கட்டிளம் பருவம் வரையில் தம் தாய்மொழியிலேயே மக்கள் பயின்றுவருவர். மணங்கூடிய பின்* பிறமொழி நாடுகளுக்குப் பிரிந்துபோய் அந் நாட்டு மொழி

* இப் பிரிவு, மணங்கூடிய பின்னரேயாதலின், இங்ஙனங் கூறப்பட்டது

கள் பயின்று அவற்றின் வாயிலாக அம்மொழி மக்களுக்குத் தம் மொழிக் கருத்துகளை அறிவித்து அவர்களை உய்விக்கவும், தம் தம் நாட்டு மேன்மையை அங்கங்கும் நிலை நிறுத்தவும்,* பிற நாட்டு நிலைகளையும் பிறமொழிக் கருத்துகளில் நல்லன உளவேல் அவைகளையும் மேன்மேல் தம் மொழிக்கண் கொண்டுவரவும் பிரிவு நேரும். அதற்காகப் பிறமொழிகள் கற்கப் பிற நாடுகட்குப் பிரிந்து செல்வர்.† இஃது ஒருவகைப் பிரிவு. இனி, அறிந்தோ அறியாமலோ பொது நன்மைகளில் மாறுபட்டு ஒழுகுவாரை அங்ஙனம் மாறுகாதவாறு செய்விக்கும் பொ

---

*. இறைய, நூற்-35-ன் உரையில் இக் கருத்துகள் காண்க.

†. தாய்மொழிப் பயிற்சிக்குரிய காலமும் பிறமொழிப் பயிற்சிக்குரிய காலமும் இதனுற் கண்டுகொள்ளப்படும்; இன்னும், பண்டு, பிறமொழிப் பயிற்சிகள் இருந்தமையும், அவை தாய்மொழிக்கும் பிறவற்றிற்கும் ஊனமில்லாத முறையில் நிகழ்ந்தமையும் அறியப்படும்,

ருட்டும் பிரிவு நேரும். இது மற்ருெருவகைப் பிரிவு. இனி, இருவர் மாறுபட்டு நின்ருல், வேருெருவர் அவர் மாறுபாடு நீக்கி வாழ்விக்கும் பொருட்டும் பிரிதல் நிகழும். இஃது இன்ருெரு வகைப் பிரிவு. தனக்கென வாழாமற் பிறர்க்கென வாழும் முறையிற் பிரியும் பிரிவுகள் இங்ஙனம் 'ஓதல்' 'பகை' 'தூது' என முதன்மையாய் மூன்றுவகைப்படுகின்றன. (நூற்-25). ஏனென்ருற், பிறர்க்கென வாழும் முறையிற் பிரிவு நிகழும்போதுமட்டுமே அது தூய அருளுணர்வு தந்து இன்ப வொழுக்கமாய் முடிகின்றது என்க.

அவற்றுள், ஓதுதல் பொருட்டுந் தூது பொருட்டும் பிரியும் பிரிவு முன்னே சொன்ன ஏவல்கொள்வோரான* உயர்ந்தோர்பால் நிகழ்வனவாம். (நூற்-26). இனிப் பகையின் பொருட்டுப் பிரியும் பிரிவு அவ்வுயர்ந்தோருள் அரசனிடத்தும் அவன் சார்பாளரிடத்தும்† நிகழும்;

---

* 'உயர்ந்தோர் மேன' என்பதன் பொருள்

'தன்ஞெடு சிவணிய ஏனோர்' என்பதன் பொருள்

(நாற்-27). மற்ற நிலங்களிலும் இவ் அரசன் சார்பாளர்களாய்ச் சிறப்பு மேவியிருப்பவர்களும் உண்டு.* அவர்கள் அங்கங்கும் அரசனைப் போற் செய்யுஞ் செயல்கள்† அக்கான் முதலான நிலங்களில் உள்ள நிலயாக்களின் வேறுபாட்டு முறைமைகளாற் பலவகையாகச் சீர் கெட்டுப் போதலும் நிகழும். அங்ஙனஞ் சீர் கெட்டுப் போனவற்றைச் செந்நிலையில் நிறுத்துதற் பொருட்டும், அவ்வந்நிலத்துச் சார்பாளர்கள் அங்கங்கும் ஏற்பாடு செய்திருக்கும் பொருள் வருவாய்கள் திரட்டப்படுதற் பொருட்டும் முன்னே சொன்ன அரசற்கும் அவன் சார்பாளர்கட்கும் மேற்காட்டிய பிரிவு நிகழும் என்பது(நாற்-28).

இங்ஙனம் மேலே சொல்லப்பட்ட‡ அரசனும் அவன் சார்பாளரும் அரசியல் காரணமாகச் செல்லும் பிரிவு முறைமை, ஒவ்வொரு நிலத்

* 'மேவிய சிறப்பின் ஏனோர்' என்பதன் பொருள்.

† 'படிமைய' என்பதன் பொருள்.

‡ 'மேலோர்' என்பதன் பொருள்.

திலும் ஏவல் கொள்வோ ரிருவகையர் ஏவல் செய்வோ ரிருவகையராக நால்வர்க்கும் உண்டு [நூற்–29]. எல்லா மக்கட் பிரிவினரும் அரசன் அலுவல் பார்ப்பாராதலால் அவரெல்லாரும் அரசன் காரணமாக வேற்றுநாடுகட்குச் செல்லுதல் உண்டு என்பது கருத்து. ஆனால், மன்னன் சார்பாளராய்த் தலைமை தாங்கிச் செல்லுதற்குமட்டும் அவனுக்கு அடுத்த* பெருங்குடியாளர் உரியர் (நூற்-30). இங்ஙனம் அவரவரும் தம் அலுவல்மேற் பிரிவொழுக்கம் மேற்கொள்ளும்பொழுது, அறம் பொருள் இன்பம் பற்றிய நூல்களிற் சொல்லியிருக்கின்ற முறைகள்படி காவமறிந்து முறைதெரிந்து பிரிவொழுக்கம் நிகழ்த்தும் வகைகள், அவருள் உயர்ந்தோரான பெருங்குடியினர்க்கு உரியன (நூற்–31). இனி, அரசன் நீங்கலாக ஏனையெல்லா மக்கட் பிரிவினர்க்கும் அவரவர் செயல்களிலும் ஆட்சித் தொழில் முறை† நிகழ்தலுண்டு.

* 'பின்னோர்' என்பதன் பொருள்.

† 'வேந்து வினை யியற்கை' யென்பதன் பொருள்

(நூற்—32). அது காரணமாக அவர்க்குப் பிரிவு நிகழும். அல்லாவிட்டால் அவர்கள் பிரிவு இன்ப நிகழ்ச்சிக்கு உரியதாயிராது. இனி, அரசனைப்போல் அவ் வாட்சித் தொழில் ஏதுவாகப் பொருள் பெறும் வகையிலும் வேற்று நிலங்கட்கு அவர்கள் பிரிதலுண்டு. ஆனால், அவர்களுள் ஏவல் கொள்வோரான உயர்குடியினர் ஒழுக்கத் தவறில்லாத முறையிற் பொருள் தேடுவர். [நூற்—33]

இம்முறையாக ஆடவர் வெளிநாடுகட்குப் பிரிந்து செல்லும்போது கடல்வழியாகச் செல்ல நேருமாயின், அப்போது மகளிரையும் உடனழைத்துச் செல்லுதல் வழக்கமில்லை. (நூற்—34). ஏனென்றால், அவர்கள் ஆடவர்போல் வெளிநாடுகட்கு அலுவல்மேற் செல்லும் இயல்பினரல்லர். மிக்க காமத்தில் உழலும்போது கூட மகளிர் வெளியே வந்து மடலேறுதலில்லை காண்க. ஆதலால் அவர்கள் வெளிநாடுகட்கு, அதுவும் அலுவல்மேற் செல்லும் நீரல்லர் என்க (நூற்-35)

## இன்ப வொழுக்கப் பேச்சுகள்

[நூற்–36 முதல் 45 வரையில்]

இனி, இத்தகைய பிரிவொழுக்கங்கள் யார் யாருக்கு எவ்வெவ் வகையான உணர்ச்சிகள் தந்து இவ்வின்ப முதிர்ச்சிக்கு ஏதுவாயிருக்கின்றன என்பதை அவரவர் பேச்சுகள் வாயிலாக ஆசிரியர் விளக்கக் கருதி அப் பேச்சு வகைகளும் பிறவும் இப்பகுதியில் வகுத்துக் காட்டுகின்றார். உணர்வு வகைகள் தெளிவாக விளங்குதற்குக் காதல் நிகழ்ச்சிகள் நல்ல எடுத்துக்காட்டுகளாகும்

ஒத்த காதலால் நல்லொழுக்கத்திற் சிறந்த இருவர் ஒருவரை யொருவர் எதிர்ப்பட்டு உயிருருகி நேயங்கொள்வர். இவரது உண்மை நேயத்தைப் பெண்ணின் தாய் தந்தையரும் பிறரும் அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்வதே பெரும்பாலாய் நிகழும். சிலர் தெரிந்துகொள்வதில்லை. தெரிந்துகொள்ளாமையோடு இவரது நேய வளர்ச்சிக்குந் தூய வுணர்ச்சிக்கும்

இடருஞ் செய்வர். இதனால், இவரிருவரும் ஒருவரை யொருவர் பிரிந்திருக்க இயலாதவராய்க் கடுந்துயர் உழப்பது கண்டு இவர்பால் அன்பும் இரக்கமும் மிக்க தோழி தன் தலைவியைத் தலைவன்பாற் சேர்த்து 'இவளை நின்னோடு அழைத்துச் செல்' என்று அவள் தாய் தந்தையர் தெரியாமல் அனுப்பியுதவுவள். அந்நிலையில் வேறு ஏதுஞ் செய்ய இயலாத தலைவன், தமது ஒழுக்கத்தைத் தூய்மையாகப் பாதுகாத்துக் கொள்ளுங் கருத்துடன் தன் அருமைக் காதலியைத் தன்னுடன் அழைத்துச் செல்வான். அந் நிகழ்ச்சி அவரிருவரையும் அன்பில் முன்னையினும் நன்கு குழையச் செய்து அவரது இன்பவுணர்வினைப் பின்னும் முதிர்விக்கும். இவர் நிலை இங்ஙனமாகத் தோழியின் வல்லமைப் பேச்சால் தன் பெண்ணின் பிரிவுணர்ந்த தாய்* மிக்க வருத்தங் கொண்டு அவளது அரிய கற்பொழுக்கத்துக்கு வியப்பு மேலிட்டவளாய்த் தனது அறியாக் குறைக்குப் பெரிதிரங்கி அப்

* நற்றாய்; என்றது ஈன்ற தாயை.

பெண் செல்லுங் கொடிய கான்வழியும் பிறவும் நினைந்து நினைந்து அவள்பால் மிக்க அருளுள் ளந் தோன்றப் பெறுவள்

அப்போது அவள் தன்னையும் தலைவனையும் தலைவியையுங் குறித்துப் பல்வகையாக எண்ணு வாள். பல நிமித்தங்கள் பார்ப்பாள். தற்செய லான நற்சொற்கள் கேட்டு நிற்பாள். தெய்வ நிகழ்ச்சிகள் கொண்டு ஆராய்வாள். தலைவி தன் அருமைக் காதலனுடன் பிரிந்து போனமை யால் தனக்கும் அவளுக்கும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் சென்ற கால நிகழ்ச்சிகள் மேலும் உண்டாகக் கூடிய நலங்கள் பொலங் கள் அஞ்சத்தக்கவைகள் முதலியனவெல்லாங் கருதுவாள். அப்போது தோழியினிடத்திலும் எதிர்ப்பட்டவர்களிடத்திலுமெல்லாம் தாய்க்கு இவைபற்றிப் பேச்சு நிகழும் (நாற்--36)

பெண்ணுக்கு வளர்ப்புத் தாய்மார்கள்* பலர் உண்டு. அவரெல்லாரும் பெண் சென்ற இடந்தேடி ஊர்க்கு வெளியே போய் வழிநில்

---

* செவிலித்தாய் முதலியோர்

மெல்லாம் பார்ப்பதுண்டு. பெற்றெடுத்த தாய் கூடத், தான் இருக்கும் ஊரின் புறஞ்சேரிகள் வரையிற் சென்று பார்க்கக் கூடும் என்பர் [நற்-37]. ஓர் ஊரிலேயே தலைவி தனது இல்லத்தினின்று நீங்கித் தன் தலைவனோடு அயலிடத்திற் சென்றிருந்தாலும் அதுவும் பிரிவாகவே கருதப்படும். [நற்-38]

இனி, இவ்வளவுக்குங் காரணமாயிருந்த தோழியின் அரிய உணர்ச்சிகள் மிகவுங் கூர்மையானவை. தலைவியினிடத்திலும் தலைவனிடத்திலும் தனக்கு உண்டான அருள் உணர்ச்சியினாலேயே அவள் இவ்வளவுந் துணிந்து செய்தாள். முதலில், தலைவன் கூட்டமில்லாமையால் தலைவி வருந்துந் துயர நிலையை எண்ணிப் பார்த்து, இனியும் சும்மா இருந்தால் தலைவிக்கும் அவள் காரணமாகத் தலைவனுக்கும் உற்றார் பெற்றார்க்கும் மூண்டு வர இருக்கும் பெருந் துன்ப நிலைகளை முன்னுணர்ச்சியோடு தலைவனுக்குச் சொல்லும்போதும், பின்பு அவனோடு தலைவியைப் போக்கும்போதும், வழி

விடும்போதும், அப்படி அனுப்பிவிட்டமையால் தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்கட்கும் அவள் பிரிவினால் உண்டாகுந் துன்பத்தை அருளுணர்வால் ஆற்றிக்கொள்ளும்போதும், கான் வழியே செல்லுந் தலைவன் தலைவியரை அறவோர் முதலியோர் எதிரிற்கண்டு அவர் உண்மையும் பொய்ம்மையும் ஆராய்ந்து துணிந்த துணிபினைத் தாய்க்குக் குறிப்பித்து, அதனால் அவள் தன் கருத்தோடு இணங்கி மனம் மாறிவரும் நிலைமை தெரிந்து தலைவியை மீண்டும் அழைப்பிக்க ஏற்பாடுகள் செய்யும்போதும், இதுகாறுந் துன்பம் மூண்டு நெஞ்சு வருந்தியிருந்த தாய்க்கு இனி அவ் வருத்தம் நீங்கும்பொருட்டு மேல் நடக்க வேண்டியவற்றைக்* கூறி அவளைத் துணிவுடன் நெருங்கி வற்புறுத்தித் தேற்றும் போதும் தோழியின் உணர்வு மிக்க கூர்மையும் அருமையும் வாய்ந்தனவாயிருக்கும். தலைவன் தலைவியர்பால் தனக்கெழுந்த அருட்டன்மையினாலேயே அவள் உணர்வுகள் இவ்வளவு

---

* 'ஒழிந்தது கூறி' என்பதன் பொருள்

மாட்சிமைப்பட்டு இத்துணை அருமைவாய்ந்தனவாயின. அந்நேரங்களிலெல்லாம் அருளோடு கூடிய* அரிய பேச்சுகள் தோழியின்பால் தோன்றும் [நற்--39]

இனிப், பிரிந்து சென்ற காதலர் இருவரையும் வழியிலே கண்டோர்க்கும் இதன் தொடர்பாகப் பேச்சு நிகழ்தல் உண்டு. 'மாலைப் பொழுது அணுகிற்று; வழியும் நல்லதாயில்லை; இவையிரண்டும் அச்சந் தரும்படி தோன்றி, அங்ஙனந் தோன்றும் மாறுபாட்டால் மேல் உண்டாக இருந்த தீங்குகள்† இவை' என்று அவற்றை அக் காதலர்க்கு எடுத்துக்காட்டுவர். இன்னும், தம் ஊரின் அருகாமையும் அவர்கள் போகின்ற இடத்தின் தொலைவும் பற்றி அன்பார்ந்த நெஞ்சத்தோடு அவர்கள் எடுத்துச் சொல்லுஞ் சொற்களும் உண்டு. சேர்ந்து

---

* 'ஒன்றித் தோன்றும்' என்பதன் பொருள்

† 'வழுவின் ஆகிய குற்றம்' என்பதற்கு, 'மாறுபாட்டால் மேல் உண்டாக இருந்த தீங்குகள்' என்று உரைத்துக்கொள்க.

செல்லும் அக் காதலர் சார்பில் விரும்பிய நெஞ்சமுள்ளவர்களாய் அவர்கள் செயல் பொருத்தந்தான் என்று கருதி, அவர்கள் நிலைக்கு இரங்கி, அவர்கள் கேட்டவைகளுக்கு விடை கூறி, அவர்களை மேலே செல்ல விடும்போதும் பேச்சு நிகழும். இனி அக் காதலர்களைத் தேடிக் கொண்டு பின் செல்லுஞ் செவிலித் தாயின் வருத்த நிலை கண்டு, 'நீங்கள் வருந்த வேண்டாம்; அவர்கள் அன்பின் நிலை சிறந்தது; அது முறைதான்; ஆதலின் நீங்கள் அவர்கள் சேர்க்கையைக் குலைக்க வேண்டாம்' என்று தடுத்துஞ் சொல்லுவர். சிலர், 'இன்ன விடத்திற் கண்டோம்; போய்ப் பாருங்கள்: அவளை அவனுக்கே மணஞ் செய்வியுங்கள்' என்று சொல்லி அவர்களை அவ்வழியே செல்ல விடுதலும் உண்டு. தொலைவான ஊர்க்குச் சென்று அங்கே மணம்புரிந்துகொண்டு வாழ்கின்றார்கள் என்று கேட்டபோதும், அவர்கள் திரும்பிவந்திருக்கின்றார்கள் என்று கேட்டபோதும் அவர்கள்பாற் பேச்சு நிகழ்தலும் உண்டு கண்டோர்க்கு இங்

னவையாகவெல்லாம் அக் காதலர் தொடர்பிற் பேச்சு நிகழுமென்க (நூற் 40).

இனித் தலைவனுக்கும் பலவகையாகப் பேச்சு நிகழ்தல் கொண்டு அவன் உள்ள நிலைகளும் பிற பழக்கங்களும் நன்கு தெரிந்துகொள்ளலாம். தங்கள் கருத்தோடு இசையாத சுற்றத்தாரிடை யிலும், தலைவியை உடன் அழைத்துப்போக அவள் மென்தன்மைக்குப் பொருத்தமாயில் லாத காலத்திலும், அப்படியே பொருத்தமாயில் லாத வழி நிலத்திலும், தங்கள் கருத்துகளுடன் முற்றும் இணங்கிய தோழியோடு ஆராய்ந்து தலைவியை உடன்கொண்டுபோகத் தீராப்புரி யாய்த் துணியும்போதும், அல்லது இன்னுஞ் சிறிது பொறுப்போமென்று கருதித் தலைவியை அவள் இல்லத்திலேயே விட்டுச்செல்லும்போ தும், இனித், தலைவியை அவன் உடனழைத்துக் கொண்டு செல்லும்போது இடைவழியில் அத் தலைவியின் சுற்றத்தார் தேடிச் சென்று அவளை மீட்கையில் அதற்கு அவள் வருந்திக், கற்பொ ழுக்கத்தோடு கூடிய அலராகலின், அதனைப்

பொருட்படுத்தாமல் தன் தலைவன் பக்கலிற் சாரும்போதுந் தலைவனுக்குப் பேச்சு நிகழும்.

இனித் தலைவன், பொருள் ஏதுவாகப் பிரியும் போது அவன் உள்ளம் பல வகைகளால் தடுக்கப்படும். 'மக்களுக்கு வாழ்நாள் சிறிதாயிற்றே, ஆதலால் உடனே பொருள்தேடிக்கொள்ள வேண்டும்' என்று எண்ணித் தலைவன் தன் தலைவியைப் பிரிய முனைந்தால், அவர்கள் இளமையின் அருமை இன்பவுணர்ச்சியை முறுகுவித்து இடைநின்று தடுக்கக்கூடும். மிக்க முயற்சியோடு பொருள்தேட விரும்பினால், அறத்துக்கு மாறாகப் பொருள்தேடலாகாது என்னுந் தகுதிநிலை ஒன்று இடைநின்று அமைதிப்படுத்திவிடும். இன்ன இன்ன பொருள்கள் நமக்கு இல்லையே: அதனால் இன்ன இன்ன இழிவுகள் உண்டாகின்றனவே என்று கருதி அதன் தூண்டுதலாற் பொருள் தேட உள்ளம் முயற்சிகொள்ளும் போது 'இப்போது நமக்கிருக்குஞ் செல்வவுயர்ச்சிக்கு ஏற்பவன்றோ அப் பொருள்தேடவேண்டியிருக்கின்றது' என்னும் உணர்வு தோன்றி

அம் முயற்சியைத் தளர்த்துவிடக்கூடும் பொருள்தேடும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்துநின்றால் அப்பொருள் வருவதோடு இருவர் அன்பும் இன்னும் அகலமாக ஏதுவாகும் என்று நினைந்தால், இருவரும் ஒருவரையொருவர் பிரிந்திருக்கமுடியாத அருமைப்பாடு எழுந்து அந்நினைவை அகற்றிவிடும். இங்ஙனம் பொருள் காரணமாகப் பிரியும்போது பல உணர்வுகள் ஒன்றோடொன்று பொருந்திவராமலிருந்து அப்பிரிவு தடைப்படுதல் இயற்கையாய் நிகழக்கூடும். ஆயினும், தலைவனுந் தலைவியும் கல்வியறிவுங் கடமையுணர்வும் உள்ளவர்களாதலின், கடைசியாகப், பேரூக்கங் கொண்டு பொருள் செயல் முதன்மையானது என்னும் முடிவுக்கு வரத், தலைவன் துணிந்துசெல்வான். அக் காலங்களிலெல்லாந் தலைவன் தக்கது கூறிப் பேச்சு நிகழ்த்துவான்.

ஓதுதல், படைக்கலமெடுத்தல், ஓவியம் எழுதுதல் முதலிய தொழில்களை மேற்கொள்ளும்போதும், பொதுத்தொண்டுகள் புரிந்து அறங்

கேடுதல் முதலியவற்றாற் பிரிவு நேரும்போதும், இங்ஙனம் பல காரணங்கள்மேல் தலைவியைப் பிரிதலால் தனக்கு உண்டாகும் புகழும், பிரியாமையால் உண்டாகுங் குற்றமும் அவளுக்கு எடுத்துக்காட்டி வற்புறுத்தும்போதும், தூது காரணமாகப் பிரிவு நேரும் போதும், தனக்கு ஆக்கமாயுள்ள நண்பர்க்கு ஒன்று முடிக்கும் பொருட்டுப் பிரிவு நேரும்போதும் தலைவன் சிறந்த பேச்சுகள் நிகழ்த்துவான்.

தன்வலி துணைவலி வினைவலி என்னும் மூன்று பகுதிகளும், நாட்டின் அருமைப்பாடுகளும் மிகுந்து தோன்றுகின்ற பகையரசர்களின் மேம்பாடு காரணமாகப் பிரிவு நேரும்போதும், பிரிந்துசென்ற விடத்திற் பாடிவீட்டின்கண், தலைவியின் ஆற்றாமையியல்பை நினைவு கூர்ந்து தனிமையாய் இரங்கும்போதும், போன வேலை முடிந்தபின், தலைவியை விரைந்து சேரற்பொருட்டுத் தேர்ப்பாகன் வினைத் திறங்களை விரும்பும்போதும் தலைவனுக்குப் பேச்சுகள் நிகழும். தலைவன், தன் ஆட்சிகாரணமாகப் பிரிவு நிக

ழும்போதும் அவ் ஆட்சியின் அருமைப்பாடு கள் பற்றிச் சில திறமான சொற்கள் சொல்வான். பரத்தை காரணமான பிரிவினால் தலைவி மிக்க வருத்தங்கொண்டபோது தலைவன் அவளை அணுகி வேண்டிக்கொள்ளுதலும் அவள் வருத்தந் தெளியச்செய்தலும் என இவ் விரு வகைகளை மேற்கொள்ளும்போதும் தலைவன் மிக அருமையான பேச்சுகள் நிகழ்த்துவான். என இப் பகுதிகளெல்லாம் தலைவன் பேசுதற் கேற்ற குறிப்புகள் வாய்ந்தவையாகும். (நூற்-41).

இனி, இங்கே கூறப்பட்டவர்களல்லாமல் இன்னும், செவிலி தலைவி பாங்கன் சான்றோர் பாணர் கூத்தர் அருகிருப்போர் முதலியோர்க்கும் இப் பிரிவு ஒழுக்கங்களிற் பேச்சு நிகழாமற் போவதில்லை (நூற்--42). முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பற்றி, ஆராய்ச்சிக்காகப் பின்னொருகால் நினைத்துக்கொண்டு பேசுதலும் இவர்கள்பால் நிகழும் (நூற்--43). அங்ஙனம் நிகழ்ந்ததை எண்ணிப் பேசிக்கொண்டிருப்பதும் பிரிவு

ஒழுக்கமாகவே கருதப்படும் (நூற்-44). இனி, மரபுக்கு மாறுகாத மாட்சிமையான கருத்துகள் வேறுசிலவும் இப் பிரிவு ஒழுக்கத்திற் கலந்து வரும் என்று முன்னோர் தழுவிக்கொள்வர் (நூற்-45)

## இன்பம் முதிரப் பேசும் வகைகள்

(நூற் 46-முதல் 49-வரையில்)

இனி, இன்ப வொழுக்கத்தில் வரும் உரையாடல் நன்றாய்ச் சுவை முதிர்ந்து தோன்ற வேண்டுமாதலின், அதற்குரிய முறைகள் இப் பகுதியில் வகுத்தோதப்படுகின்றன.

உவமைகள் பேச்சுகளை அழகுபடுத்தும்; தெளிவுபடுத்தும்; கேட்பார்க்கு உள்ளக் கிளர்ச்சி தந்து தம் வயப்படுத்தும். பேசும் பொருளோடு ஒத்த வேறொரு தெரிந்த பொருளை நினைவுக்குக் கொண்டுவருவது சிறந்த பேச்சுத்திறமாகும். அங்ஙனம் நினைவுக்குக் கொண்டுவரும் பொருளையே 'உவமம்' என்பர். உவமம் இரண்டுவகைப்படும்; 'உள்ளுறை யுவமம்' என்பது ஒன்று;

'உவமம்' என்பது மற்றொன்று. இன்பவொழுக் கக் கருத்துகளைச் சுவையாகவுந் தெளிவாகவும் உணர்தற்கு இவ்விரண்டும் இன்றியமையாதன வாம்* (நூற்-46).

இன்ப வொழுக்கத்துக்கு நிலம் காலம் என் பவை அடிப்படையான பொருள்கள் என்பதும், இப் பொருள்களிலிருந்து தோன்றும் தெய்வம் உணவு விலங்கு மரம் பறவை மேளம் தொழில் இன்னிசை முதலிய பொருள்கள் அவ் வின்ப வொழுக்கத்தை நன்றாய் உருக்கொள்ளச் செய் கின்றன என்பதும் முன்பே காட்டப்பட்டிருக் கின்றன. அங்ஙனம் உருக்கொள்ளச் செய்யும் பொருள்களுள், தெய்வம் நீங்கலாக மற்றெல் லாப் பொருள்களையும் 'உள்ளுறை யுவமம்' தனக்கு இடமாகக் கொள்ளும் (நூற்-47). பேசுவோர் தாம் ஒரு கருத்தை உள்ளத்திற் கருதிக்கொண்டு அக் கருத்தோடு ஒத்து முடி யும்படி தெய்வம் நீங்கலாக மற்றப்பொருள்களை

---

* 'தள்ளாது ஆகும்' என்பதன் கருத்து.

மேலுக்கு உவமையல்லாததுபோல்*, ஏற்பப் பொருத்திச் சொல்வது உள்ளுறை யுவமமாகும் (நூற்-48). இனி உவமம் என்பது வெளிப்ப டையாய் உணரும் வகையில் வருவது (நூற்-49). உயர்ந்த இன்பநிலை விரும்புவார்க்கு இப் பேச்சுத்திறங்கள் முதன்மையானவையாகும்.

## தாழ்ந்த இன்ப நிலைகள்

### (நூற்-50 முதல் 52-வரையில்)

இதுவரையில் ஒத்த அன்பால் உண்டாகும் ஐந்து வகையான இன்ப வொழுக்கங்கள் கூறப் பட்டன. இனி ஒரு பக்க அன்பால் உண்டாகும் தாழ்ந்த இன்பவொழுக்க இயல்பும், ஏற்றத் தாழ் வான இரு பக்க அன்பால் உண்டாகும் மற்றொ ரு வகையான தாழ்ந்த இன்பவொழுக்க இயல் பும் இப் பகுதியிற் கூறப்படுகின்றன.

காம வுணர்வு அமையாத இளம் பெண்ணினி டம், உய்யும்வழி யமையாத பெருந்துன்பங் கொண்டு, புகழ்தலும், பழித்தலும் என்னும்

---

* 'உள்ளுறுத்து இறுவதை' என்பதன் கருத்து.

இருவகைகளால், தன்னோடும் அவளோடும் பொருந்திய சில கருத்துகளைக் கூட்டி, மறு மொழி பெறாமல், தானே பேசிக்கொண்டு இன் புறுதல் ஒரு பக்க அன்பால் உண்டாகுந் தாழ்ந்த இன்ப வொழுக்கத்துக்குச்* சிறந்த எடுத்துக் காட்டாகப் பொருந்தும் (நற்-50).

இனி, ஏற்றத்தாழ்வான இரு பக்க அன்பால் உண்டாகும் மற்றொரு தாழ்ந்த இன்பவொழுக்க இயல்பு† வருமாறு: உறவினர் தடையால் தலை வன் தன் தலைவியைப் பெறமுடியாதபோது, அவளில்லாமல் உயிர்வாழமாட்டாத தனது நிலையை எண்ணி, உயிர் துறப்பதற்கும் பின் வாங்காதவனாய்த் தனது மெய்யன்பை உலகத் தார்க்கு விளக்கி அவர்கள் நடுநிலைத் தீர்ப்பின் வாயிலாகவேனும் அவளைப் பெறத் துணிந்து, கறுக்குள்ள பனைமடல்களால் ஒரு பொய்க் குதி ரை செய்து அதன்மேல் ஏறித், தன் காதலி இன்னாள் என்பதற்கு அடையாளமாக அவள் உருவம் எழுதிய படம் ஒன்று கையிற் பிடித்

* கைக்கிளை † பெருந்திணை.

துத், தெருவிற் பலர் அறிய அக் குதிரையைப் பிறரால் இழுப்பித்துக்கொண்டு வெளிவருத லும் உண்டு. இதனை 'மடலேறுதல்' என்று சொல்வார்கள்*. முதலில் மடலேறுவேன் என் று தலைவன் சொல்லிப் பார்ப்பான்†. அதற்குத்

* இந் நிகழ்ச்சி பெருந்திணையைச் சேர்ந்தது. ஏவல், செய்வோரான தாழ்ந்த மக்களே பெருந்திணை யொழுக்கத்துக்குரியரென்பது அகத், 23-ம் நூற்பாவில் விளக்கப்பட்டது. அவருள்ளும் இது பெரும்பான்மையாய் நிகழ்வதன்று. எனவே, தமிழ் நாட்டு, மேன்மக்கள்பால் இப் பெருந்திணைத் துறைகொள்ளலாகாது.

இங்ஙனம் சொல்லுதலென்பது ஒத்த அன்பொழுக்கத்துக்குரிய மேன்மக்கள் மாட்டும் ஒரோவொருகால் விளையாட்டாக அருகி நிகழும்; ஆதலாற்றான், செயலளவில் வரும், 'ஏறிய மடற்றிறம்' என்பதைப் பெருந்திணை நிகழ்ச்சியாகக் கூறினார் ஆசிரியர். அற்றாயின், 'ஏறாத மடற்றிறம்' ஒத்த அன்பொழுக்கத்துக்குரியது என்று வரைந்து கொள்ளலாமோ எனின், கொள்ளலாகாது. பொதுவாக 'மடற்றிறமே' பெருந்திணைக்குரித்து; ஒத்த அன்பொழுக்

தலைவியைச் சார்ந்தோர் இசையாவிட்டால், தலைவன் மடலேற வேண்டிய கட்டாயத்துக்கு வர நேரும். அப்போது, தலைவியின் அன்பைவிடத் தலைவன் அன்பு மிக்க உச்ச நிலையை எய்தும். மடலேறும் நிகழ்ச்சி வெறும் பேச்சு முறையில் இல்லாமல் இங்ஙனம் செயல்முறையில் வரும் போது தலைவன் அன்புக்குத் தலைவியின் அன்புக்கும் உள்ளபடியே ஏற்றத்தாழ்வு காணப் படும். இனி, தலைவன் இளமை நீங்கிய முதி யோனாயிருந்து தலைவி இளையளாயிருந்தாலும், தலைவி மூத்தோளாயிருந்து தலைவன் இளையனா யிருந்தாலும், அல்லது இருவரும் இளமை நீங் கிய முதுமைப் பருவத்தவர்களாயிருந்தாலும்

---

கத்து மேன்மக்களில் (நிலமக்கள் தலைமக்களில்) ஒரோவொருவர் ஒரோவொருகால் விளையாட்டாகச் சொல்லளவில் அருகிப் பேசுதலும் அவர் வழுவென்க. இவ் வழுப்பற்றியே இலக்கியங்களிலுஞ் சில விடங்களில் இது கூறப்படுகின்றது. இவ் வழுவை, "ஏவன் மரபின் ஏனோரும் உரியர்" (அகத், 24) என்பதனால் முடிக்க.

அவர்கள் ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வான அன்புள்ளவர்களாகவேயிருப்பர். தலைவன் தலைவியர் இருவருள் ஒருவர் தெளிவிழந்துபோன மிகு காமநிலை யுள்ளவராயிருந்தாலும் அவர்கள் அன்பு ஏற்றத்தாழ்வாகவேயிருக்கும். இனி, மிக்க காம நிலையில் ஒருவரை யொருவர் வற்புறுத்தி நிற்கும்போதும் அவர்கள் அன்பு ஏற்றத்தாழ்வாயிருக்குமென்பது சொல்லாமலே பெறப்படும். இங்ஙனமாக 'ஏறிய மடல் நிகழ்ச்சி', 'இளமை நீங்கிய காம நிகழ்ச்சி', 'தெளிவிழந்த காம நிகழ்ச்சி', 'மிக்க காமத்து வற்புறுத்து நிகழ்ச்சி என்னும் இந் நான்கு வகையும்* ஏற்றத் தாழ்வான அன்பினால் நிகழும் இன்ப வொழுக்கமாகும் என்க [நூற்-51]

இனி, இங்ஙனம் ஏற்றத் தாழ்வான அன்பு கொள்ளுதற்குரிய ஒவ்வாக் காம இயற்கையுள்ளவர்கள் முதலில் ஒருவரை யொருவர் காணும்போது உடனே அவர்பால் அன்பு நிகழாது.

---

* பெரும்பாலும் இந் நான்கு வகையும் ஏவல் செய்வோர்பால் நிகழ்வன

ஒத்த அன்புள்ளவர்களுக்கானால் உடனே அன்பு நிகழும். ஆனால், இவ் ஒவ்வாக் காமத்தவரோ எனில், முதலில் நன்றாக ஒருவரை யொருவர் பார்ப்பர்; பின்பு 'இவர் நமக்குப் பொருந்துவரா' என ஐயுறுவர்; அதன்பின் இன்ன இன்ன காரணங்களாற் பொருந்தவர் என்று தெளிந்து கொள்வர். அதன் பின்பே அவர்பால் அன்பு கொள்ளத் துணிவர். இருவரும் அன்புபொருந் துவதற்குமுன் அவர்களுக்குள் இங்ஙனம் நிகழுங் காட்சி ஐயம் தெளிவு துணிவு என்னும் நான்கு நிலைகளும்* ஏற்றத் தாழ்வான இவ் அன்பொழுக்கத்துக்கே உரியதானாலும், அவை நிகழும்போது இருவரும் ஒருவரெண்ணத்தை ஒருவர் அறியாதவரா யிருத்தலின், இவை முன் நூற்பாவிற் சொன்ன† ஒருபக்க அன்பொழுக் கத்துக்கு உரியவையென்று சொல்லுவர். [நூற் .52].

---

* 'முன்னைய நான்கும்' என்பதன் பொருள்.

† 'முன்னது' என்பதன் பொருள்; கைக்கிளைக்கு ஏன்க

## இன்ப வொழுக்கம் பற்றிய நூன் முறைகள்

[நூற் 53-முதல் 55-வரையில்]

இனி, இவ் வகையான இன்ப வொழுக்கங் களை அறிஞர்கள் நூல் வழக்கிற் கொண்டுவரும் போது அவர்கள் மேற்கொண்ட சில வழக்கு களை ஆசிரியர் இப் பகுதியிற் குறிப்பிடுகின்றார்.

மக்கள் வாழ்க்கையில் இயற்கையாகக் காணப்படும் ஒழுக்கம் 'உலக வழக்கம்' எனப்படும். அவ் வுலக வழக்கங்களிற் சிறந்தனவாயுள்ளவற்றை அறிஞர்கள் ஒருங்கு தொகுத்துப் பிற்கால உலகிய லொழுக்கங்கள் திருத்தமாக நடைபெறும்பொருட்டுச் சுவையான நூல்கள் எழுதிவைப்பார்கள். அந் நூல் வழக்கம் அதனால் 'நாடக வழக்கம்'* எனப்படும். ஆகவே

---

* நாடகங்களில் சுவையான பாகங்களெல்லாம் ஒருங்கு தொடர்ந்து வருதல் இங்கு நினைவு கூர்தற்குரியது. இயல் இசை நாடகம் என்னும் நுட்பங்கள் அகத்திணையென்னும் இவ் வின்ப வொழுக்க இயற்

சான்றோர் நூல்கள் நாடக வழக்கத்தோடும் உலக வழக்கத்தோடும் பொருந்தியே காணப் படும்.

பல நலங்கள் கருதிப் பெரும்பாலும் நம் முன்னோர்கள் தம் நூல்களைப் பாட்டுகளாலே யே அமைத்து வந்தார்கள். இம் முறையில் அவர்கள் இவ் வின்ப வொழுக்கங்களைப் பாடும் போது அதற்கு முதன்மையாகக் 'கலிப்பாட்டு' 'பரிபாட்டு' என்னும் இருவகையான செய்யுள் களைப் பயன்படுத்திவந்தனர். [நூற்-53]. அவற் றுள், மக்களைத் தலைவராக வைத்துக்கூறும் இவ் ஐந்து வகையான இன்ப வொழுக்கங்களிலும் ஒருவரையும் இயற்பெயர் குறித்துப் பேசமாட் டார்கள். அவ் வந் நிலத்துப் பொதுப்பெயர்க ளாலேயே குறிப்பிடுவர் [நூற்-54]. இன்ப வொழுக்கப் பாட்டுகளிற் புறவொழுக்கங்கள் பற்றிப் பேசநேருமானால், அப் புறவொழுக்கப் பகுதிகளில் தலைவன் இயற்பெயர் பொருந்தி

---

கைகளிலிருந்தே அரும்பும் உண்மை, இதனால் நுண்ணுணர்ந்து தெளிந்துகொள்ளப்படும்.

வரினும் வருமல்லது, அப்போதும் அப் பாட்டின் அகவொழுக்கப் பகுதியில் அவ் வியற் பெயர்கள் பொருந்திவரமாட்டா என்க. [நாற்-55]

---

# 5. உயர்ந்த இன்ப வாழ்க்கை

இன்பம், அறிவுள்ள உயிர்களின் உள்ளத்தில் நிகழும் ஓர் உணர்வு என்றும், அவ்வுயிர்களும் மற்றோர் அறிவுப் பொருளோடு சேரும் சேர்க்கையினாலேதான் இன்பம் நிகழப் பெறுகின்றன என்றும் முதல் தலைப்பின் முதலிலேயே அறிந்தோம். உயர்ந்த இன்பம் இன்னது என்பதும் அதனை எளிதாக அடையும்வழி இதுவென்பதும் இவ்வுண்மையிலேயே நன்கு செறிந்து கிடக்கின்றன. அதனை இப் பகுதியில் ஆராய்வோம்.

உயிர்களில் மக்கள் உயிரே அறிவிற் சிறந்ததென்பதும் முதலில் விளக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், மக்கள் அடையும் இன்பமே மற்றச் சிற்றுயிர்கள் அடையும் இன்பங்களை விட உயர்ந்ததென்பது எளிதாகப் பெறப்படும். இனி, மக்கள் நுகரும் இன்பங்களிலும் பல உயர்வு தாழ்வுகள் காணப்படுகின்றன. ஆதலின், அவற்றுள் உயர்ந்த இன்பம் எதுவென்பதே இனி நாம் நன்கு ஆராயவேண்டியிருக்கின்றது.

மக்களுக்கு இன்பந் தரும் பொருட்சேர்க்கைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று உயிருள்ள பொருளின் சேர்க்கை; மற்றொன்று உயிரில்லாத பொருளின் சேர்க்கை. இவ்விரண்டன் கூட்டுறவுகளில்லாமல் யாரும் எந் நிலையிலும் இன்பந் துய்த்தல் இயலாது. அங்ஙனம் இன்பந் துய்க்கக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை; உணர்ந்ததுமில்லை. பொருட் கூட்டுறவுகள் வேண்டாம் என்று முனிந்து முற்றத் துறந்த முனிவர்களுங்கூட, இறைவன் என்னும் ஒரு பேரறிவுப்பொருளின் கூட்டுறவை எனை அறியாமைப் பொருள்களின் உதவியால், ஒரு பெரிய இன்பத்தின் பொருட்டு, அமைதியாய்ப் பெற விருப்பி மற்றச் சிற்றின்பப் பொருள்களைத் துறக்கின்றனரேயல்லாமல் அவரும் ஒரு கூட்டுறவும் அடையாதவரல்லர்

'தன்னைத் தான் அறிதல்' என்னும் மெய்ம்மொழியிலும் இக் கூட்டுறவு உண்மை பொதிந்து கிடவாமலில்லை. தன்னையென்பது இறைவனை; தான் என்பது உயிரின் உயர்ந்த

அறிவை*; 'இறைவனை உயிர் தனது உயர்ந்த அறிவால் தெரிந்துகொள்ளுதல்' என்பதே 'தன்னைத் தான் அறிதல்' என்னும் மறைமொழியின் மெய்ப்பொருள்.†. இங்ஙனம் இறைவனும் உயிரும் என்னும் இரு பொருள்களின் சேர்க்கை யில்லாவிட்டால் அங்கு இன்பம் என்பதும் இல்லை. ஆனால், தன்னை அறிதலில் அங்கு இன்பம் உண்டென்று சான்றோர் கூறுகின்றனர். "தன்னை யறிந்து இன்பம் உற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே" என்று அருண்மணங் கமழும் இராமலிங்க அடிகள் இதனை அழகாகக் கூறுதல் நினைவுகூர்

---

* இதனை உயிரின் 'பதி ஞானம்' என்று கொள்க;

† "தன்னாலே தன்னையுங் கண்டு தமைக் காணார்" சிவஞா, 9-ம் நூற்; 2-ம் அதி. 'நாடியோ' என்னும் வெண்பா. "தன்னாலே தனையறிந்தால் தன்னையுந் தானே காணும்" சிவப்பி, 8-ம் நூற்; 2. என்னும் மெய்கண்ட நூற்றொடர்கள் கண்டு உண்மை தெளிதல் வேண்டும்.

தற்குரியது*. ஆகலால் எங்கெங்கே இரண்டு அறிவுப் பொருள்களின் சேர்க்கைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இன்பம் உண்டென்பது துணியப்படும். படவே, அறிவோடு அறிவுசேர்வதனால் அங்கு இன்பம் நிகழ்கின்றதேயல்லாமல் அங்ஙனம் அறிவிரண்டு ஒன்று சேராவாயின் அங்கு இன்பம் இல்லை என்பதும் இதுகொண்டு தெளியப்படுமென்க.

உலகத்தில், நறுமணங் கமழும் ஓர் அழகிய மல்லி மலரும் அவ் வியல்பினதான மற்றொரு முல்லை மலரும் ஒன்று கூடி இன்பம் நுகர்தலை எங்குங் கண்டிலம். இனிய இளந்தென்றலும், ஒரு கவர்ச்சியான எழடுக்கு மாளிகையின் மேலிருக்கும் நிலா முற்றமும் தம்மில் ஒன்று கூடி இன்பம் நுகர்தலை எவரேனுங் கண்டிருக்கின்றனரா? அழகான அகன்ற மாளிகைக்கூடம் ஒன்றில் நாற்புறமும் வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும் உயர்ந்த நிலைப்பேழைகள் ஒவ்

* இதில், 'தன்' என்பது இறைவன்; "தன் உணர்வார்" (சிவஞா, அவையடக்) என்பதிற்போல.

வொன்றிலும் ஏராளமான சிறந்த சான்றோர் நூல்கள் ஒழுங்காய் அடுக்கி வைத்திருப்பதாக நினைவு கூர்வோம். அந் நூல்களுள் எவையே னும் ஒன்று மற்றொன்றின் அருமைபெருமை யைத் தெரிந்து கூடி இன்புறுதல் கூடுமோ, கூறுமின்! காட்சிக் கினிய அழகிய ஓவியங்க ளுஞ் செதுக்குருவங்களும் நம் திருக்கோயில்க ளெங்கும் நிரம்ப அமைக்கப்பட்டிருந்தாலும், அவைதாம் ஒன்று மற்றொன்றின் அழகு தெ ரிந்து இன்புற முடியுமோ? சிவப்பு பச்சை நீலம் முதலான விலையுயர்ந்த நிறக்கற்களை அழகிய பொற்பூக்களிற் பொருந்த இழைத்துச் சிறந்த அணிகலன்களாக்கி அவற்றை மெத்தென்னும் பட்டுப்பேழைகளில் நன்கு இணைத்து ஒளிமிக்க பளிக்கறைகளிற் கண்கவர் காட்சியாய் இனிது நிறுத்தியிருந்தாலும் அவ் வணிகலன்களுள் ஒன்றை யொன்று தம்மில் விரும்பி யணிந்து இன்ப முணர்தலும் எங்கேனு முண்டோ? மாலை வேளையில் ஒரு பசுஞ்சோலை மருங்கில் குழலும் யாழும் முழவும் முதலான இன்னிசைக் கருவி

கள் ஒருங்கு கிடக்கப்பட்டிருப்பினும், அவை தாம் தம்மில் ஒருங்குகூடி இசையாங்கு நடத்தி மகிழுமோ? மகிழாவன்றே! ஆதலால், அறிவுப் பொருள் சேராதவிடத்தில் இன்பந் தினைத்தனை யும் இல்லையென்பது துணிபொருளேயாம். எனவே, இன்பம் என்பது, அறிவினால் உண் டாவதோர் இனிய உணர்வென்று ஐயமின்றித் துணிந்துகொள்ளப்படுமென்க.

அற்றன்று, மேலே கூறப்பட்ட மலர்கள் தென்றல் நிலாமுற்றம் நூல்கள் ஓவியங்கள் அணிகலன்கள் இசைக் கருவிகள் முதலான வையெல்லாம் அறியாமைப்பொருள்களேயாயி னும் ஓர் அழகிய ஆடவனோ அல்லது மடமங் கையோ அவற்றைப் பயன்படுத்தி இன்ப நுகராக் காண்டலின், அறிவு உள்ளவர்களான அம் மக் களின் இன்பம், மலர்கள் முதலானவற்றின் அறியாமையிலிருந்தே தோன்றுகின்றன வென் று கொள்ளாமோவெனின், அறியாது கூறினாய்; மலர்கள் நூல்கள் ஓவியங்கள் முதலிய அறியா மைப் பொருள்களில் நல்ல அறிவுப் பதிவுகள்

அமைந்திருத்தலின், அவ் வறிவுப் பதிவுகளே அம் மக்கட்கு இன்பம் விளைத்தனவென்று அறிதல்வேண்டும். மெத்தென்னும் பஞ்சு, படுக்கைக்கு இன்பந் தருமாயினும், ஓர் அறிவுள்ளவன் அதனைத் தூய்தாக்கிச் சமப்படுத்தி உறையுள் வைத்து ஓர் இனிய மெத்தையாக்காத முன்னிலையில் அப் பஞ்சு இன்பந் தருதல் கூடுமோ? அப் பஞ்சிற் பதிந்த ஒருவனது அறிவின் திறமன்றோ அதன்கட் படுக்க இன்பந் தந்தது! இங்ஙனமே, பஞ்சில் இயற்கையாய் அமைந்திருக்கும் மென்றன்மையும் இறைவனது அறிவியல்பே என்று தெளிந்துகொள்ளல் வேண்டும். இனி, நூல்களை நினைவுகூர்வோம். வெறுங் கடிதமும் அட்டையும் மட்டுமிருந்தால் அவை மக்கட்கு மகிழ்ச்சி தருமா? எண்ணிப் பாருங்கள்! அவற்றிற் பதிந்திருக்குஞ் சான்றோர்தங் கருத்தறிவுக ளல்லவா கற்பார்க்கு மகிழ்ச்சி தருவவாயின! இவ்வாறே எல்லாப் பொருள்களிலும் இன்பந் தந்து நிற்கும் பகுதி அவ்வவற்றிற் பதிந்திருக்கும் அறிவுப்ப

றிவே யல்லாமல் வேருகாமை நன்ருணர்ந்து தெளிந்துகொள்ளப்படும். தெளியவே, எங்கும் அறிவினு லுண்டாவதே இன்பம் என்பது மெய்ப்பொருளாயிற்று காண்க.

இனிச், சிறந்த பகுத்தறிவுள்ள மக்கட்கு இங்ஙனம் அறியாமைப் பொருள்களின் சேர்க்கையினுல் உண்டாகும் இன்பமே அமைதி தருவதாயில்லை; ஏனென்ருல், அறியாமைப் பொருள்களிற் பதிந்து கிடக்கும் அறிவுப் பதிவுகளின் இன்பத்தை அவர்கள் நேரே அறிவுப் பொருள்களிடமிருந்தும் பெற விரும்புகின்றனர். மேலும், ஓர் அறிவுப் பொருள் மற்ருேர் அறிவுப் பொருளோடு கூடி இன்புறுதற்கே இவ் வறியாமைப் பொருள்களின் அறிவுப் பதிவுகளைப் பயன்படுத்தவேண்டுமென்பது அவர்கள் விருப்பமாயிருக்கின்றது.

இள மான் கன்றுகள் விளையாடி மகிழ்கின்ற ஒரு கவர்ச்சியான மலைச்சாரல் நல்ல காட்சியுடன் காணப்படுகின்றது. எதிரே கண்ணுக்கெட்டிய தொலைவுவரையில் ஒரே பசும்பா

யல் விரித்தாற்போல் இனிய பசும் புல் வெளி
அகலப் பரவிக் கிடக்கின்றது. மேலே மேகங்
கள் சிறிதுமின்றி அழகிய நீல் வானம் களங்க
மற்றிருக்கின்றது. அச் சாரலின் ஒரு பகுதியிற்
படிமானமான ஒரு பெரிய பாறையும், அதன்
ஓரத்திற் சிறு சிறுவென்று விரைந்து ஓடிவரும்
ஒரு சிறிய அருவியும், அவ்வருவியின் அருகில்
அங்கங்கும் நறுமணம் வீசி விளங்கி நிற்குஞ்
சில கனிமரச் சோலைகளும் அமைந்து அவ்வி
டத்தை அழகு செய்கின்றன. அருவியின் ஓரத்
தில் இயற்கையா யமைந்த ஒரு சிறிய கொடிப்
பந்தரும் அதனருகில் ஒரு வெண் கற்பாறை
யும் இருக்கின்றன. கதிரவன் மறைதற்கு
இன்னும் ஒரு விற்கிடைப்பொழுதுதான் இருக்
கின்றது.

அறியாமைப் பொருள்களில் இம் மலை
மான் வெளி வான் பாறை அருவி சோலை
பந்தர் கதிரவன் முதலியனவெல்லாம் நல்ல
அறிவுப் பதிவுகள் வாய்ந்த இன்பந் தருவனவே
யாம்.

சில் நொடிக்கெல்லாம் பளிச்சென்று ஓர் அரசபுரவி அவ் வருவியின் அருகே விரைந்தோடிவந்து நின்றது. நீண்டு நிமிர்ந்து கண்ணியத் தோற்றம் வாய்ந்த அந்த அழகு குதிரைமேலிருந்து எல்லா வகையாலுஞ் சிறந்த அழகிய அரசிளைஞனொருவன் மின்னற் பிழம்புபோற் கீழ் இறங்கினான். அவன் வரவால் அம் மலைச்சாரலே ஓர் ஒளிகொள்ளலாயிற்று. பகலெல்லாம் வேட்டைமேற் சென்று இம் மாலையில் தன் அரண்மனைக்கு விரைந்துசெல்பவன் போல் அவன் காணப்பட்டமையால், ஆண்மையும் வீரமுங் கதிர்விடும் அவன் முகத்திற் சிறிது களைப்புந் தெரிந்தது. எனினும், நோக்க நோக்க அவன் தோற்றம் இக் களைப்பு நிலையிலும் நுண்ணொழில் வாய்ந்து திகழ்ந்தது.

தளர்வுதீர அவ் வருவியின் நீர் சிறிது பருகினான்; அருகில் இருந்த கனிச்சோலையிற் சில கொடிமுந்திரிப் பழங்கள் பறித்துச் சுவைபார்த்தான். அம் மலைச்சாரல் அவனுள்ளத்தைக் கவர்ந்தது. அங்கிருந்த அகன்ற பாறைமேற்

சென்று நின்று நாற்புறமும் நோக்கினான். அஃதோர் அமைதியான இன்ப நிலையமாயிருந்தது. பின்பு, குதிரையை விட்ட இடத்தருகில் வந்தான். கீழே தழை கொழும்புல் அடர்ந்து மெத்தென்றிருக்கவே, அபிலேனன் தன் இடையிற் செருகியிருந்த வாளுறையைக் கழற்றிக் கீழே கிடத்தி, அப் புல் தரையிற் சிறிது ஒருக்கணிப் பாய்ச் சாய்ந்து படுத்தான். குதிரையும் தன் உடம்பை உதறியபடியாய்க் களைத்துக்கொண்டு ஒருபக்கம் புன்மேய்ந்துகொண்டிருந்தது.

அபிலேனன் எண்ணுவான்: என்னே இம் மலைச் சாரலின் கவர்ச்சி! நல்ல ஓவியம் வல்லான் ஒருவன் உலகத்தில் அங்கங்குங் காணப்படுங் கவர்ச்சியான காட்சிகளை அவை ஓரிடத்திலிருப்பதுபோல் ஒருங்கு கூட்டி ஓர் இரட்டுத்துணியில் இனிதெழுதினாற்போல இம் மலைச்சாரல் மிகவும் இனிமையாய்த் திகழ்கின்றது! ஆயினும் என்ன பயன்? இச்சாரலில் ஓர் இனிய காட்சியில்லாமல், இது தாமரை யிழந்த தண்ணீர் போலவும், தண்ணில விழந்த தனி

வானம் போலவும் பொலிவுகுன்றிக் காணப்படு கின்றது. இங்கே, எல்லா வகையாலுஞ் சிறந்து அழகு கனிந்தொழுகும் இளநங்கை யொருத்தி இதோ இக் கொடிப்பந்தரின் கீழ் இருக்கும் வெண் கற்பாறையின்மேல் அமர்ந்து, சிலு சிலு வென்று தன் சிறு சீரடிமேல் அவ் வருவி நீர் ஒலித்து ஓடிவர, ஓர் இனிய யாழ் கைக்கொண் டு இசைமீட்டிப் பாடி, அப் பாட்டுக் கேட்டு அதோ துள்ளி விளையாடும் புள்ளிமடமான்கள் அவ் இசைமயமாகி அவள் அருகுசெல்லும் போது, அவள் தனது இடது கையில் யாழ் தாங்கி வலது கையிற் கீழே பச்சைப் பசே லென்று அடர்ந்து வளர்ந்திருக்குங் கொழுமை யான புல்லை அப்படியே குனிந்து பறித்தெடுத் தூக், குயில்போன்ற தனது மெல்லிய தேன் குர லால் முன் இசையைத் தொடர்ந்து இசைத்த படியாய் அவற்றிற்குக் குழைவோடு ஊட்டுவ ளாயின், அக் கவர்ச்சிமிக்க காட்சி எவ்வளவு பேரின்பம் பயப்பதாயிருக்கும்! அப்போது இம் மலைச்சாரலின் பயன் எவ்வளவு மேம்பட்டதா

யிருக்கும்! ஓர் அறிவுப் பொருள் மற்றோர் அறிவுப் பொருளோடு கூடி இன்புறும்போதுதான் இவ் அறியாமைப் பொருள்களின் பயன் மிகுதியாய்த் தெரிகின்றது.

இதனாலன்றோ, அருளே தம் உருவமான இராமலிங்க அடிகள்,

“இளவேனில் மாலையாய்க் குளிர்சோலை யாய்மலர்
இலஞ்சிபூம் பொய்கை அருகாய்
ஏற்றசந் திரகாந்த மேடையாய் அதன்மேல்
இலங்கும் அரமிய அணையுமாய்த்

தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போல்
தழைத்திடு நிலாக்கா லமாய்த்
தனியிளந் தென்றலாய் நிறைநரம் புளவீணை
தன்னிசைப் பாட் டிடமாய்க்

களவே கலந்தகற் புடைமடவ ரல்புடை
கலந்தநய வார்த்தை யுடனாய்க்
களிகொள இருந்தவர்கள் கண்டசுகம்”

என்று இளவேனில் முதலான கவர்ச்சி மிக்க அறியாமைப் பொருள்களோடு அறிவுள்ளவர்க

ளான் காதலர் இருவர் ஒன்று கலந்து இன்பு றுதலை இணைத்து, அங்ஙனம் அவர்கள் இன்பு றும்போது இவ் வறியாமைப் பொருள்கள் பெ ரும்பய னுள்ளவைகளாயிருக்கும் உண்மையும் இனிது விளங்குமாறு இவ் வருட்பாடலைத் தெ ளிவாகப் பாடியிருக்கின்றார்கள். இப் பாடலை இன்னொரு முறை பாடுவோம்; என்று நினைந்த வனாய் அதனை இனிய இசை குழைத்து மடித்து மடித்துப் பாடுவானாயினன்

மீண்டும் எண்ணுகின்றான் இராமலிங்கப் பெருமான் இக் கருத்துகளை எவ்வளவு எளிய தமிழில் எவ்வளவு இன்சுவையாகவும் தெளிவா கவும் பாடியிருக்கின்றார்! தமிழ் மொழிச் சுவை எவ்வளவு இனிக்கின்றது! தமிழ் மொழிக்கு இவ்வளவு இனிப்பும் எதனால் வந்தது? முதன் மையாக அதில் அவர் கூறிய இன்பக் கருத்து களாலல்லவா! ஆம்; இன்பக் கருத்துகளாலே தாம்; அதனாலேதான் பண்டைக் காலத்திலே யே ஆசிரியர் தொல்காப்பியனார் 'அறிவுப் பொ ருள்கள் அறியாமைப் பொருள்கள் என்பவற்

றால் உலகில் உண்டாகும் இன்பக் கருத்துகளை மொழிகொண்டு பேசத் தகுந்த கருத்துகளென்று கருதி அவற்றையே தமிழ் மொழிக்குப் பொருளிலக்கணமாக அமைத்தனர் போலும்! ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும்; வேறு பிற மொழி யிலக்கியங்களும் இதற்குமேலாக எதொரு பொருளும் எடுத்துரைப்பனவாயில்லை; இதிலேயே, பேரறிவுப் பொருளான இறைவன் இன்பமும் அடங்கியிருக்கின்றது.

ஆம்; அறிவுப் பொருள்கள் அறியாமைப் பொருள்கள் என்பவற்றால் உலகில் உண்டாகும் இன்பக் கருத்துகளை மொழிகொண்டு பேசத் தகுந்த கருத்துகளென்று கூறும்போது, அறிவுப் பொருள்கள் என்பதனுற் பேரறிவுப் பொருளான இறைவனும் அவன் சேர்க்கையால் உண்டாகும் பேரின்பமும் அடங்குமல்லவா? உலகத்திலுள்ள இன்பங்களில் உயர்ந்தது இது வென்று காட்டி அந் நிலையில் ஒழுகும் மக்களை அதனினும் மேம்பட்ட இறைவன் இன்பத்திற் படிவித்தலே ஆசிரியர் கருத்தென்பதும்,

"காமம் சான்ற கடைக்கோள் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்று அவர் கற்பியலிற் கூறிய நூற்பாவால் இனிது விளங்குகின்றது.

உயர்ந்த இன்ப நிகழ்ச்சிக்கு நிலைக்களனை ஒரு சிறந்த அழகிளைஞனும் ஒரு சிறந்த மடமங்கையும் ஒத்த அன்பாற் கருத்தொருமித்தவர்களாய்த் தம்மில் ஒருவருக்கொருவர் வாழ்க்கைத் துணைவர்களா யிருந்து, ஒருகால், இம் மலைச்சாரல் அருகில் வரும்போது, இதோ தண்ணென்று ஒழுகும் இவ் அருவியின் கரையில் ஓர் அழகிய இலைக்குடில் இருந்து அதன்கண் ஓர் அரிய சான்றோருந் தம் தேவியுடன் தவமிருந்து வருவாரானார், பொழுது சாய இருக்கும் இந் நேரத்தில் அவர் அவ் விலைக் குடிலினின் றும் வெளிப்பட்டு இவ் அகன்ற பாறையின் ஒருபுறம் அமர, அவர்களும் அவரெதிரிற் பணிவாய் அமர்ந்திருந்து நுணுக்கமான உயர்ந்த

நற் கருத்துகள் பற்றி அமைதியாக அவரோடு பேசியும், பேசியபடி ஒருபுறம் அமைந்தொழுகியும் எவ்வளவு இன்புறலாம்! அப்போது இம்மலைச் சாரலின் இன்பப் பயன் இன்னும் எவ்வளவு சிறந்ததாயிருக்கும்! இக் கனிமரங்களில் தொங்கும் நறிய பழங்கள் சிலவற்றைச் சாறு சிதையாமற் பறித்துத் துப்புரவாக இத் தூய அருவி நீரிற் கழுவி அப் பெரியார்க்குப் பயன் படும்படி அளித்தால், அப்போது இம் மலைச் சாரலும் இக் கனிச்சோலையும் அவர்களுக்குத் தரும் மகிழ்ச்சி இன்னும் எவ்வளவு மேம்பட்டதாயிருக்கும்! எனவே, இறைவனது பேரின்ப நிலையை எய்துதற்கும் இவ் ஆண் பெண் இன்பம் ஆக்கமானதாகவே காணப்படுகின்றது. தொல்காப்பியரின் அகப்பொருளிலக்கணம் வீட்டின்ப மாட்சிக்கே வழிகோலுவதாயிருக்கின்றது. அவர் வழிகோலும் முறை அவர் 'அகத்திணையிய'லில் நன்கு விளங்கித் தெரிகின்றது. ஆம்; அவர் 'அகத்திணையிய'லில் கூறியிருக்கும் நுட்பங்கள் இப்போது நமக்கு எவ்வு

ளவு தெளிவாய் எவ்வளவு உயர்வாய் விளங்குகின்றன.

அறிவாற் சிறந்த அழகாற் சிறந்த ஆண் மக்கள் இருவர் நண்பர்களாய் ஒன்றுசேர்ந்து இம் மலைச் சாரலிற் கருத்தொருமித்து அளவளாவியிருந்து இன்புறுகின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதைவிட, அங்ஙனமே அறிவாலும் அழகாலுஞ் சிறந்த இளம்பருவமுள்ள ஓர் ஆண்மகனும் ஒரு பெண்மகளும் தம்மில் ஒத்த காதலன்பு மிக்கவர்களாய்த் தம்முள் ஒருவரொருவரையன்றி வேறு நினைக்களாங் காணாதவர்களாய்க் கருத்தொருமித்து உள்ளுருக உடலுருகக் குழைந்து உயர்ந்த எண்ணங்கள்பற்றி அறிவாரப்பேசியும் அன்பொழுக அளவளாவியும் இன்புறுவது இன்னும் எவ்வளவு மேலான இன்பமாயிருக்கும்! இந் நிலையில் அவர்கட்கு இன்பந் தந்து நிற்பவை அவர்கள் ஆண் உடம்பும் பெண் உடம்புமட்டுமே என்று சொல்வது உண்மையிற் பொருந்துமா? அவ் வுடம்புகள் இம் மலைச்சாரற் பொருள்களைப்போல அறியா

மைப் பொருள்களேயாம்; ஆகலின், அவ்வுடம்புகளின் வாயிலாகக் கதிர்விட்டு ஒளிரும் அவர்கள் உயிரறிவின் ஆண்மை யியல்பும் பெண்மை யியல்புமே தம்மில் ஒன்று கலந்து அத்துணைப் பேரின்பம் பயந்துநின்றன்வாதல் வேண்டும்;* அல்லாக்கால், இறந்துபோன அழகிய ஆண் பெண் உடம்புகளும் அவ்வளவு இன்பந் தந்து நிற்றல் வேண்டுமன்றோ? இனி, இவ்வாண் பெண் சேர்க்கையிலும், ஒத்த வசதிகள்† ளுள்ளவர்கள் ஒன்று கூடுதலாற் பிறக்கும் இன்பமே உயர்ந்தது;

அதனினும், அவர்களிருவரும் உயர்ந்த அறிஞர்களாயிருந்து ஒன்றுகூடும்போது அதனாற் பிறக்கும் இன்பம் இன்னும் உயர்ந்தது;

அதனினும், அவர்களிருவரும் ஒத்த அன்புள்ளவர்களாய்க் கருத்தொருமித்துக் கூடுதலாற் பிறக்கும் இன்பம் கடைசியாக இன்னும்

* பிரகதாரணிக உபநிடதம்: R. E. Home, *The Thirteen principal Upanishads*. P. 98.

† கல்வி, செல்வம், நாகரிகம் முதலியவைகள்.

உயர்ந்ததாகும் என்று இச் சேர்க்கையிற் சில படி முறைகள் கொள்ளலாம்.

ஆசிரியர் தொல்காப்பியனார் இவ் வுண்மைகளெல்லாம் நன்கு பெறப்படுமாறு, 'எல்லா வகையானுஞ் சிறந்த அழகிய அறிவுள்ள ஆடவன் ஒருவனும் அங்ஙனமே எல்லா வகையானுஞ் சிறந்த அழகிய அறிவுள்ள மங்கைநல்லாள் ஒருத்தியும் தம்மில் மனமொத்த காதலன்பாற் கூடி மகிழ்தலே இவ் வுலகத்தில் உயர்ந்த இன்பமாவது* எனவும், அவருள்ளும் ஒருவர்மட்டும் அன்புகொள்ளுதலோ† அல்லது இருவருமே ஏற்றத்தாழ்வாய் அன்புகொள்ளுதலோ‡ அவ்வளவு உயர்ந்த இன்பமாகாது எனவும் 'அகத்திணையிய'லில் எடுத்த எடுப்பிலேயே (நூற்: 1-2) கூறினமை எவ்வளவு உலகியற்கையோடு ஒத்ததாய் முற்றிலும் பொருத்தமாயிருக்கின்றது. ஆகவே அறிவுள்ள அழகுள்ள ஆண்மை பெண்மையுள்ள இளம்பருவமுள்ளவர் இருவர் ஒத்த அன்போடு கருத்தொருமித்து அறிவாற்றல் உயி

* நடுவண் ஐந்திணை, † கைக்கிளை, ‡ பெருந்திணை

ராற்றல் அருளாற்றல்களோடு உயர்ந்த எண்ணங்களில் உள்ளங் கொள்வதனாற் பிறக்கும் இன்பமே உயர்ந்த இன்பமாகுமென்று இனிது தெளியப்படுகின்றது.

அத்தகைய இருவர் கூட்டத்துக்கன்றோ இம் மலைச் சாரல் போன்ற அறியாமைப் பொருள்கள் பெரிதும் இன்பந் தருவனவாயிருக்கும். இதனையும் அப் பெருமானே விளக்கமாய் உரைத்திருக்கின்றனரன்றோ! இடங் காலம் என்றும்*, அவற்றால் உண்டாகும் விலங்கு உணவு நீர் முதலிய பொருள்கள்† என்றும், இவ்விரண்டாலும் உண்டாகும் சேர்தல் பிரிதல் முதலான உணர்வு நிகழ்ச்சிகள்‡ என்றும் அவர் இவ்வின்ப வொழுக்கக் கருவிகளை மூன்று பெரும் பிரிவாகப் பிரித்து விளக்கியது எவ்வளவு இயற்கையாகவும் நுட்பமாகவும் இருக்கின்றது! ஆம், இம் மலைச்சாரலின் இடமும் இம் மாலைக் காலமுமே நமக்கு இத்தகைய இன்ப வுணர்வுகள் தோன்றுதற்கு அடிப்படையான காரணப்பொ

* முதற்பொருள். † கருப்பொருள் ‡ உரிப்பொருள்

ருள்களாயிருக்கின்றன.* இங்ஙனந் தோன்றிய இன்ப வுணர்வை மேலும் மேலும் பெருக்கி நிற்பவை இதோ இங்கே துள்ளித் திரியும் புள்ளிமான்களும், அதோ அங்கே விளங்கித் தெரியுங் கனிச்சோலைகளும், இவ் வருவி நீரும் முதலானவைதாம் என்பதிலும் ஐயமில்லையல்லவா?† இனி, நாம் இப்போது தனியாகப் பிரிந்து வந்த பிரிவு நிகழ்ச்சியினாலன்றோ இன்னும் இவ் இன்ப வுணர்வு மிகுந்து தோன்றக் காண்கின்றோம்.‡ இங்ஙனம் இப் பிரிவு நிகழ்ச்சி இன்பவுணர்வை மிகுத்து நிற்றலாலன்றோ ஆசிரியர் அதன் முதன்மை கருதி அகத்திணையியலின் கடைசியில் அதனைப் பெருக விரித்தோதுவாராயினர்.

ஆ! இன்ப வுணர்வை எழுவித்து* உருவாக்கி† முதிர்விக்குந்‡ கருவிகளாகவே இம் முப்பெரும் பிரிவுகளையும் ஆசிரியர் தொல்காப்பியர் அளந்து விளக்கியிருப்பது எவ்வளவு உண்மையாயிருக்கின்றது! தொல்காப்பிய அகத்திணையி

* முதற்பொருள் † கருப்பொருள் ‡ உரிப்பொருள்

யல் எவ்வளவோ இயற்கைவழுவாமல் அமைந்திருக்கின்றதென்றே சொல்லவேண்டும். பிறிந்து பார்த்தால், உயர்ந்த இன்பம் இதுவென்பதும்,* அதனை நுகர்தற்குரியார் இவர் என்பதும்†, அதனைத் தோற்றி உருவாக்கும் இயற்கை நிலைகளும்‡ முதிரச்செய்யும் செயற்கை முறைகளும்|| இவையென்பதுமே 'அகத்திணையிய'லின் விளக்கப் பொருள்களாகக் காணப்படுகின்றன. இம் முறைக்கு வேறாக இன்பந்துய்ப்பவர்கள் எங்கேனும் எக்காலத்திலேனும் இருக்கின்றனரா?

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்?
இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை.

---

* நடுவண் ஐந்திணை.

† ஒத்த நலமுள்ள இரண்டு அறிவுப்பொருள்களான ஆண்பெண் உயிர்கள்.

‡ முதற்பொருளுங் கருப்பொருளும்.

|| உரிப்பொருள்.

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து”

என்று உலகப் பெரியாரான திருவள்ளுவரும் இவ்வின்பமுறையையன்றோ தாமும் உலகுக்கு அறிவுறுத்துகின்றனர். ஆ, திருவள்ளுவனர்க்கும் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னுலேயே இவ் உயர்ந்த இன்ப முறைகளை இவ்வளவு பொருத்தமாய் விளக்கித் தந்த ஆசிரியர் தொல்காப்பியனாரின் முற்றறிவு மாட்சிமையே மாட்சிமை! தமிழ் இலக்கணம் இயற்கையோடு பெரிதும் ஒத்திருக்கின்றது. இலக்கியத்துக்குத் திருவள்ளுவனர் நூலும், இலக்கணத்துக்குத் தொல்காப்பியனர் நூலும் என இவ்விரண்டுமே போதும்; உலகை வெல்லும்; தமிழ் நாடு மட்டுமே யன்று, உலகமே செய்த பெரிய நல்வினையினுலேயே இவ்விரு பேராசிரியரும் இவ்வுலகத்தில் எழுந்ததும், இருபெருநூல்கள் செய்ததும் அவ் விருபெருநூல்களும் சிதைவுருமல் இன்றளவும் முழுவுருவில் இருப்பதும் என்று சொல்லவேண்டும். அதிலும், நிகரற்ற இவ் விருபெ

ருந் தெய்வ ஆசிரியர்களுந் தமிழ் நாட்டிலேயே தோன்றித் தமிழ் மொழியிலேயே நூல்கள் அருளிச்செய்தமை தமிழ் மக்களின் தனித்தவப் பேற்றை நன்கு காட்டுகின்றது! தமிழ் மக்கள் இறைவனருளால் தமக்கு இயற்கையே அமைந்துள்ள இப் பெருவாழ்வைக் கருதுகின்றனரோ என்னவோ!' என்று நெடுக எண்ணியவனாய் இம் மலைச்சாரலின் மாலைக்காட்சியழகாற் கிளரப்பெற்ற மெய்யுணர்விற் பெரிதுந் திளைத்து அதன் வயமாயிருந்தான்.

குதிரை, இந் நிலையில் ஒரு பெருங் குரல் கொண்டு கனைத்தது. அரசிளைஞனது ஆழ்ந்த அழகிய இன்ப நினைவை அது கலைக்க, அவன் உடனே திடுக்கென்று முன் நினைவுக்கு வந்தவனாய்ப், பொழுது மறையும் நேரமானமை கண்டு, உடனே துள்ளியெழுந்து வாளுறையை எடுத்து முன்போல் இடையிற் செருகிக்கொண்டு, மீண்டுஞ் சிறிது அருவிநீர் பருகிப் புரவியேறி, மின்னலெனச் சடுதியில் மறைந்தான்; அரசிளைஞன் ஒளியோடு கதிரவன் ஒளியும் உடன்மறைந்தது.

பாருங்கள், மேற்காட்டிய எடுத்துக் காட்டுகளிலிருந்து சில உருவான முடிபுகள் நம்மால் அறியப்படுகின்றன. அவை: 'இன்பம் என்பது இருபொருட் சேர்க்கைகளால் உண்டாகும் ஓர் உணர்வு; ஆயினும் ஓர் அறியாமைப் பொருளும் மற்றோர் அறியாமைப் பொருளும் ஒன்றுசேர்ந்து இன்பம் நுகர்வதில்லை. அறிவு சேர்ந்தவிடத்திலேதான் இன்பம் உண்டாகின்றது. ஆகலால், ஓர் அறியாமைப் பொருளிடம் ஓர் அறிவுப் பொருள் சேர்ந்து அப்பொருளின் அறிவுப் பதிவுகள்கொண்டு இன்ப நுகர்தல் கூடும். ஆயினும் அவ் வின்பம் அவ் வறிவுப் பொருளுக்கு அவ்வளவு அமைதி தருவதில்லை. ஓர் அறிவுப் பொருள் மற்றோர் அறிவுப்பொருளோடு கூடி இன்ப நுகர்தலையே உயர்ந்த இன்பமாகக் கருதுகின்றது. இங்ஙனம் இருவரும் சேர்ந்து நுகர விரும்புவது எங்கும் நீக்கமின்றி நிறைந்துங் கடந்தும் விளங்கா நிற்கும் இறைவன் இன்பத்தையேயாம். அதனை ஒருவராய் நுகர்வதைப் பார்க்கிலும், இருவராய்ச், சேர்ந்து நுகர்வதே

அவர்களிருவர்க்கும் ஆற்றலாய் ஆரா இன்பமா யிருக்கின்றது. இவ் வின்பத்துக்கே எனை அறி யாமைப் பொருள்களைப் பயன்படுத்திக்கொள் வது அவர்கள் நோக்கமாம். அவ் வறியாமைப் பொருள்கள் அவர்கள் இன்பத்தைப் பெருக்கி நிற்கின்றன. இனி, அவ் அறிவுள்ள இருவரினும் ஒருவர் ஆணும் மற்றொருவர் பெண்ணுமாயி ருந்து அவ் ஆண்மை பெண்மை இயல்புகள் கொண்டு அவ் இறை இன்பத்தை அறிவாக இன்புறுதல் இன்னும் உயர்ந்த இன்பம் எனப் படும். அவரும் ஒத்த கருத்துள்ளவர்களாகத் தம்மில் அன்புகொண்டு இன்புறுதலே கடைப் படியாக உயர்ந்த இன்பமாயிருக்கின்றது*

---

* "இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு" என்று இந் நுகர்வோடு நம்பியா ரூரர் கூறியருளினமை இவ் வின்பமேயாம். 'இறை கள்' என்றது, உயிர்ப்பொருள்களிலும் உயிரில் லாத பொருள்களிலும் அகமும் புறமும் நிரம்பித் ததும்பியும் அவற்றின் நீங்கியும் நிற்கும் உணர்வுகள் காட்சிகள் ஆற்றல்கள் முதலானவை; "இன்பத்தோ

இன்பம் என்பது எங்கும் அறிவினால் உண்டாவதேயாம் என்று தெளிவாக முடிக்கப் படுதலால், ஆண் பெண் மக்களாய் அன்பிற் சிறந்து இன்புறுதலென்பதும் உண்மையில் அவ ரவர் அறிவு நலந் தோய்ந்து இன்புறுதலாகவே கொள்ளப்பட்டு ஞான வொழுக்கங்களோ டொத்து உயிர்க்கு உறுதிபயப்பதாய் இறுதி யிற் பெயராப் பேரின்பத்தை நிலைப்பிப்பதாய் மதிக்கப்படுவதாயிற்று*. அதனாலேயே தொல் காப்பியர் முதலான பேராசிரியர்கள் இதுவே உலகத்தில் உயிர்க்கு உறுதிபயக்கும் உயர்ந்த இன்பமுறை யென்று பாராட்டி இதனை அகப் பொருளிலக்கணமாக விரித்தனர். ஆண் பெண் கலப்பில் இங்ஙனம் அறிவு நலந் தோயாது, உடம்பின் நலமே தோயும் இன்பம் உயர்ந்த இன்பமாகாது எனக் கொண்டு ஆசிரியர் அத

---

டு இசைந்த வாழ்வு" என்றது, அவற்றை நுகர்தற்கு எளிதாயுள்ள, அருள்வழியாய் நடைபெறுங், காத லன்பு வாழ்வை என்க.

* இறைய, நூற் I-ன் உரை.

யை ஒரு பக்க இன்பமாகவும்* ஏற்றத்தாழ்வான இன்பமாகவும்† ஒதுக்கிவிட்டனர். எனவே, ஒத்த இன்பம் என்பது தூய அறிவு நலத்தோடு கூடிய உயர்ந்த இன்பமாகலின்‡ அதன்கண், மேலே காட்டியவாறு அவ் வின்ப முதிர்ச்சிக்கு அறியாமைப் பொருள்கள் பயன்படுதல்போல வே, அவ் வறியாமைப் பொருள்களுள் ஒன் ருன இவ் ஆண் பெண் உடம்பும் பயன்படுமல் லது வேறில்லை' என்பனவாகும். இதனால் இவ் வுலகத்தில் உயர்ந்த இன்பமுறை இன்னதென் பது தெளியப்பட்டது

இனி, இவ் வுயர்ந்த இன்பத்தை எய்தும் முறைபற்றியும் சிறிது விளக்குதல்வேண்டும். இதுமேல்எடுத்துக்காட்டுகளாலும் ஒருவாறு வி ளங்குகின்றது. இடமுங் காலமும் என்னும் ஒரு பகுதியும், அவற்றால் உண்டாகும் உணவு விலங் கு நீர் முதலான மற்றொரு பகுதியும், சேர்தல் பிரிதல் முதலான இன்னொரு பகுதியுமென

---

* கைக்கிளை

பெருந்திணை ‡ துவே நடுவண் ஐந்திணை என்க.

மூன்றாகவைத்து* அவையே அவ்வின்பத்தைத் தோற்றி உருவாக்கி முதிரச்செய்வனவென்று ஆசிரியரால் ஆராயப்பட்டனவாக முன் அறிந்தோம். அவற்றுள், சேர்தல் பிரிதல் முதலான மூன்றாவது பகுதி, இன்பத்தை எவ்வாறு முதிரச் செய்கின்றதென்பதுபற்றி இங்கே இன்னுஞ் சிறிது கருத்தூன்றுதல் நல்லது. ஏனென்றால், மக்கள் தமது உயிர் வாழ்க்கையை நாடோறும் புனிதப்படுத்துவதற்கும் ஒழுக்கங் கோலுவதற்கும் இந்தப் பகுதி, மிகவும் முதன்மையானதாய் மிகவும் இன்றியமையாததாய் இருக்கின்றது.

ஓர் அறிவுப் பொருள் மற்றோர் அறிவுப் பொருளோடு சேர்ந்து இன்பம் நுகரும்போது, அந்த இன்பம் அவர்கள் உள்ளத்தில் அறிவினால் நிகழ்கின்றது என்றும் முன் கண்டோம். அதன்கண் இன்னுஞ் சிறிது நுணுகி நோக்கினால், அவ்வுள்ள மலரிலிருந்து பல நல்லியல்புகளாகிய நறுமணங்கள் புறம் விரிந்தே அந்த இன்பத்

---

* முதல் கரு உரிப் பொருள்கள்.

தேனே மேன்மேற் பெருக்கி நிற்கின்றன என்று அறிவோம். அவையே: நட்பு, அருள், அன்பு, இரக்கம், அறிவு* என்னும் நல்லியல்புக ளாகும். இந்த நல்லியல்புகளில்லாமல் இவ்வுல கத்தில் எவரும் இன்பமென்பதைக் கனவிலுங் கருதுதல் இயலாது. உலகத்தில் எங்கே இன் பந் தோன்றுகின்றதோ அங்கே யிருப்பவர்கள், ஒருவரோடொருவர் நட்புச் செய்கின்றவர்க ளாயிருப்பர்; அல்லது ஒருவர் நலங்களை ஒருவர் அருளோடு எண்ணுகின்றவர்களா யிருப்பர்; அல்லது ஒருவர் செய்த நலங்களை ஒருவர் மெ கிழ்ச்சியோடு எண்ணி எண்ணி அன்பு கொள் கின்றவர்களாயிருப்பர்; அல்லது உற்ற நோத் தில் ஒருவருக்கொருவர் உதவிசெய்துகொண்டு இரக்கத்தோடு உள்ளம் உருகுகின்றவர்களாயி ருப்பர்; அல்லது நன்மை பயக்கத் தக்கதான ஏதேனும் ஒரு செயலை அறிவோடு ஆழ்ந்து

* இவை முறையே 'புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்' என்னும் உரிப் பொருள்களின் உணர்வுகள்

ஆராய்கின்றவர்களாயிருப்பர்; இந் நிலைகளே* உயர்ந்த இன்ப நிலைகளாம். இந்நிலைகள் எங்கெங்கே எவ்வளவுக்கு உண்டோ அங்கங்கே அவ்வளவுக்கு இன்பம் உண்டு. இவை நேரே ஆண்டவனிடத்துண்டாயின் அங்கும் இன்பம் உண்டு; எல்லாம் ஆண்டவன் இன்பந்தான்†; எங்காயினுமென்? இவையன்றி இன்பம் நுகர வேறு வழியேயில்லை.

இன்பம் பெருகவேண்டுமானால் நட்பு அருள் முதலான இவ் வற்றியல்புகள் பெருக வேண்டும். இவ் வற்றியல்புகள் பெருகும்பொருட்டே ஆசிரியர் தொல்காப்பியனார் சேர்தல் பிரிதல் முதலான நிகழ்ச்சிகளும், அவை நன்கு நிகழ்தற்கு உணவு, விலங்கு, புள், செடி கொடி முதலானவற்றின் சேர்க்கையும், இவையனைத்தும் நன்கு எழுதற்கு இடம் காலம் என்னும்

---

* இவை முறையே 'குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம்' என்னும் ஐந்திணை யொழுக்கங்கள்; இப் பெயர்கள் ஒழுக்கத்தால் வந்தவை.

† சுவேதாசுவதர உபநிடதம்; 4: 16.

அடிப்படையும் வேண்டும் என்று எல்லாம் காரண காரியப்பொருளில் அழகாக அகத்திணையிய லில் விளக்கிக்காட்டினர். எனவே, இடம் காலம் முதலியவைகளும், செடி கொடி முதலியவைக ளும் சேர்தல் பிரிதல் முதலியவைகளுமான இவ் வுலக வியற்கைகளெல்லாம் ஆண் பெண் இயற்கைக் கூட்டுறவு வாயிலாக உயிர்களுக்கு அன்பு அருள் முதலான நல்லியல்புகளை விளைத்து உயர்ந்த இன்பத்தை முதிரச்செய்கின்றன என் று தெரிதலால், பகுத்தறிவோடு கூடிய மக்கட் பிறவி யெய்தினர் ஒவ்வொருவரும் உயர்ந்த இன்பத்தையெய்தும் இவ் அழகிய வழியைப் பின்பற்றி இடந்தெரிந்து காலந்தெரிந்து* ஏனை இயற்கைப் பொருள்களின் வகை தெரிந்து,† செயல் முறை தெரிந்து‡ நட்பு முதலான அழ கிய உயிர்ப் பண்புகளை மிகுத்து இன்பம் பெருக் கியுய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்க.

---

* முதற்பொருள் † கருப்பொருள்

‡ உரிப்பொருள்.

'நட்பு' 'அருள்' 'அன்பு' முதலான நல்வியல்புகள் உயிரின் தன்மைகளாய் என்றும் அதனோடு வேறு பிரியாது பிணைந்து கிடந்து இன்பம் பெருக்கும் அகப்பொருள்களாதலால், மக்கள், அறிந்தோ அறியாமலோ, அவ் வியல்புகளை அடைந்து இன்புறுதலே நோக்கமாக இவ்வுலகத்தில் தாம் பெற்ற உடம்பும் பிற பொருள்களுங் கொண்டு உயிர் வாழ்க்கை நடத்துகின்றார்கள்; மெய்க் கருத்துகளைத் தெளிவாக அறிந்து மக்கள், வகையாக வாழ்க்கைகள் நடத்தி மேன்மேல் உயர வேண்டுமென்பதே தொல்காப்பியர் விருப்பம். தாம் ஆண்பாலோ பெண்பாலோ; தாம் இருப்பது, கான் நிலமோ, மலை நிலமோ, வயல் நிலமோ, கடல் நிலமோ, அன்றி வறு நிலமோ*; தம்மைச் சூழக் காணப்படுகின்ற தெய்வ வழிபாடு, உணவு நிலை, விலங்கு மரம் பறவை செடி கொடி யுயிர்கள், வாச்சியம் தொழில் இன்னிசை வகைகள் முதலானவை எவையோ; தாம் நிகழ்த்த நேருஞ் செயல்கள் கூடுத

* பாலை நிலம்.

லோ பிரிதலோ என்னவோ; நமக்கு இவையெல்லாம் வாழ்க்கையில் இயற்கையாய் அறிவாய் அமைந்திருக்கின்றன வாதலின், இவற்றைக் கொண்டு, நாம் எவ்வாறு நட்பு அருள் அன்பு இரக்கம் அறிவு முதலான உயிரியல்புகளைத் தக்கவாறு வளர்த்து* உயிராற்றலும் அருளுணர்வும் உள்ளவர்களாய் உயர்ந்த இன்பம் அமைவது என்று மக்கள் அறிந்து வாழவேண்டுமென்பதுதான் தொல்காப்பியர்க்கு நோக்கம். அதற்கான வழிகளும் முறைகளுங் கூறுவதே அவர் 'அகத்திணை யிய'லின் உள்ளுறை. மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாததாயுள்ள மொழிக்கு, இதனினும் சிறந்ததாய் அமையவேண்டும் பொருளிலக்கணமும் ஒன்று உண்டோ?

தொழில்களில் மேன்மையானது உழவு தொழில். நாகரிக நன் மக்களான வேளாளர்கள் ஓர் ஆண்டு முழுமையும் வெளியே போய்க் கொண்டிருந்து இனிய பசும் பயிர் விளைத்துப் பாதுகாத்துக் கதிர்வரச் செய்து அறுத்துப்

* *Theories of Comenius.*

போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிக் கழிக்கவேண் வேண்டுவனவெல்லாங் கழித்து முடிவாக அவற்றிலிருந்து கிடைத்த நல்ல தானிய மணிகளை அளந்து வீட்டுக்கு ஏற்றுகின்றார்கள்; அதுபோலவே, மக்கள் தம் வாழ் நாட்களில் தமக்குப் புறமாயுள்ள உடம்பும் ஏனையெல்லா உலகப்பொருள்களுங்கொண்டு, கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுச் சுவைக்கவேண்டுவனவெல்லாஞ் சுவைத்துக் கழிக்கவேண்டுவனவெல்லாங் கழித்து அவற்றிலிருந்து கிடைத்த, அவைபோல் அழியாத அரும்பெறல் மணிகளான அறிவு நட்பு அன்பு அருள் இரக்கம் என்னுந் தெய்வ இயல்புகளைப் பிழிவாய் இறுத்து உயிர்க்கு ஏற்றக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இதுவே வாழ்க்கை.

தொல்காப்பிய அகத்திணையியல் எவ்வளவு அழகான நாகரிக வாழ்க்கையை மக்கட்கு உருவாக்கியமைத்து அதன்வழியாக அவர்களுக்கு என்றும் அழியாத உயிரியல்புகளை விளைத்து உயர்ந்த இன்பம் வழங்குவதாயிருக்கின்றது

பாருங்கள்! உலகத்தில் எங்கும் நாகரிகம் அரும்பாத மிகப் பழைய காலத்திலேயே இந் நாவலந் தீவிலுள்ள தனித் தமிழ் மக்கள்மட்டும் உலகியலில் இவ்வளவு அழகான அன்பு வாழ்வின்* அருங் கருத்துகளைச் செப்பஞ் செய்துகொண்டு வாழ்க்கை மேவினதும், இதனைத் தாமும் அழ
...னதென்று கருதிப், பின் வரும் எண்ணிறந்த
...காலத்திலும் பயன்படுமாறு
...த அருந்தமிழ்ப் பெரியார்
...ப்பியர் மிகத் திறமான தமிழ்
...நூலோடு இயற்றியளித்ததும்
எவ... ற்குரியனவாயிருக்கின்றன!

---

*. *Fruit Gathering*, P. 87.

# 6. 'அகத்திணையிய'லால் அறியப்படுகின்ற தமிழ்நாட்டுக் குறிப்புகளிற் சில.

நூற்-1. ஒரு பக்க அன்பை முதலினும், எற்றத் தாழ்வான அன்பைக் கடைசியிலுமாக ஒதுக்கி, ஒத்த அன்புக்கே முதன்மை கொடுத்து அதனை நடுவில் நிறுத்தி முறைப்படுத்தியிருக்கின்றமையால், தமிழ் மக்கள் ஒத்த அன்பால் உண்டாகும் உயர்ந்த இன்ப வொழுக்கத்தையே முதன்மையாய்ப் பாராட்டி ஒழுகி வந்தன ரென்பது விளங்கும்.

நூற்-2. இதிற் பாலை நிலம் என்றொன்று தனியாக வகுக்கப்படவில்லை. ஆதலால் தமிழ் நாட்டிற் 'பாலை நிலம்' என்று ஒரு தனி நிலம் இருந்ததில்லை யென்று கொள்ளப்படும். 'பாலை நிலம்' என்பது இங்கு வெறு நிலம்; மணல் வெளியன்று; தொல்காப்பியர் இவ்வியல் 5-வது நூற்பாவிற் கடல் நிலத்தையே 'பெருமணலுலகம்' என்று கூறியிருக்கின்றமையாற், பாலை நிலம் என்பதற்கு மணல் வெளி யென்னுங் கருத்து அக்காலத்தில் இருந்ததில்லை என்பது

தெளியப்படும். கடைச் சங்க இலக்கியங்களி லும்* 'பாலை நிலம் என்பது காட்டு நிலமும் மலை நிலமும் வெயிலின் கொடுமையால் தமதி யல்பின் திரிந்து ஓர் உருவங் கொள்ளும்' என்று கூறப்பட்டிருத்தலால், அந் நிலத்தை மணல்வெளி யென்பது பொருந்தாது; தனி யாய் இருந்ததென்பதும் பெறப்படாது. இத னால், தமிழ் மக்கள் தமது தமிழ் நாட்டு நிலங் களை வெறு நிலமாக வைத்திருக்கவில்லையென்ப தும், தம் நிலங்களைக் கான் எல்லையிற் சேர்த் தோ, மலைச் சாரலில் இணைத்தோ, கடற் கான லில் அடக்கியோ அல்லது வயல் நிலமாக்கி யோ பயன்படுத்தி வந்தார்களென்பதுங் கொள்ளப்பட்டு, அவ்வாற்றால், அவர்கள் நானி லங்களின் பயனையறிந்து ஓம்பி வந்த உண்மை யும் முயற்சியும் உணரப்படும்.

தமிழகத்தைக் குறிப்பிட வந்த ஆசிரியர், அதனை 'ஒலிக்கின்ற அலை சூழ்ந்த உலகு'† என்

* சிலப். 11; 64-17; மதுரைக், 314-5; அகம், 11; கலித், 2. † "படுதிரை வையம்" என்றது.

று குறித்தலால், 'தமிழகம் கடல் சூழ்ந்த பெரு நிலமாயிருந்த' தென்னும் உண்மை வெளிப்படும். நச்சினார்க்கினியர் இந் நூற்பாவுரையில் "இங்கும் எல்லை கூறினர்" என்று இதனை எல்லையாகவே தேறிக் கூர்ந்து உரை கூறினமையுங் காண்க.

பொருளதிகாரத்தில் அகவொழுக்கமே முதலிற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், புறவொழுக்கத்தைவிட அது முதன்மையானது என்பது கருத்து. 'முதன்மைப்படச் சொன்ன எழு ஒழுக்கங்கள்' என்று இந் நூற்பாவில் வருவதனாலும் அவ்வுண்மை தெளியப்படும். இதனால், தமிழ் மக்கள் புறப்பொருள்களை அகநலத்துக்கே பயன்படுத்துங் கருத்தினராவரென்பது விளக்கமாம்.

நூற்-3. பழந்தமிழ்ச் சான்றோர்கள் தாங் கூறும் எந்தக் கருத்தையும் முதல் கரு உரிப் பொருள்கள் வாயிலாகவே விளக்குவது வழக்கமாயிருந்தமையால், அவர்களது உலகியலறிவு நன்கு தெளியப்படும்.

நூற்-4. எல்லா உணர்ச்சிக்கும் எல்லாப் பொருள் தோற்றங்கட்கும் நிலமுங் காலமுமே அடிப்படையான காரணங்களென்று தமிழ் முன்னோர் கருதினமையால், அவர்களுக்கிருந்த நுணுக்கமான இயற்கைப்பொருளறிவு இனிது வெளிப்படும்.

நூற்-5. 'காடு உறை உலகம்' என்றமையால், தமிழகத்தின் சில பகுதிகளிற் காடுகள் அமைந்திருக்குமாறு அதனைப் பாதுகாத்து வந்தார்களென்பது பெறப்படும்; 'உறை' என்றதன் ஆற்றலால் இது கொள்ளப்படுகின்றது. மலை நிலங்களை மேகங்கள் உலவும் நிலங்களாகக் கூறினமையால், மலையின் பயன்களுள் முதன்மையானது மழை தருவித்தலென்று தமிழ் மக்கள் உணர்ந்தமை தெளியப்படும். வயல் நிலத்தைப் புனல் உலகம் என்றனர்; இதனால் தமிழ் மக்கள் நீர்ப் பாய்ச்சல் வசதிகளில் தக்க கருத்துள்ளவர்களென்று அறியலாம். உவரான கடல் நீரிலிருந்து வேறு பிரித்தற்காகத் 'தீம் புனல்' எனப்பட்டது. கடல் நிலங்களை 'மணல்

உலகம்' என்றனர். மணல், நீரினால் அமைவ தென்பது* அவர்கள் கருத்தென்க.

உலகத்தையே காடு மலை வயல் கடல் என்று நான்கு வகையாகப் பாகுபடுத்திவிட்டமை யால் அவர்கள் முற்றறிவு இனிது விளங்கும். மேலும், ஆசிரியர், முதலிற் காடும் அதன்பின் மலையும் அதன்பின் வயலும் அதன்பின் கடலு மாகவைத்து ஒரு முறை கூறினமையால், இவற் றால் முறையே தொடர்ந்து வருவதொரு நிகழ்ச் சியைத் தமிழ் மக்கள் உற்றுநோக்கி யிருக்கின் றனரென்று தெரியும். காடுகளில் மேகங்கள் உலவி மலைகளிற் பெய்து வயல்களிற் பாய்ந்து கடலிற்சேரும் மழைநீரின் சுழற்சியே அதுவா தல்வேண்டும். இதனால், உலகம், நானிலமாக அமைந்திருப்பதன் நோக்கமும், அது மழையி னால் நடைபெறும் உண்மையும் அவர்கள் ஆழ்ந் து அறிந்து தெளிந்துகொண்டன ரென்பது தெளிவாம். திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துக்

---

* "திரை இடு மணல்", மதுரைக் காஞ்சி, 236; "இடு திரை மணல்", புறம், 363.

கு அடுத்தபடி வான் சிறப்பை நிறுத்தியதூஉந் தமிழ்க் கொள்கையாமன்றோ! உலக நடை முறையே இங்ஙனம் நீரின் சுழற்சியிலிருந்தலால், அதற்கேற்பத் தமிழ் மக்கள் உழவு தொழிலே இயற்கையான, என்றும் அழியாததான, எதற்கும் முதன்மையானதான சிறந்த தொழிலென்று கண்டு உறுதிசெய்து அதனையே முதன்மையாக மேற்கொண்டிருந்தனரென்பதூஉந் தெளியப் படும். தமிழ் நாட்டவராலேயே முதன் முதல் உழவு தொழில் இவ் வுலகத்திற் கண்டுபிடிக்கப் பட்டதென்னும் உண்மை இதனானும் விளக்க மாகும். உழவு தொழிலே சிறந்ததென்பதூஉந் தமிழ்க்கோட்பாடேயாம். திருவள்ளுவர், தொழின்முறையில் உழவுதொழி லொன்றையே சிறந்ததொழிலாக எண்ணி அதனைத் தனித்த அதிகாரத்தால் வகுத்து விளக்கினமையும் இக் கருத்துகளையெல்லாம் வலியுறுத்தும்.

இனி, இந் நூற்பாவிற் கூறப்படும் 'முல்லை' 'குறிஞ்சி' 'மருதம்' 'நெய்தல்' என்னுஞ் சொற் களை அவற்றின் சொற்பொருட் காரணங்கள்

பற்றி அவ்வத்திணையின் ஒழுக்கங்கட்குப்* பெயராக அமைத்திருப்பதனால், தமிழ் மக்களின் நுண்ணிய மொழிநூலறிவும், மொழிவளர்ச்சி நோக்கமும் வெளிப்படும். முதலில் ஒழுக்கம் பற்றிப் பெயரமைத்துப் பின் அதனை அவ்வொழுக்கம் நடைபெறுதற்குச் சிறப்பின் உரிய நிலத்துக்குப் பெயராக அமைத்ததிலிருந்து தமிழ் மக்கட்கு ஒழுக்கமே முதன்மையானதென்பதும், ஏனையவற்றையெல்லாம் அவர்கள் அவ்வொழுக்கத்துக்குக் கருவியாகவே வைத்துப் பயன்படுத்திவந்தார்களென்பதும் நன்கு விளங்கும்.

ஆசிரியர் நானிலங்களையும் பகுத்துக்கூறும் போது அவ்வந் நிலத்துக் கடவுள் வழிபாட்டு முறையையும் இணைத்துக் கூறியிருக்கின்றார். இங்கே, 'கடவுளை இணைத்துக் கூறியிருக்கின்றா ரென்றது கடவுள் வழிபாட்டு முறையை இணைத்துக் கூறியிருக்கின்றாரென்றது என்னையெனின், ஒரே முழுமுதற் கடவுளை ஒரே பெயராற்

---

* நச் கருத்தும் இது

கூறுமல், 'மாயோன்' 'சேயோன்' முதலியவாக வேறு வேறு பெயர்களால் ஆசிரியர் கூறுகின்றமையால், அவ்வவ் வடிவாக வழிபடும் வழிபாட்டு முறைமை அதனால் விளங்குதலின் என்பது. அங்ஙனமாஞல், பழைய தமிழ் மக்கள் ஒரு முழு முதற் கடவுளையே வழிபட்டு வந்தனரென்பது எதனாலறியப்படுமென்ருல், ஆசிரியர் புறத்திணையியலிற் கூறுங் கடவுள் வாழ்த்து நூற்பாக்கள் முதலியவற்ருல்* அது பெறப்படுமென்பது. அதனை அங்கங்கே விளக்கிக் கூற இடமிருக்கின்றது. அது நிற்க, இனி, ஆசிரியர் முறைப்படி கடவுள் வழிபாட்டு முறையைக் கருப் பொருள்கள் கூறுமிடத்திற் கூறவேண்டும். நிலம் என்பது முதற்பொருள்; ஆகவே இம் முதற்பொருட் பிரிவுகள் கூறுமிடத்தில் அவர், கருப்பொருட் பிரிவாகிய தெய்வ வழிபாட்டு முறையை முன் வைத்துக் கூறினமையால், தமிழ் மக்கள், எல்லாம் இறைவனுல் நடைபெறும் உண்மை தெளிந்து அப் பெரு

---

* தொல், புறத், 26, 33......

மான் வழிபாட்டையே முதன்மையாக மேற்கொண்டிருந்தனரென்பது வெளிப்படும். திருவள்ளுவர், வான் சிறப்புக் கூறுமுன் கடவுள் வாழ்த்துக்கூறியதும், இங்கே தொல்காப்பியர் ஒவ்வொரு நிலமும் மழைக்குக் காரணமாயிருத்தலைக் கூறுமுன் அவ் வந் நிலத்துத் தெய்வவழிபாட்டு முறைகளைக் கூறியதுந் தம்மில் உட்கருத்து ஒன்ருய் ஒத்திருக்கின்றன. இனி, ஆசிரியர் ஒவ்வொரு நிலத்தையுங் கூறும்போது முதலிற் கடவுளியல்பும் அதன்பின், அக் கடவுளியல்புகள் கட்புலனுக்குப் புலப்பட்டுத் தோன்றும் நிலத்தினியல்புங் கூறுகின்றமையால், தமிழ் மக்கள் மிகப் பழைய காலத்தில், எல்லாம் வல்ல ஒரே முழு முதற் கடவுள் அவ் வந் நிலத்தியல்பாக விளங்கிப் பயன்படும் உண்மை* தெளிந்து, அதனை அவ் வுலகியற்கைகள் வாயிலாக வழிபட்டு வந்தனரென்பதும் விளங்கும். 'உண்மையில் இறைவனை வழிபடுதலென்பது இவ் வுலகியற்கைகள் வழியாக ஒழுகுதலே'

* சாந்தோக்ய உபநிடதம், 6· 13

யென்பது தமிழ் மக்கள் கருத்தென்க. இது பெரிதுங் கருத்திருத்தற்குரியது.

நூற்-6-11. இந் நூற்பாக்களிற் 'பொழுது' என்பது பெரும்பொழுது சிறுபொழுது என்று பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சிறுபொழுதும் ஒவ்வொரு பெரும்பொழுதின் இயற்கையுடையதாய் எல்லாம் ஒத்த அளவாய் நிகழ்ந்து மக்கட்கு ஒவ்வோரியல்பை விளக்கும் இயல்பினதாயிருத்தலையும், அதன்படியே மக்கள் அவ்வியற்கை தெரிந்து அவ் வக் காலத்திற்கேற்ற ஒழுக்கங்களை அவ் வக் காலத்திற் செய்து வந்தமையும் ஆசிரியர் விளக்குகின்றார். இதனால் தமிழ் மக்கள், கால வியற்கைகளும் உள்ள வியற்கைகளும் செவ்வையாய் அறிந்து எதனையுங் காலத்திற் செய்ய வல்லவர்களாய்த், திட்டமான ஏற்பாடுகளும், செய்கைத் திறங்களும், முயற்சிகளும் உள்ளவர்களாய் ஒழுங்கான வாழ்க்கை நடத்தி வந்தனரென்பது தெளிவாகும்.

தமிழ் மக்கட்குக் கடல் கடந்து செல்லும் வழக்கம் இருந்தது கட்டாயம் நேர்ந்தால்,

மாசி பங்குனித் திங்களாகிய பின்பனிக் காலத்திலும் அவர்கள் கடன்மேற் செல்லுதலுண்டு என்பது நூற்-11-ஆல் விளங்கும்.

நூற்-14. நாடகங்களில் நிகழ்வது போல ஒருவரை யொருவர் கூடுதலும், பிரிதலும், எதிர்பார்த்திருத்தலும், ஒருவருக்காக ஒருவர் இரங்குதலும், ஒருவரிடம் ஒருவர் ஊடுதலுமெல்லாம் இந்த இன்ப வொழுக்கத்தின் பிரிவுகளாக வகுத்து ஆசிரியர் அழகாகக் கூறுகின்றமையால், நாடகக் கலைகளும், இன்ப நிலைகளும் உள்ள வியற்கைகளும் பண்டைத் தமிழ் மக்கள் நன்கு தெரிந்திருந்தார்களென்பது வெளிப்படும்.

நூற்-15. ஒரோவோரிடத்து நிகழும் உறவினர் தடைக்கு வருந்தித் தலைவி தன் இல்லத்தை விட்டு நீங்கித் தன் தலைவனே பொருளென்று யார்க்குந் தெரியாமற் பிரிந்துபோய்விடுவாள் என்பதனாலும், தலைவனும் தம் காதலைப் பாதுகாக்கும் பொருட்டு அதற்கு உடன்படுவான் என்பதனாலும் பண்டைத் தமிழ் மகளி

ரும் ஆடவரும் நல்ல துறைகளில் உறுதியுந் துணிவும் மேற்கொண்டிருந்தன ரென்பதும், அவர்கள் காதல் உறுதியானதென்பதும், அவர்கள் வாழ்க்கை அப் புனிதக் காதலையே முதன்மையாகக் கொண்டு அதன் வழியாக நடைபெறுவதாயிற்று என்பதுந் துணியப்படும்.

நூற்-16, 17. இந் நூற்பாக்களால் தமிழ்ச் சான்றோர் எதனையும் அளந்து வரம்புசெய்யும் பேரறிவும் பெருமுயற்சியு முள்ளவர்களென்பது புலனாகும்.

நூற்-18. உணவு விலங்கு செடி கொடிகள் பறவைகள் மலர் நீர் ஊர் முதலியவைகளெல்லாம் தமிழ் முன்னோர் கூரிய அறிவுடன் ஊன்றி நோக்கி விரிவாக ஆராயும் விருப்பமுள்ளவர்களென்பதும், இவ் வியற்கைப் பொருளறிவினால் வாச்சியம், இன்னிசைக் கருவிகள், தொழில்கள் முதலியவற்றை உருவாக்கி வந்தார்களென்பதும், தெய்வ வழிபாடு உள்ளவர்களென்பதும், இன்ப வாழ்க்கைக்கு இவற்றையெல்லாம் எங்ஙனும் பயன்படுத்துவது என்

னுங் கருத்துள்ளவர்களாயிருந்தார்களென்பது மான பல தமிழ் நாகரிகங்கள் வெளிப்படுகின்றன.

நூற்-19. மேற்காட்டிய இயற்கைப் பொருளாராய்ச்சிகளை அப் பெருமக்கள் ஒவ்வொரு நிலந்தோறுஞ் சென்று ஆராயும் அறிவினராயிருந்தனர்.

நூற்-20. அவரவரிருக்கும் நிலத்தின் பெயராலும் அவரவர் செய்யுந் தொழிலின் பெயராலுமே பண்டைக் காலத்தில் தமிழ் மக்களுள் இனப் பிரிவு கொள்ளப்பட்டது. இவ் இனப் பிரிவுகளில் உயர்வு தாழ்வுகள் கிடையா. பெண் கொடுத்தல் கொள்ளலுக்கும் உண்ணலுக்கும் இப் பிரிவுகளால் தடை இல்லை. எல்லாவற்றிலுஞ் சிறப்பொன்றே கருதப்பட்டு வந்தது.

நூற்-21. எல்லா இனத்திலும் ஆட்சித் தலைவர்கள் தோன்றலாம். பொதுமக்களை நிலமக்கள் என்றனர். தலைவர்களைத் தலைமக்கள் என்றனர். இருதிறத்தாருங் கண்ணியமான பெருங் குடியைச் சேர்ந்தவர்களே.

நூற்-22. ஒவ்வொரு நிலத்திலும் இங்ஙனம் உண்டு.

நூற்-23. மேற்காட்டிய இருவகைப் பெருங் குடியினருக்கும் இட்டவேலை செய்யுங் கீழ்க்குடியினரும் உண்டு; பலவகைக் கைத்தொழில்கள் செய்துதவுந் தொழிலாளர் குடியிருப்புகள் ஏராமாக இருந்தன.

நூற்-24. கண்ணியமான இருவகைப் பெருங் குடியினரும் பெரும்பான்மையும் ஒத்த அன்பால் உண்டாகும் உயர்ந்த இன்ப வொழுக்கமே நிகழ்த்துதற்குரியரென்பது இந் நூற்பாவாற் புலப்படுதலின், தமிழ் மக்கள் உயர்ந்த இன்ப வாழ்க்கை யுடையராயிருந்தனரென்பது தெளிவாகத் தெரிகின்றது. தொழிலாளருங் குற்றேவல் செய்வாருந்தாம் பெரும்பாலும் ஒருபக்க அன்பாலும் ஏற்றத் தாழ்வான அன்பாலும் உண்டாகுந் தாழ்ந்த இன்பங்களில் வழுவிச் செல்வரென்றும் இந் நூற்பாவால் வெளிப்படுதலும் மேல் உண்மையை இன்னும் உறுதியாக நிலைநிறுத்தும்.

நூற்.25-33. இந் நூற்பாக்களிற் கூறப்படும் பொருள்களால் தமிழ் நாகரிக வுண்மைகள் பல புலப்படுகின்றன. தமிழ் மக்கள் தாம் இருக்கும் இடத்திலிருந்து அயல் நிலங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் பிரிந்து செல்லுதலுண்டு. பொருள் காரணமாகப் பிரியும் பிரிவு இவ் வகத்திணையியலில் ஒரு முதன்மையாகக் கொள்ளப்படவில்லை. பொது நலங்களுக்காகப் பிரியும் பிரிவே 'ஓதல்' 'பகை' 'தூது' என்று ஆசிரியரால் முதன்மையாகக் கொள்ளப்பட்டது. ஆதலால் தமிழ் மக்கள் தம் நிலத்திலிருந்து செய்யப்படும் உழவு தொழில் வருவாயையே முதல் நோக்கமாகக் கொண்டவர்களென்பதும், பெரும்பான்மையும் பொதுநலங் கருதியே அயல் நாடுகட்குச் செல்வது வழக்கமென்பதுந் தெரிகின்றது.

திருமணம் நிகழ்ந்தபின் அயல் நாடுகளுக்குச் சென்று அயல் மொழிகள் பயில்வ ரென்பதே ஓதற் பிரிவாகக் கொள்ளப்பட்டமையால், அவர்கள் தமது கட்டிளம் பருவம் வரையில் தம் தாய் மொழிப் பயிற்சிக்கே முதன்மை தந்து

அதன் வாயிலாகவே பல கலைகளுங் கற்பதூஉ வழக்கமென்பதூஉம், அவர்களிற் சிலர் அயல் மொழிக் கல்விகளும் பயில்வதுண்டென்பதூஉம், தாந்த நாட்டில் அயல் மொழிப் பயிற்சிக்கு இடந்தந்து தம் மொழி வளர்ச்சிக்கு ஊறுசெய்யாமல், அயல் மொழிப் பயிற்சி விரும்புவோர் அவ் அயல் நாடுகட்கே சென்று அவற்றைப் பயிலுங் கோட்பாடுடையவர்களாயிருந்தார்களென்பதூஉம், இதனால் தம் தாய் மொழிப் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலும் பழந்தமிழ் மக்கள் பெரிதுங் கருத்துள்ளவராயிருந்தார்களென்பதூஉமெல்லாம் புலனாகின்றன.

மேலும் இப் பகுதிகளிற் கூறப்படுங் கருத்துகளாலும் தமிழ் மக்களுட் பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் கொள்ளுமுறை இருந்ததில்லையென்பதூஉம், அவர் ஒழுகும் சிறப்புப் பற்றியே உயர்வு கொள்ளப்பட்டதென்பதூஉந் தெளியப் படும்.

தமிழ் மக்களுட் குறு நில மன்னர்களும், முடி மன்னர்களும், வேந்தன் சார்பாளர்களும்,

ஒழுங்கான அரசு முறைகளும் பிறவுமெல்லாம் இருந்தமை வெளிப்படுகின்றன.

நிலமக்கள் தலைமக்கள் என்னுந் தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்கள் அயல் நாடுகட்குச் சென்று பொருள் தேடும்போது அந்நாட்டு மக்களை வஞ்சியாமலும் அவர்களுக்கு நலிவு உண்டாகாமலும் அறத்தினின்று வழுவாமல் ஒழுக்கமாய்ப் பொருள் தேடுவரென்பது 33-ம் நூற்பாவால் இனிது புலப்படுதலால், தமிழ் மக்களின் நாகரிகமேன்மை இதனால் நன்கு கண்டு கொள்ளப்படும்.

நூற்-34. தமிழ் நாட்டிற், பெண்களைக் கடல் மேல் அழைத்துச் செல்லுதல் வழக்கமில்லையென்று தெரிதலால், தமிழ் நாட்டு ஆடவர் தம் மகளிர் நலத்திற் பெரிதுங் கருத்துள்ளவரா யிருந்தனரென்பது பெறப்படும்.

நூற்-35. தமிழ் நாட்டுக் கீழ்க்குடி மகளிரும் மடலேறுவதில்லையென்று தெரிதலால், அவர் தம் பெண்மையின் மாட்சிமை இனிது வெளிப்படுகின்றது.

நூற்-36. இந் நூற்பாவால் தமிழ் நாட்டுக் கீழ்க்குடி மக்கள், நிமித்தம் பார்த்தல், நற்சொல் கேட்டல், தெய்வ நிகழ்ச்சிகள் ஆராய்தல், முதலியவற்றில் நம்பிக்கை யுள்ளவர்களென்பது அறியப்படுதலால், அவர்களுந் தமக்கு மேற்பட்டதொரு பேரறிவுப் பொருளின் ஆட்சியிற் பெரிதும் ஆராய்ச்சியும் உறுதியும் உடையவர் களாயிருந்தார்களென்பது தெரிகின்றது.

நூற்-38. காதலர் அயலிடத்துக்குச் சென்றாலும் அதுவும் ஒரு பிரிவாகவே கருதப்படும் என்பதனால் தமிழ் மக்களின் காதலுணர்ச்சி எவ்வளவு இணைபிரியாததாய் எவ்வளவு கற்பொழுக்கம் மிக்கதாய் உச்ச நிலையில் இருந்திருக்கின்றதென்பது நன்கு விளங்கும்.

நூற்-39. இந் நூற்பாவினால் தோழியின் அறிவுத் திறமை நன்கு விளங்குகின்றது. இதனால் தமிழ் நாட்டு இளமகளிரும் நல்ல அறிவு நுட்ப முள்ளவராவ ரென்பதும், நேரத்துக்கு ஏற்றவாறு ஒழுகும் நல்ல மனத்திட்ப முடையவராயிருந்தன ரென்பதும் தெரியும்.

நூற்-40. ஒரோவோரிடத்து நிகழும் உறவினர் தடைக்கு அஞ்சித் தனது கற்பைப் பாதுகாத்துக்கொண்டு தலைவி தன் காதலனுடன் சுரத்துவழிச் செல்லுதலை அவ் வழிச் செல்வோர் கண்டு அக் காதலர்களுக்கு இரங்கி அருகிருக்குந் தம் ஊருக்கும் அழைத்துச்செல்ல முயல்வதுண்டு என்பதனாலும், பின்னால் அவர்களைத் தேடிவருஞ் செவிலித்தாய் முதலியோரையும் அவ் வழிப்போக்கர்கள் எதிர்ப்பட்டு 'நும் மகள் செய்தது முறையேயாம்; அவள் அன்பைத் தடுப்பது நன்றன்று' என்று கூறுவதும் உண்டு என்பதனாலும், தமிழ் நாட்டு மக்கள் எல்லாரும் இக் காதலன்பு முறையையே பெரிதும் மேற்கொண்டு பெருந்தன்மையோடு ஒழுகினார்களென்பது நன்றாய்ப் புலப்படுகின்றது.

நூற்-41. இந் நூற்பாவால் தமிழ் நாட்டு ஆண் மக்களின் முயற்சி தகுதி அருமை ஆண்மை பேச்சுவன்மை முதலியவைகள் வெளிப்படுகின்றன. தமிழ் மக்கள் கல்வியினாலுங் கைத்தொழிலினாலும் பொருள் 'தொகுத்தலுண்டு

என்பதுந் தெரிகின்றது. தூது, பாடி வீடு முதலிய குறிப்புகள் அறியப்படுகின்றன. தேர் மேற் செல்லுதல் என்னும் வழக்கம் அடிக்கடி கேட்கப்படுதலால், தமிழ் மக்களிற் செல்வரா யுள்ளவர்கள் நல்ல குதிரைகள் பூட்டிய ஒருவகையான தேர்போன்ற ஊர்தியை அத்துணைப் பழைய காலத்திலேயே உடையவர்களென்பதும் பாகர்கள் குதிரைகளை விரைவாகவும் இனிதாகவுஞ் செலுத்துதலிற் சில தனியான வல்லமைப்பாடுடையவர்க* ளென்பதும் விளங்குகின்றன.

நாற்-42. இந்த இன்ப வொழுக்கத்திற் சேவிவி தலைவி பாங்கன் பார்ப்பார் பாணர் கூத்தர் முதலியோரும் பேச்சு நிகழ்த்துதற் குரியரென்பது வெளிப்படுதலால் தலைமக்களின் செல்வாக்கும் இன்ப நுகர்ச்சியின் மேம்பாடும் விளங்கும். தமிழகத்திற் 'பாணர்' 'கூத்தர்' என்று சில வகுப்பினரே இருந்தமை தெரிதலால் தமிழ் நாட்டில் இசையும் நாடகமும் எவ்வள

---

* "வினைத்திற வகையினும்" என்றது காண்க.

வோ மேம்பாடா யிருந்தனவென்பது விளக்க மாகும். தலைவன் தலைவியர்க்கு இப் பாணருங் கூத்தரும் பல நேரங்களிற் பலவகைகளில் உதவியா யிருந்தமை தெரிதலால், தமிழ் மக்கள் அவர் ஆடவராயினும் மகளிராயினும் இசை நாடக ஆராய்ச்சியிலும் அதனை நுகருந் திறத்திலும் மிகவும் மேம்பட்டவராயிருந்தன ரென்றுந் தெளிந்துகொள்ளலாம்.

நூற்-45. இந் நூற்பாவினுல் தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வரும் மரபுக்கு ஒரு தனி மதிப்புக் கொடுத்திருந்தமை பெறப்படும்.

நூற்-46-49. உவமைகளைப் பற்றி இந் நூற்பாக்களிற் சொல்லப்படுகின்றன. இவற்றுல் தமிழ் மக்களின் சுவையுணர்வு விளக்கமாம். குறிப்பாகப் பேசவும் இனிமையாகப் பேசவும் அவர்கள் வல்லவர்களாயிருந்தன ரென்பதும், எனவே தமிழ் மக்கள் உணர்ச்சி மிக்கவர்களாயும் மிகக் கூரிய அறிவு நுட்ப முள்ளவர்களாயும் விளங்கினரென்பதும் இந் நூற்பாக்கள் கொண்டு உணரலாம்.

நூற்-50-52. 'அகத்திணை யியல்' முழுமைக்கும் இந் நூற்பாக்களில் மட்டும் ஒரு பக்க அன்பும் ஏற்றத் தாழ்வான அன்பும்பற்றி உண்டாகும் இன்ப வொழுக்கங்கள் மிகச் சுருக்கமாகவே கூறப்படுதலால், தமிழ் மக்கள் இவற்றைத் தகுதியில்லாதவை யென்று பெரிதும் ஒதுக்கி வாழ்ந்தமை தெளியப்படும்.

நூற்-53. ஒத்த அன்பால் உண்டாகும் உயர்ந்த இன்ப வொழுக்கமே நால் வழக்கு உலக வழக்கு என்னும் இருவகை வழக்குகளாலும் பெரிது பாராட்டப்பட்டு வந்ததென்பது இந் நூற்பாவினாலும் உணரப்படுகின்றது. இன்னும் 'கலிப்பாட்டு' 'பரிபாட்டு' என்னும் இருவகைப் பாட்டுகளால் இந்த இன்ப வொழுக்கம் கூறப்படும் மரபும் இதனால் தெரிகின்றது. இவ்வாற்றால், உள்ளக் கருத்துக்கும் பாட்டின் ஓசைக்கும் உள்ள மிக நுணுக்கமான பொருத்தத்தைத்* தமிழ் மேன்மக்கள் நன்கு அறிந்திருந்த

* Theories of Plato; '*Republic*', III, 401-2; Jowett's translation.

னரென்னும் அரிய உண்மை வெளிப்படுகின்றது; இதனை மிக நுட்பமான நாகரிக வுணர் வென்று அறிதல்வேண்டும்.

நூற்-54-55. அகவொழுக்கம் உணர்ச்சி மிகுந்ததாதலால், அவ் வொழுக்கம் பற்றிப் பேசும்போது எவரையும் பெயர் குறித்துப் பேசலாகாதென்று இந் நூற்பாக்கள் கூறுகின்றன. இதனால், தமிழ் மக்களின் பெருந்தன்மையும், எவர்க்கும் உளம் நோக யாதுஞ் செய்யாத பெரும்போக்கும் இனிது வெளிப்படுகின்றன.

என்று, இங்கே கூறப்பட்ட இக் குறிப்புகள் சிலவற்றால், தமிழ் நன் மக்கள் இந் நில வுலகத்தில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னிருந்தே சிறந்த நாகரிக இன்ப வாழ்க்கையினராயிருந்து வருகின்றமை நன்கு விளங்கும்.

முற்றும்.

# தொல்காப்பியம்—அகத்திணையியல்

# அகராதி

# இந்த அகராதியில் மேற்கொள்ளப்பெற்றிருக்குங் குறியீடுகள்.

| | | |
|---|---|---|
| இ. | இளம்பூரணர் உரை. | |
| இ. க. | ,, | கருத்து. |
| இ. பா. | ,, | பாடம். |
| இ. உ. ப. | ,, | உரைப் பதிப்பு. |
| ந. | நச்சினார்க்கினியர் உரை. | |
| ந. க. | ,, | கருத்து. |
| ந. பா. | ,, | பாடம். |
| ந. உ. ப. | ,, | உரைப் பதிப்பு. |
| நே-உ. | நேர் உரை. | |
| சா-உ. | சார்பு உரை. | |

குறிப்பு:—

1. இதன்கண், சொற்களுக்கு நேரான உரை, நேர் உரை யெனப்படும்; சொற்களுக்கு நேர் உரை ஒன்றாயிருக்க, உரையாசிரியர்கள் இடத்துக்கேற்றவாறு பொருத்தி உரைக்கும் உரை, சார்பு உரை யெனப்படும்.

2. ( ) இந்த வளைவுகளுள் வரும் உரைக் குறிப்புகள், விளக்கத்துக்காக இந் நூலாசிரிய ராற் குறிக்கப்பெற்றவை.

3. நூற்பாக்களின் எண்கள், நச்சினார்க்கினியர் உரை முறைப்படி தரப்பட்டிருக்கின்றன.

4. பழைய உரையாசிரியர்களின் தொடர்களிலேயே இவ் வகராதியின் உரைக் குறிப்புகள் அமைந்திருக்கின்றன.

5. தொல்காப்பிய அகத்திணையியலினுள்ள எல்லாச் சொற்களும் இவ் வகராதியில் விடாமல் அமைந்திருக்கவேண்டுமென்னுங் கருத்தோடு, இது தொகுக்கப்பெற்றிருக்கின்றது.

# தொல்காப்பியம் - அகத்திணையியல்

## அகராதி

---

எண், நூற்பாக்களின் எண்.

அ-சாரியை, 15; இ. பா. 33; அவை, ந.(சுட்டு)18; (சுட்டு)19, 36, 40, 41; (சுட்டு நீண்டிசைத்தது) 22, 53.

அகத்திணை, 55.

அகத்திணை மருங்கின்-அகத்திணைக்கண், ந. 55.

அகம், 55.

அகலம், 41.

அகற்சி-பிரிவு, இ., ந. 38; பிரிதல், இ., பிரிவு, ந. 41.

அகற்சிமேற்றே - பிரிவின் கண்ணதே, இ., பிரிவின் கண்ணதாம், ந. 38.

அகற்சியது அருமை-பிரிதலருமை, இ., பிரிவாற்றாமை, ந. 41.

அகற்சியின் - பிரிவின்கண்ணும், இ., பிரிதல் காரணத்தால், ந. 41.

அகன் - அகத்திணையுள், இ., நடுவண்; அகமென்பது நடுவு நின்ற ஐந்திணை, ந. 54.

அகன் ஐந்திணையும் - அகத்திணையுள் கைக்கிளை பெருந்திணை ஒழிந்த புணர்தல் முதலான ஐந்து பொருண்மையும், இ., நடுவண் ஐந்திணைக்கண்ணும், ந. 54.

அகன்றோர் - நீங்கினவர், ந. க., 40.

அச்சம்-விலங்கு புள் ஆறலைப்போர் அச்சமும். தந்தை தன் ஐயர் அச்சமும்

என இரு வகை. ந. 36.
அஞர்-வருத்தம், இ. 41.
அஞர் எய்தி-வருத்தமுற்று, இ., வருந்தி, ந. 41.
அடியோர்-அடித்தொழில் செய்வோர், இ., பிறர்க்குக் குற்றேவல் செய்வோர், ந. 23.
அத்து (சாரியை), 19, 23.
அது, 41.
அப்பால்பட்ட - அப் பகுதிப்பட்ட, இ. 41.
அமைதி, 41.
அயலோர், 38.
அயலோராயினும்- மனையயற்கண் பிரிந்தாராயினும். இ., மனைக்கு அயலே பிரிந்தாராயினும், ந. 38
அருமை - ஆற்றாமை, ந. 41. [சா-உ]
அருமையும், 41.
அல்லது, 55.
அல்லன, 13.
அவ்வகை- அத்தன்மைய, இ., அவை போல்வன, ந. 18.
அவண்-அவ்விடத்து, இ., இந்த இடத்தை மனையின்கண் என்பர் ந. 15.
அவர், 24, 33.
அவள், 41.
அவளும் - தலைமகளையும், இ., ந. க. 36. [சா-உ]
அவளொடும் - அவட்கும், இ. 50.
அவற்றுள், 2, 26.
அவற்றொடு - நிமித்தம், மொழிப்பொருள், தெய்வம் என்னுந் தெய்வப் பகுதி என்றவற்றொடு, ந. 36.
அவனும் - தலைமகனையும், இ., தலைவனையும், ந. 36. [சா-உ]
அழிந்தது-அவ் வருத்தம் ந. 39.

அழிந்து-மனன் அழிந்து, இ., ஆற்றாமை மீதூர, ந. 40. [சா-உ]

அளவுதல் - வருதல், இ. [சா-உ]; கலத்தல், ந. 55.

அறிந்தோர், 47.

அன்பினது அகலம், 41.

அன்பு, 41.

அன்ன, 16; அத்தன்மைய, இ., அவைபோல்வன, ந. 36.

அன்னர்- அத்தன்மையர், 24.

ஆ-ஆக என்பதன் விகாரமுமாம், இ. க. 1; (சுட்டு நீண்டு நின்றது), 21; இ. பா. 17, 20.

ஆகல்-அறம் நிறுத்தல், இ. ஆக்கம் பெறக் காத்தல், ந. 28. [சா-உ]

ஆகி, 41; ஆய், ந. 45.

ஆகிய, 24; ஆகும், இ., உரியவாய் வருமே, ந, [சா-உ]; 36; வரும், ந. 40.

ஆகுப-உரியராகுப, இ., ஆக்கமுடையராகுப, ந. 30.

ஆகும்-19; ஆம், இ., நிற்கும், ந. [சா-உ]; 11. ஆம், ந. 43; ஆய்வரும், ந. 46. ஆம், இ., ந. 53.

ஆங்கு-ஆண்டு, இ., அவ்விடத்து, ந. 40; இடங்குறித்து நின்றது, இ. 41.

ஆங்கோர் - அவ்விடத்தோர், ந. க. 41.

ஆடூஉ-ஆண்மக்கள், இ., ந. 21.

ஆதல்-காலமாதல், இ. 8.

ஆயர் - நிரைமேய்ப்பார், இ. 21.

ஆயிரு, 53.

ஆயிரு பாங்கினும் - அவ்விரண்டு கூற்றுச்செய்யுளிடத்தும், ந, 53.

ஆயினும், 38.

ஆர்வ-அன்புடை, ந. 40.

ஆர்வ நெஞ்சமொடு-அன்புடை நெஞ்சத்தால், ந. 40.

ஆல்-5; இல், இ. 28.

ஆறும்-நெறியும், இ., வழியும், ந, 40.

ஆன்-வேற்றுமை மயக்கம், இ. உ. ப. 15; அவ்விடம், இ. 22.

ஆன் அவகைய இ-பா. 22.

ஆன, 33; பிரிதலும், இ. [சா-உ]; பிறந்த நூல்கள், (பெயர்), ந. 31; ஆன ஒத்து, ந. 33.

ஆனு-பெரும்பான்மையாகிய, ந. 22.

ஆனு வகைய-அவ்விடத்து அவ்வகைய, இ 22.

இட்ட-தூதாகிச் செல்லும், இ. [சா-உ] 41.

இடத்தான் - இடத்துக்கண், (வேற்றுமை மயக்கம்) இ. 15.

இடன், 32.

இடும்பை - பெருந்துயர், ந. 50.

இடைச்சுரம், 41.

இடைச் சுர மருங்கு- இடைச் சுரத்திடை, இ., இடைச் சுரத்திடத்தே, ந. 41.

இடையிட்ட - கூட்டத்திற்கு இடையிட்ட பிரிதல், ந. 41.

இதனேடு - இவ்வுவமத்தோடே, ந. 48.

இயல், 53.

இயல்பு-இயற்கை; உலகினியல்; இயற்கையென்றமையாற் செய்துகோடல் பெருமை அறிந்துகொள்க, இ., இயல்பாக, ந. 4; இலக்கணம், ந 39.

இயல்புற - இலக்கண வகையான், ந. 39.

இயல்புற நாடின் - இலக்கண வகையான் ஆராயுங் காலத்து, ந. 39.

இயற்கை - இலக்கணங்கள், ந. 32.

இரங்கல்-ஆற்றாமை, இ. 14.

இரங்கினும், 15.

இரண்டு, 4.

இரத்தலும், 41.

இரு, 11, 17. இரண்டு, இ. 41, 53; ந. 20, 50

இருத்தல்-தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல், இ. 14.

இருதிறத்தால் - இரண்டு கூற்றால், ந. 50.

இருவகை, 11.

இருவகைத்து, 17

இருவகைப் பிரிவு-தலைமகளைப் பிரிதலும், தலைமகளை உடன்கொண்டு தமர் வரைப் பிரிதலும் என இரண்டு வகையான பிரிவு, இ., காலிற் பிரிவும், கலத்திற் பிரிவும் என இருவகை, ந. 11.

இருவகையோடு - இரண்டு வகையோடே, இ., இரு பகுதியோடே, ந. 41.

இல்-இல்லை, இ., ந. 12.

இல்லை-இன்று, ந. 34.

இல, 12, 42; இல்லை, இ. 23, 55; ந. பெயர்கள் பலவாதலின் பன்மை கூறினார், 55.

இவற்றின், 14.

இவை-இப் பத்தும், ந. 14; இத்தன்மைய என்னும் பொருள்பட நின்றது, இ. 25; இத் தன்மைய, இ., இச் சொல்லப்பட்டன, ந. 39;

இவையெல்லாம் - இத்தன்மையவெல்லாம், இ., இச் சொல்லப்பட்டன எல்லாவற்றுக்கண்ணும், ந. 39.

இழைத்த - செய்யப்பட்ட, இ., நூலிற் கூறிய, ந. [சா-உ]; 28.

இளமை, 41, 51.

இளமை தீர் திறம், 51.

இளமையதருமையும் தகுதியதமைதியும் உடைமைய துயர்ச்சியும் அகற்சியதருமையும் - இவை இன்பத்தின்பால, ந.41.

இளமையது அருமை - பெறுதற்கரிய இளமை நிலையாது என உணரும் உணர்ச்சி, இ. 41.

இளமையோள், 50.

இளமையோள்வயின் - இளையாள் மாட்டு, இ., இளமைப் பிராயத்தாள் கண்ணே, ந. 50.

இளிவு - இளிவரவு, இ., ந. 41.

இறுவது - முடிவது, ந. 48.

இறுவாய் - இறுவாயாக; ஆக எஞ்சி நின்றது, இ. க., இறுதியாக, ந. 1.

இன், 4, 18, 19, 22, 23, 24; காரணமாக, ந. (உருபு), 40.

இன்புறல் - இன்புறுதல், இ., ந. 50.

இன்மை - வறுமையான், ந. 41.

இன்மையது இளிவு - இன்மையான் வரும் இளிவரவு, இ., வறுமையான் வரும் இளி வரவு, ந. 41.

இன்மையான் அ - இல்லாமையான் இ. 35.

இன்மையான - இன்று, ந 35.

உட்கு-அச்சம், இ. 40

உட்குவர-அச்சம் வருமாறு, இ. , அஞ்சுவர, ந 40.

உட்குவரத் தோன்றி-அச்சம் வருமாறு தோன்றி இ., அஞ்சுவரக் கூறி, ந. 40.

உடன், (உருபு) ந. 36.

உடை-பெறு, இ., உடைமை, ந. 35.

உடைத்து-உடையது, ந. 32.

உடைமை-பொருளுடைமை, ந. 41.

உடைமையது உயர்ச்சி-பொருளுடைமைக்கு வேண்டும் அமைவு, இ., பொருளுடைமைக் காலத்து நிகழு முயற்சி, ந. 41.

உண்டு-உள்ளது; இல்லென்பதன் மாறுகி விரீவுத்திணையாகிப் பொதுப்பட நின்றது, இ. 15.

உணர்-உணரும், இ. 46, 49; ந. 46; உணர நிற்கும், ந. 49.

உணர்ந்த, 12.

உணர்ந்தோர் - உணர்ந்த ஆசிரியர், ந. 4.

உணு-உணவு, இ. 18.

உம் - 'உலகமும்' என்பதில் எண்ணும்மை, ந., 'சொல்லவும்' என்பதில் எதிர்மறை, இ., ந. 5; இறந்தது தழீஇய எச்சவும்மை, இ. 7; 'பிரிவும்' என்பதில் எச்சம், இ., , முற்று, ந., 'தோன்றினும்' என்பதிற் சிறப்பும்மை, ந. 11; 'மயங்கவும்' என்பதில் எதிர்மறை, இ., எச்சம், ந. 13; 'அகற்சியின்' என்பதில் உம்மை எஞ்சி நின்றது, இ. 41; 'நினைத்தற்கு' என்பதில் உம்மை எஞ்சி

நின்றது, ந. க., உம்மை எச்சவும்மை, ந. 43; 'ஏதவும்' என்பதன் உம்மை, எதிர்மறை, இ,43.

உயர்ச்சி-அமைவு, இ., முயற்சி, ந. 41. [சா-உ].

உயர்ந்தோர், 26, 33.

உயர்ந்தோர்க்கு, 31.

உரி, 13; உரிப்பொருள், இ., ந. 3; உரிமை, குணம், ந. 14.

உரித்து, 7, 10, 29, 33.

உரிப்பொருள், 3; புணர்தல் பிரிதல் முதலியன, இ. க., ஐந்திணை, ந. 13; உரிய பொருள்; ஐந்திணைக்கும் உரிய பொருள்; பண்புத் தொகை, ந. 14.

உரிப்பொருளல்லன - உரிப்பொருளல்லாத கருப்பொருளும் முதற்பொருளும், இ., ஐந்திணையல்லாத கைக்கிளையும் பெருந்திணையும், ந. 13.

உரிய, 36; பலவாதலின் உரிய என்றார், இ. 31.

உரியதாகும்-உரிய பொருளாம், இ., உரிமை பூண்டு நிற்கும், ந. 11.

உரியது- உரிய பொருள், இ., உரிமைபூண்டு, ந. க. 11; உரிமையுடைத்து, இ. 53.

உரியர், 24.

உரை- கூற்று, ந. 41.

உரைத்திற நாட்டம்- உரையாடுங் குறிப்பு. இ. 41.

உரைப்பினும்- கூறினும், ந. 39.

உலகம்- இடம், இ., நாடு; நிலன், ந. 5.

உலகியல்-உலகம், ந. 53.

உலகியல் வழக்கு- உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒ

ந்து வருவது, இ., உல
க வழக்கம், ந. 53.
உலகு, 53.
உவமம், 46.
உள், 46; உள்ளம், ந. 48.
உள்ளுறுத்து- உள்ளுறுத்துக் கருதிய, இ., உள்ளத்தே கருதி, ந. 48; கேட்டோர் மனத்தின் கண் நிகழ்வித்து, ந. 48.
உள்ளுறுத்து பொருள்- உள்ளுறுத்துக் கருதிய பொருள், இ. 48.
உள்ளுறை, 46; உள்ளுறையெனப்பட்ட உவமம், ந. 47.
உள்ளுறை யுவமம், 48; உள்ளுறைக்கண் வரும் உவமமும், இ., அகத்திணை உணர்தற்குக் கருவி, ந. 46.
உளப்பட, 41.
உளர், 21, 37.
உற, 39.
உறு-உற்ற, இ., ந. 39.
உறுத்து-கருதி, நிகழ்வித்து, ந. 48.
உறை, 46; பொருந்திய இ., நிலைபெறும், ந. 5.
ஊக்கிய-உள்ளம் எடுத்த ந. 41.
ஊடல், 14.
ஊதியங் கருதிய ஒரு திறன்-அறத் திறங் காரணமாகப் பிரியும் பிரிவு; இது மறுமைக்கண் பயன் தருதலின் 'ஊதியம்' ஆயிற்று, இ. 41.
ஊதியம்-பயன்; மறுமைக் கண் பயன், இ., ந., வீடுபேறு, ந. க. 41.
ஊர், 37, 40.
ஊரது, 40.
எ (விகு) 19; எல்லாம், இ. 35.
எஞ்சியோர்க்கும் - எஞ்சி நின்றார்க்கும், இ. 42.

எஞ்சுதல்=ஒழிதல், இ., ந. 42.

எடுத்த, 39; குறித்து, இ., எடுத்துக்காட்டி, ந. 41.

எடுத்துரைப்பினும் - விளங்கக் கூறினும், ந. 39.

எண்ணும்-ஆராயும், இ., ந. 22.

எண்ணுங்காலை- ஆராயுங் காலத்து, இ., ந. 22.

எதிர்-முன், இ., முற்பட்ட, முன்னுதல், ந. 7; எதிர்மொழி, இ. 40; ந. 50.

எதிர்கூறி - எதிர்மொழி கூறி, இ., உரைத்து, ந. 40.

எதிர்பெறான் - எதிர்பெறானாய், இ., எதிர்மொழி பெறாதே, ந. 50.

எய்தி, 50; உற்று; இ.; சென்று பொருந்தி, ந. 41.

எய்து-ஆகும், இ., பொருந்தும், ந. 32.

எல், (கதிரவன்); 8.

எல்லாம் - எல்லாவற்றுங் கண்ணும், ந. 39.

எழு-எழு, ந. 1.

எற்பாடு - எற்படு பொழுது, இ., எற்படு காலம், ந. 8.

என்ப - என்று சொல்லுவர், இ. 1, 47; என்று கூறுவர் புலவர், ந. 40, 45; என்று கூறுப, ந. 47; என்று கூறுவர் ஆசிரியர், ந. 52.

என்மனார் - என்று கூறுவர், இ. 6, 11; ந. 11, 53; என்ற சொல்லுவர், இ. 23; என்று உரைப்பர், இ. 53.

என்மனார் புலவர், 11, 23.

என்ற-என்று சொல்லப் பட்ட, இ. 3.

என்று, 39; என்று சொல் லப்பட்ட, இ. 14; என, இ. 20; இடைச்சொல், இ. 36; ஆகிய; எண்ணி டைச்சொல், இ.; என் கின்ற, ந. 50.

என - என்று, இ. 4, 7, 10, 12, 15, 18, 47, ந. 7, 12, 15, 184, 7; 48; ஆகிய, இ., என்ற, ந. 41; என்று கூறும் படி, ந. 46.

எனப்படுவது - என்று சொல்லப்படுவது, இ., 4, 17; எனச் சிறப்பித் துக்கூறப்படுவது, ந. 4; என்று கூறப்படுவது, ந. 17.

ஏ, பிரிநிலை, இ. உ. ப. 3; 'திணையே' என்ப திற் பிரிநிலை, இ. உ. ப. 9; 'பகையே' என்பதில் அசை நிலை, இ. உ. ப. 25; ஈற்றசை, இ. உ. ப. 37, 46, 49.

ஏதுவும், 43.

ஏமஞ் சாலா இடும்பை-மரு ந்து பிறிதில்லாப் பெ ருந்துயர், ந. 50; (சா- உ).

ஏமப்பேரூர்- பதியெழுவ றியாப் பேரூர், 37; (சா-உ).

ஏமப்பேரூர்ச்சேரி, 37.

ஏமம், 37; ந. க. 50.

ஏவல்-ஏவுதல், இ.; ஏவிக் கொள்ளுந் தொழில், ந. 24.

ஏறிய, 51.

ஏறிய மடல் திறம்-இதுக லமகற்கே உரித்து, இ., மடலேறுதலும், ந. 51; [சா-உ].

ஏனை-ஒழிந்த, இ. 46.

ஏனையுவமம்-ஒழிந்த உவ மம், இ. (உள்ளுறையு வம மொழிந்த உவமம்)

46; உள்ளுறையொழிந்த உவமம்; இ., ஒழிந்த உவமம்; அகத்திணைக்கு உரித்தல்லாதது; இது தான் உள்ளுறை தழீஇ அகத்திணைக்குப் பயம்பட்டு வரும்; உள்ளத்தான் உணர வேண்டாது சொல்லிய சொல்லே பற்றுக்கோடாகத் தானே உணர நிற்பது, ந. 49.

ஏனோர், 22, 28, 32; ஏனையோர், இ. 24; ஒழிந்தோர், இ., ந 27

ஏனோர் மருங்கினும்-ஏனோர் மாட்டும், இ. 22; ஏனோர்க்கும், இ. க. 32.

ஐ, 2; (இடைச்சொல்), 48; ஐந்து, இ. 54.

ஐந்திணை-ஐந்தொழுக்கத்திணை, ந. 2; ஐந்து பொருண்மை; புணர்தலும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலும்., இ. 54.

ஒடு, 9, 18, 27; ஒரு வினைக்கிளவி, ந. 19.

ஒண்-ஒள்ளிய, இ., ந. 28

ஒண்பொருள் - ஒள்ளிய பொருள்., இ., ந. 28.

ஒத்து, 48.

ஒத்துமுடிக-ஒத்துமுடிவதாக, 48.

ஒரீஇய- ஒழிந்த, இ., ந. 32.

ஒரு, 41.

ஒருங்கு-(ஒன்றில்) ஒரோவொழுக்கத்தின் கண், ந.; 12, (சா-உ)

ஒருதிறத்தானும் - ஒரு கூற்றானும், இ., ஒரு கூற்றின்கண்ணும், ந. 41.

ஒருவர், 54.

ஒருவர்ப்பெயர் - ஒருவரது பெயர், ந. க. 54,

ஒழுக்கத்தான் அ - ஒழுக்கத்தானே; என்றது, இயற்கை யொழுக்கமாகிய ஆசாரமும் செயற்கை யொழுக்கமாகிய கல்வியும், இ. 33.

ஒழுக்கத்து ஆன - ஒழுக்கத்திலே ஆன - ஒத்து ந. 33.

ஒழிந்த, 51.

ஒழிந்தது- பிரிந்தாளென்பது, ந. 39.

ஒழிந்ததை - ஒழிந்தபொருளை, இ. 47.

ஒழிய-தவிர, இ., பெருதே நிற்கும்படியாகச் செய்தார், ந. 2.

ஒன்ரு - பொருந்தாத; உடன்படாத, இ. 41.

ஒன்ருச் சுரம், 41.

ஒன்ருத் தமர், 41.

ஒன்ருப் பருவம், 41.

ஒன்றி - பொருந்தி, இ., ஒன்றுபட, ந. 39.

ஒன்றித் தோன்றும்-பொருந்தித் தோன்றும், இ., வேற்றுமையின்றி ஒன்றுபடத் தோன்றும், ந. 39.

ஒன்றிய-பொருந்திய, இ. 41.

ஒடு-உடன், இ. 34.

ஓத்தின்-ஓதுதல் நிமித்தமாக, இ. 31.

ஓத்தினை - ஓதுதல் நிமித்தமாகப் பிரிதல், இ. 31.

ஓத்து, 31.

ஓதல், 25.; ஓதல் காரணமாகப் பிரியும் பிரிவு, இ., ஓதற்பிரிவு, ந., பலருங் கை தொழும் மாபினையுடைய கடவுட்டன்மையமைந்த செய்வினை, ந. 26.

ஓர், 41; ஒரோவொன்று, இ. 15.

கடி-நீக்க, ந. 12; கடிந்து, இ. 23.

கடிநிலையில - கடியப்படாது, இ., நீக்கப்படா, ந. 12. [சா-உ.].

கடிவரை-கடிந்து நீக்கும், இ. 23.

கடிவரையில - கடிந்து நீக்கும் நிலைமையில்லை, இ., நீக்கப்படாது, ந. 23.

கடை-பின், ந. 41.

கடை எய்தி-பின்சென்று பொருந்தி, ந. 41.

கடைக்கொண்டு- மீட்டுக்கொண்டு, இ. 41; [சா-உ].

கண், (உருபு) 39.

கண்டது-வழக்கிற் காணப்பட்டது, இ., உலகியல் வழக்கினுட் காணப்பட்டது, 40,

கண்டு, 40.

கண்டோர், 36, 40; (ந. பா.) உணர்ந்த அறிவர், ந. 39.

கண்டோர் பாங்கினும் - கண்டோர்மாட்டும், இ. 36.

கண்டோன் - காணப்பட்ட அவன், இ., 39.

கரு-கருப்பொருள், இ. 3; ந. 18.

கருதிய, 41.

கலங்கு-கலங்கி, இ. 41.

கலங்கு அஞர் எய்தி-கலங்கி வருத்த முற்று, இ., மிக வருந்தி, ந. 41.

கலந்த-மன நிகழ்ச்சியுள்ள, இ., புணர்ச்சி நிகழ்ந்த, ந. 16.

கலந்தபொழுது - கண்ணுற்ற வழி மன நிகழ்ச்சியுளதாங் காலம், இ. 16.

கலி-(கலிச்செய்யுள்), 53.

கலியே -கலியும், இ., ந. 53.
கலுழ்ந்தோளை - கலங்கியோளை, இ., தடுமாறுந் தாயை, ந. 39.
கழியினும்-பெயர்தல்; இ., பிரியினும், ந. 15.
களைஇய - தீர்த்தல்வேண்டி, ந. 39.
களையென (இ. பா.)-களைதல்வேண்டுமென, இ. 39.
கற்பொடு, 41.
கற்பொடு புணர்ந்த கௌவை-கற்பொடு புணர்ந்தமை யுணர்ந்த வெளிப்பாடு, ந. 41.
காட்சி-தலைவியை எதிர்ப்படுதல், இ., வழிநிலைக் காட்சி, ந. 16.
காட்டலும் - அறிவித்தலும், ந. 40.
காடு, 5.
காமஞ் சாலா இளமையோள், 50.
காமத்து- காமத்தின்கண்ணே, இ. 51.
காமம்-காமக் குறிப்பிற்கு, ந. 50.
கார்-கார்காலம்; மழை பெய்யுங் காலம், இ. 6.
காலத்து, 41.
காலம், 36.
காலை, 3; காலத்து, இ. 14; இ., ந. 22.
காவல், 41.
காவற்பாங்கின்-காவற் பக்கத்தின்கண், இ., காக்கப்படுவனவாகிய பகுதிகளின், ந. 41.
கிழவர்-இவர் இருவகையர்; அந்நிலத்தை ஆட்சிபெற்றோரும் அந்நிலத்து உள்ளோரும் என, இ., தலைமக்கள்; திணைநிலைப்பெயராகிய தலைமக்கள், ந. 21.
கிழவோன் - தலைமகன், இ., ந. 41.

கிழவோன் மேன- தலைமகன் மேலன, இ., தலைமகனிடத்தன, ந. 41.

கிளந்த-கூறப்பட்ட, இ., ந. 1.

கிளவியும்-கூற்றும், இ. 36; (ந. பா.) கூற்றுக்களும், ந. 40.

கிளை, 50; உறவு, இ. க. 1.

கூற்றம்-ஏதம், ந. 40.

குறி-இலக்கணம், இ., ந. 47.

குறிஞ்சி-குறிஞ்சி நிலம், இ., புணர்தல், ந. 5; குறிஞ்சித் திணை, இ. 6.

குறிஞ்சி யென்மனார் புலவர்-குறிஞ்சி யெனப்படும் என்றவாறு, ந. 6.

குறிப்பு-கருத்து, இ., ந. 51

குறிப்பே, 50.

குறுகி-எய்தி, ந. 41.

கூதிர்-ஐப்பசி கார்த்திகை, இ., கூதிர்க்காலம், ந. 6.

கூறி, 39. 44; உரைத்து, ந. 40

கை, 50; சிறுமை; அதைத்தங் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல், இ. க. 1.

கைக்கிளை, 50; பெருமையில்லாத தலைமக்கள் உறவு; ஒருதலை வேட்கை, இ., ஒரு மருங்கு பற்றிய கேண்மை, ஏழின் தொகை, ந., க. 1.

கைக்கிளைக் குறிப்பு, 50.

கையினும் - ஒழுக்கத்திடத்தும், ந. 41.

கையினும் வகுத்தபக்கம்- படைக்கலம் பயிற்றலும் சிறபங் கற்றலும், இ. 41.

கொண்டு- உடன்கொண்டு, ந. 15; தன்வினைப் பொருளில் வரும் ஒரு

பகுதிப்பொருள் விகுதி, 41

கொண்டுதலைக் கழிதல்- உடன்கொண்டு பெயர் தல், இ. 15.

கொண்டு பெயர்தலின்- பெயர்த்தல் வேண்டுத லின், ந. 41.

கொள்ளும் - கொண்டுவ ரும், இ., கொண்டு பு லப்படும், ந. 47.

கொள-கொள்ள, இ., ந. 54.

கொளப்பெருர், 54.

கௌவை - அலர், இ., வெளிப்பாடு, ந. 41.

சார்தல், 36.

சார்பும் (இ. பா.)- அணி மையும், இ. 40.

சார்வும், 40.

சாலா-அமையாத, இ., பி றிதில்லா (சா-உ); அமை தியில்லாத, ந. 50.

சான்ற, 41; அமைந்த, ந. 53

சிவணி (இ. பா.)-கூடி, இ. 27.

சிவணிய -நட்புக்கொண் ட; வினையெச்ச மாக்கி நட்பாடல் வேண்டி யெ ன்றுமாம், ந. 27.

சிறந்தன-சிறந்து வருத லுடைய, ந. 3.

சிறப்பின்- சிறப்பையுடை ய, இ., தலைமையானே, ந. 28.

சிறப்பின் ஏனோர், 28.

சின்மை-சிலவாதல், ந. 41.

சுட்டி-குறித்து, இ., ந. 36. இதுவெனக் கூறி, ந. 39; விதந்து கூறி, ந. 54.

சுரத்தும் - ஊரினின்றும் நீங்கிய சுரத்தின்கண் ணும், இ., அருவழிக்

கண்ணும், ந. 37; சுரத்தின்கண்ணும், இ., ந. 41.

சேப்பிய-கூறும், ந. 40; சொல்லப்பட்ட, இ. 51.

செப்பிய வழியினும்-செப்பிய பக்கத்தினும், இ. 40.

செய்தி-தொழில், ந. 18.

செல்லும், 40; போகும், ந. 37.

செலவினும் - செல்லுதற்கண்ணும், இ., போக்கிடத்தும், ந. 40.

சேய் - சேய்த்தாகிய, ந. 40.

சேய் நிலைக்கு-சேய்மைக்கண், இ. 40.

சேயோன் - முருகவேள், இ., செங்கேழ் முருகன், ந. 5.

சேரியும் - சேரியின்கண்ணும், இ., தெருவின்கண்ணும், ந. 37.

சேறல் - செல்லுதல், ந 27.

சேறலும் - செல்லுதலும், ந. 27.

சொல்-சொல்லுதற்கு, ந. 50.

சொல்லப்படும், 5.

சொல்லி, 50.

சொல்லிய- கூறிய, ந. 5; முற்கூறப்பட்ட, ந. 28.

சொல்லியின்புறல், 50.

தகுதி, 41.

தகுதியது அமைதி- தகாது என உணரும் உணர்ச்சி, இ., தத்தம் நிலைமைக் கேற்பச் செயல் வேண்டுமென்பது, ந. 41.

தடுப்பினும்- தடுத்தற்கண்ணும், இ., தடுத்து மீட்பினும், ந. 40.

தம்-தமக்கு, இ., ந. 39.

தமர்-தந்தையுந் தன்னையரும், ந. 41.

தமரினும்- தமர்கண்ணும் இ., தாயர் முதலியோர் கண்ணும், ந. 41.

தருக்கிய-ஒத்தன, இ., மிகப் பெருக்கிய சொற்களை, ந. 50.

தருக்கிய புணர்த்து- ஒத்தன புணர்த்து, இ., மிகப்பெருக்கிய சொற்களைக் கூட்டிச் சொல்லி, ந. 50.

தலை-இடம்; 'தமரிடம்', ந. 15.

தலைப்பெயர்த்துக் கொளினும் - மீட்டுக்கொள்ளுதற்கண்ணும், இ., மீட்டுக்கொளினும், ந. 39.

தலைவரும்-தோன்றும், ந. 39.

தள்ளாதாகும் - தப்பாதாகும், இ., தள்ளாதாய் வரும், ந. 46.

தள்ளாது- தப்பாது, இ. 46

தன், 39; அவன், ந. 27.

தன்னும்-தன்னையும், இ., ந. 36.

தன்னொடு- அவனொடு, ந. 27.

தன்னொடும் - தனக்கும், இ. 50.

தாம், 37.

தாய், 39; செவிலித்தாய், இ., செவிலி, ந. 40.

தாய்நிலை-தாயது நிலைமை, ந. 39; செவிலித் தாயது நிலைமை, இ., செவிலியது நிலைமை, ந. 40.

தாயர், 37.

தாள், 41.

தாளாண் - முயற்சி, இ., மடியின்மை, ந. 41.

தாளாண் பக்கம்- முயற்சியான் வரும் வருத்தத்தை உணரும் உணர்ச்சி, இ. 41.

தான் - 27, அசை, இ., தான் எனத் தனித்து

வாங்கிக் கூறினமையின் பின்பனிக்கு நண்பகல் துன்பஞ் செய்யாதென் பதூஉம் அதற்குச் சிறு பொழுது வரைவிலவெ ன்பதூஉங் கூறிற்று, ந. 10; தானே, ந. 49.

திணை, 1, 9, 21, 44, 51, 55; ஒழுக்கம்; முதல் கரு உரி மூன்றுங் கொண்டது, ந. 12; நிலம், இ. க., ந. 20; குலம், இ. 35; அகத்திணை, ந. 46; பொருண்மை, இ. 54.

திணைக்கு- ஐந்திணைக்கு, இ., ந. 14.

திணைநிலைப் பெயர்- நிலம் பற்றி வாழுங் கீழ்மக்கள் இ., 20; தலைமக்கள் பெயர், ந. 22.

திணைப்பெயர், 21.

திரியா-திரியாத, இ., ந. 45.

திரை-திரைகடல், இ. 2.

திறத்தால் - கூற்றால், ந 50.

திறத்தானும்-பகுதிக்கண்ணும், ந. 41; கூற்றாலும், இ., கூற்றின்கண்ணும், ந. 41.

திறத்து-காலத்து, ந. 36.

திறத்தோடு-கூற்றோடே, ந. 39.

திறம், 41, 51; கூறுபாட்டை, ந. 41.

தீம்-தண், ந. 5.

தீமை-தீவினை, ந. 36.

தீமையும் - பழித்தலும், இ., தீங்கையும், ந. 50.

தீர்-நீங்கிய, இ. 51.

தூது-பகைவரைச் சந்து செய்தல் முதலிய தொழிலுள்ளது, ந. 25; தூதாகிப் பிரியும் பிரிவு, இ., தூதிற் பிரிவு, ந. 26; சந்து செய்வித்தற் பொருட்டு, ந. 41.

தூரிடை-சந்து செய்தற்கு, இ. 41.

தெய்வம், 18; (தெய்வச் சொல், நற்சொல்) உலகினுள் வாழும் இயக்கர் முதலாயினோர் ஆவேசித்துக் கூறும் சொல், இ. 36; கருப் பொருள் தெய்வம், இ; கருப்பொருளுள் தெய்வத்தை, ந. 47.

தெளித்தலும் - ஊட்டவுணர்த்தலும், ந. 41.

தேளத்தும், 36.

தேயமும் - தேயத்தின், இ., ஊர், ந. 40.

தேருங்காலை - ஆராயுங்காலத்து, இ. 14.

தேரும்-ஆராயும், இ., ந. 14.

தேறுதல் - தெளிவு, இ. 51.

தேறுதலொழிந்த காமத்து மிகு திறம்-இது பெரும்பான்மை தலைமகட்கே உரித்து, இ., அறிவழிகுணன் உடையளாதல், ந. 51.

தொகைஇ - கூட்டி, ந 18; இ., ந. 36; இ. 51; கூட்டப்பட்டு, ந. 51.

தொறும், 20.

தோழி, 36, 39.

தோழி தேஎத்தும்- தோழிமாட்டும், இ., தோழியது ஆற்றாமையைக் கண்டுழியும், ந, 36.

தோழியொடு, 41.

தோன்றல்-மிகுதல், இ., தோற்றம், ந. 41.

தோன்றலும் (இ. பா.)- உம்மை எச்சம், இ. 41.

தோன்றி-கூறி, ந. க. 40.

தோன்றும், 8, 41, 50.

தோன்றினும் - 39; உம்மை சிறப்பு, ந. 11.

நடுவண், 2.

நடுவண் ஐந்திணை, 2.

நடுவணது - நடுவெனப் பட்ட பாலை, இ. 2.

நடுவு, 9.

நடுவு நிலைத்திணை-பாலைத் திணை, ந. 9.

நண்-நடு, ந. 9.

நண்பகல்-நண்பகற் பொழுது; பகற் பொழுதின் நடுக்கூறு, இ., எற்பாடுங் காலையுமென்னும் இரு கூற்றிற்கு நடுவணதாகிய ஒரு கூறு தான் கொண்டு வெம்மைசெய்து பெருகிய பெரும்பகல், ந. 9.

நற்றாய்-மகட் பயந்த நற்றாய், ந. 36.

நன்கு-மெய்பெற, 12.

நன்மை-நல்வினை, ந. 36.

நன்மையும் - புகழ்தலும், இ. 50.

நாட்டம்-குறிப்பு, இ., நிலைபெறுத்துதல், ந. 14.

நாடகம் - புனைந்துரை, 53.

நாடக வழக்கினும்-புனைந்துரை வகையினும், ந. 53.

நாடகவழக்கு - சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல், இ. 53.

நாடின்-ஆராயின், இ., ஆராயுங் காலத்து, ந. 39.

நால்வர்க்கும், 29.

நாள்-வாழ்க்கை நாள், ந. 41. (ஆயுள்)

நாளது, 41.

நாளது சின்மை- யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சி, இ., வாழ்க்கை நாள் சிலவாதல், ந. 41.

நாளது சின்மையும் தாளாண் பக்கமும் இன்மை யதிளிவும் அன்பினதக

லமும்-இவை பொருள் செயல்வகைப்பால, ந. 41.

நான்கும், 52; நான்குதிற மும், இ., இந் நான்கும், ந. 51.

நிகழ்ந்தது- நிகழ்ந்ததோர் நிகழ்ச்சி, ந. 43., நிகழ்ந் த கூற்றினை, ந. 44.

நிமித்தம், 14; பல்லி முத லாயின, இ., பல்லி முத லிய சொல், ந. 36.

நிலம், 4, 19.

நிலன் - முதற்பொருளில் ஒன்று; நிலம், ந. 12; இடமாக, இ. 47.

நிலை, 12, 20, 39; நிலை மை, இ. க., நிலம், ந. 9; நின்ற, இ. 9. நிலையாக, இ. க., நிலைமை, ந. 11. நிலைமை, ந. 39; இ. 40; முறைமை, ந. 45.

நிலைக்கு - நிலைமைக்கண் ணே, ந. 40.

நிலைபெற - நிலையாக, இ க., நிலைமைக்கேற்ப, ந. 11.

நிலைபெறத் தோன்றினும், 11.

நிலைமை-தன்மை, ந. 24.

நிலையலும்- போகாதொழி தலும், இ., நிலைபெற்று நிற்றலும், ந. 44.

நினைத்தற்கு - விசாரித்தற் கு, இ. 43.

நீக்கலின் - நீக்குதலால், இ., ந. 39.

நீர்-நீர்மை, ந. 34.

நுதலிய- கருதுதற்குரிய, ந. 54.

நுவலுங் காலை-சொல்லுங் காலத்து, இ., செய்யுள் செய்யுங்கால், ந. 3.

நுவலும், 3.

நெஞ்சமொடு - நெஞ்சத் தால், ந. 40; நெஞ்சத் தொடு, இ., நெஞ்சினை ராகி, ந. 40.

நெஞ்சு, 39.
நெய்தல் - நெய்தல் நிலம், இ., இரக்கம், ந. 5; நெய்தற்றிணை, இ. 8.
நெருங்கி, 39.
நெறி-ஆறு, ந. 53.
நெறித்த - நெறியை யுடைத்து, இ., நெறிமைத்து, ந. 9.
நெறிமை-புலநெறி வழக்கம், ந. 35.
நோக்கி-அறிந்து, ந. 39
நோய்-புண், 39.
நோய்பெருகி- புண்ணுற்று, ந. 39.
பக்கம், 41.
பக்கமும்-பிரிவினும், இ., கூற்றில், ந. 41.
பகல்-கூறு, ந. 9.
பகுதி, 18.
பகுதியும், 41.
பகுதியொடு- கூற்றோடே ந. 18.
பகை, 25.
பட்ட, 41.
படிமை, 28.
படிமைய- ஒப்புமையானவை, இ. க. 28.
படு- ஒலிக்கின்ற, இ., ஒலிக்கும், ந. 2.
படுதிரை-கடல், ந. க. 2.
பண்பு-இயல்பு, இ., இலக்கணம், ந. 2.
பயத்த, 19.
பரத்தையின், 41.
பரிந்தோள் (ந. பா.) பரிபுலம்பெய்திய தலைவியை, ந. 41.
பரிபாட்டு - பரிபாடலும், இ., ந. 53.
பருவத்தும்- பருவத்தின் கண்ணும், இ., ந. 41.
பருவம்-காலம், இ. 7.
பறை, 18.
பனி, 7, 10.

பனி எதிர்பருவம்-முன்பனிக் காலம், இ. 7.

பாக்கொடு, 41.

பாங்கில் - சார்ந்துவாழும் பக்கத்தராகி நிற்றல் காரணமாக, ந. 30.

பாங்கில் - பக்கத்தில், இ. 40.

பாங்கின்-பக்கத்திற்கு, இ. 30; பகுதிகளின், ந. 41.

பாங்கினும், 41; பக்கத்தினும், இ., இடத்தும், ந. 23; இ. 36.

பாங்கு-கூறு, ந. 22; பக்கம், இ., இடம், ந. 23.

பாங்கோர் - நட்புடையோர், ந. 41.

பாசறை, 41.

பாடல், 53.

பாடல் சான்ற- பாடுதற்கு அமைந்த, ந. 53.

பாடு- படும்பொழுது, இ. 8.

பாத்திய - பகுக்கப்பட்ட, இ., பகுத்துக்கொடுத்த ந. 2.

பால்-பகுதி, இ., கூற்று, ந. 41.

பால்பட்ட - கூற்றின்கட்பட்ட, ந. 41.

பாலினும் - பக்கத்தினும், இ., பகுதிக்கண்ணும், ந. 41.

பிரிதல், 14; பிரிந்துசேறல், ந. 33.

பிரிதலும் - பிரிவும், இ. 33.

பிரிந்த, 15. (இ. க.)

பிரிந்தவண்-பிரிந்தவிடத்து, இ. 15.

பிரிந்து, 15.

பிரிந்தோள்-பிரியப்பட்ட தலைமகள், இ. 41.

பிரிவு, 11; பிரிவிற்கு நிமித்தம், 25; பிரிவு உளதாம்; 'ஆம்' என்றது எஞ்சி நின்றது, இ. 28.

பிழைத்தது- தப்பியவழி, இ., தப்பிய அந் நாடு; தொழிற் பெயர், ந. 28.
பிழையாதாகல், 28.
பிழையாது-தப்பாது, இ., தப்பாமல், ந. 28.
பிற, 18.
பிறவும், 18; பிறவற்றை யும், ந. 36.
பின், 10.
பின்பனி-பின்பனிக் காலமும், இ., ந. 10.
பின்னோர், 30.
புகழும், 41.
புணர்த்து-கூட்டிச்சொல்லி, ந. 50.
புணர்தல், 14.
புணர்ந்த-விரும்பின, இ., தணவா, ந. 40.
புணர்ந்தமை உணர்ந்த, ந. 41.
புணர்ந்த நெஞ்சமொடு- விரும்பின நெஞ்சத்தோடு, இ., தணவா நெஞ்சினராகி, ந. 40.
புணர்ந்தோர் - புணர்ந்து செல்கின்றோர், இ. 40.
புணர்ந்தோர் பாங்கில் - புணர்ந்தோர்கண்ணும், ந. 40.
புல்லி-பொருந்தி, இ., ந. 50.
புல்லித் தோன்றும்-பொருந்தித்தோன்றும், இ., ந. 50.
புல-புலவர், ந. க. 53.
புலநெறி (ந. பா.)- புலவராறு, ந. 53.
புலநெறி வழக்கம்- புலவராற்று வழக்கம், ந. 53.
புலம்பல்- தனிமையுரைத்தல், இ., தனிமை கூறுதல், ந. 41.
புலம்பலும்- வருந்திக்கூறலும், ந. 36.
புலமையோர் - அறிவினையுடையோர், ந. 12.

புலவர், 6, 11, 23, 53.
புலன், 15; புலனெறி வழக்கம், ந. 12.
புள், 19; புள்ளு, ந. 18.
புறத்திணை, 55.
புறத்து-புறத்துள், இ. க., ந. க. 23.
புறம், 55; ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணை, இ., ஈடு வண் ஐந்திணைப் புறத்துநின்ற கைக்கிளை பெருந்திணை, ந. 23.
பூ, 19.
பெயர்-21; குலப்பெயர், இ., பெயர்ப் பெயர், ந. 20; இயற்பெயர், ந. 54.
பெயர்தலில் - (இ. பா.) பெயர்தல் மரபாதலின், இ. 41.
பெயர்த்தலின் (ந. பா.)- பெயர்த்தல் வேண்டுதலின், ந. 41.
பெரு, 5.
பெருகி, 39.
பெருந்திணை, 51; ஒவ்வாக்கூட்டம், இ; பெரிதாகிய திணை; பண்புப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, ந. 1
பெரும், 51.
பெருமணல் உலகமும் நெடுங்கோட் டெக்கர் நிலனும், ந. 5.
பெற, 8.
பெறூர், 54.
பெறூன்-பெறுனுய், இ., பெறுகே, ந. 50.
பெறும், 13.
பேர்-பெரிய, இ. 37.
பேரூர்-பெரிய ஊர், இ. 37.
பேரூர்ச் சேரியும்-பெரிய ஊரகத்துச் சேரியின் கண்ணும், இ. 37.
பொய்மையும்- பொய்யும், ந. 39.

பொருந்தின் - பொருந்து மாயின், ந. 55.

பொருள் - 13, 14, 28, 41; பொருண்மை, இ. 3; ஒத்து, ந. 33; (சொல்லென்னும் பொருள்), 36.

பொருள்வயின் - பொருள் வயிற் பிரியுங் காலத்து இ. 33; பொருட்கண், இ., பொருட்டிறத்து, ந. 41.

பொருள்வயிற் பிரிதலும் -பொருள்வயிற் பிரிவும், இ. 33.

பொருளும், 45.

பொழுது-காலம், இ. 4; ந. 16, 19;

பொழுதும்-காலமும், இ., ந. 40.

பொற்பு-பொலிவு, இ., ந. 35.

பொற்புடை, 35.

பொற்புடை நெறிமை-பொலிவுபெறு நிலைமை, இ. 35.

போக்கற்கண்ணும்- போக்கிடுமிடத்தும், ந. 39.

போகிய-போன, 36.

போகிய திறத்து-போகியவழி, இ. 36.

மக்கள், 54.

மக்கள் நுதலிய-மக்களைப் பற்றி வரும், இ. 54.

மகடூஉ-பெண் பால், இ., தலைவி, ந. 35.

மகடூஉவொடு- தலைமகளுடன், இ., தலைமகளோடு கூட, ந. 34.

மடல், 35; மடல்மா, ந. 51.

மடல்மேல்- மடலேறுதல், இ., மடலேறினாளாகக் கூறும், ந. 35.

மண்டிலத்து-வேற்றுப் புலங்களின், ந. 41.

மணல், 5.

மயக்குறுதல்- சேர்கிற்றல், இ. 12.
மயங்க-சேர்கிற்க, இ. 13.
மயங்கவு:ம்பெறும், 13.
மயங்குதல் - சேர்கிற்றல், இ. 12.
மரபு-இலக்கணம், ந. 24; புலனெறி வழக்கம், ந. 45.
மரபு நிலை - வரலாற்றுமுறைமை, ந. 45.
மரம், 18.
மரீஇய - மருவிப்போந்த, இ., மரீஇப் போந்த, ந. 20.
மருங்கின், 19; வழி, இ., பக்கம், ந. 9; இடத்தின், ந. 55.
மருங்கினும் - இடத்தும், ந. 32; இ. 35.
மருங்கு-இடை, இ., இடத்தே, ந. 41.
மருதம்-மருதநிலம், இ., போக நுகர்வு, ந., ௦நாடு, இ., ந. 5; மருதத் திணை, இ. 8.
மன்னர்-அரசர், ந. 30.
மன்னர் பாங்கின் - மன்னர்க்குரிய பக்கமாவது காவல்; நெறியின் ஒழுகாதாரை நெறியின் ஒழுகப் பண்ணுதல், இ. 30.
மன்னு நிமித்தம் - ஆட்சிபெற்ற நிமித்தம்; அது பல்லி முதலாயினவாம், இ. 36.
மன்னும் - ஆட்சிபெற்ற, இ., நிலைபெற்றுவரும், ந. 36.
மா-விலங்கு, ந. 18.
மாட்சிய - மாட்சிமையுடைய, இ. 45.
மாயோன்-மாயவன், இ., கடல் வண்ணன், ந. 5.
மாலை- இராப்பொழுதின் முற்கூறு, இ. 6.

மாற்ரோர் -வேற்றுவேந்தர், ந. 41.

மானமும்-குற்றமும், இ., பெருமையும், ந. 41.

மிக்க, 51.

மிக்க காமத்து-காம மிகுதியானே, ந. 51.

மிக்க காமத்து மிடல்-ஐந்திணைக்கண் நிகழுங் காமத்தின் மாறுபட்டு வருவது, இ. 51.

மிக-மிகவும், இ. 39.

மிகு, 51.

மிகுதிறம்-மிகுதலும், இ. 51.

மிடல், 51.

மிடலொடு - மாருய திறனொடு, இ., வலிதிற் புணர்ந்த இன்பத்தோடே, ந. 51.

மூ-மூன்று, ந. 34.

முடிக, 48.

முடிந்த, 41.

முடியவும்-ஆக்குதல் காரணமாகவும், இ., முடியும்படி பிரிதலும், ந. 28.

முடிவு-புணர்ந்து, இ., முடிவுடைத்தாகிய, ந. 9.

முடிவுநிலை மருங்கின் - புணர்ந்து நின்றவழி, இ. 9.

முதல், 4; முதற்பொருள், இ. 3; முதலென்று கூறப்படும் நிலனும் பொழுதும், ந. 17.

முதலா - முதலாக என்னும் பொருள்பட நின்றது; விகாரமெனினும் அமையும், இ. 1; முதலாக, ந. 28.

முந்நீர், 34.

முந்நீர் வழக்கம்-கலத்திற் பிரிவு, இ., மூன்று நீர்மையாற் செல்லுஞ் செலவு, ந. 34.

முல்லை-முல்லை நிலம், இ., இருத்தல், ந. 5; முல்லைத்திணை, இ. 6; முல்லை நிலம், இ., ந. 28.
முற்பட-முன்னால், இ. 1.
முறை, 5; முறைமையால், இ. 3.
முறை சிறந்தன - முறைமையாற் சிறந்தன, இ., ஒன்று ஒன்றனுட் சிறந்து வருதலுடைய, ந. 3.
முறைமை-அறந்தலைப் பிரியாப் பொருள்செயல் வகை, ந. 29.
முறைமையால் - முறைமையில், இ., நாடுகளை ஆளும் நெறி முறைமையினாலே, ந. 28.
முன், 1.
முன்னதற்கு - முற்கூறப்பட்ட கைக்கிளைக்கு, இ., ந. க. 52.
முன்னிய- கருதிய, இ., மனங் கொள்ளப்படும், ந. 9; குறித்த, இ., உரிய காரியங்கள், ந. 36.
முன்னைய, 52.
முன்னைய நான்கும்- முந்துற்ற நிலைமை நான்கும், இ., முன்னிகழ்ந்த காட்சியும் ஐயமுந் தெரிதலுந் தேறலும் என்ற குறிப்பு நான்கும், ந. 52.
மூன்றன் பகுதி - நால்வகை வலியினும் தன் வலியும் துணை வலியும் வினை வலியும், இ., அறம் பொருளின்பங்கள், ந. 41.
மூன்று, 3, 36.
மூன்றொடு விளக்கி (இ. பா.)- மூன்றும் ஒருங்கு தோற்றுவித்து, இ. 36.
மெய்-பொருண்மை, இ., பொருள், ந. 8.
மெய்பெற, 8.
மேய-மேவிய, இ., காதலித்த, ந. 5.
மேல், 35.

மேலோர்-மேலுலகத்தார், இ. க., மேல் அதிகாரப் பட்டு நின்றவர், ந. க. 29.

மேவிய - பொருந்திய, ந. 28.

மேற்று - கண்ணது, இ., ந. 27; 38.

மேன்மையும் - உயர்ச்சியும், இ., மீக்கூற்றம், ந. 41.

மேன-'மேல' என்பது ஈறுதிரிந்து 'மேன' என நின்றது (இ. உ. ப.); இடத்தன, ந. 26; 41; மேலன, இ. 39, 41; மேன கிளவி, ந. 39.

மை-வான், ந. 5.

மோழி, 36.

மொழிதல்- சொல்லுதல், இ., கூறுதல், ந. 40.

மொழிந்தது (இ. பா.)- சொன்ன மாற்றத்தை, இ. 39.

மொழிப்பொருள் - நற்சொல், இ., சகுனச்சொல், ந. 36.

மொழிப - சொல்லுவர், இ. 4, 7, 12; ந. 15; கூறுப, இ. 10, 15, 18; ந. 4; கூறுவர் ஆசிரியர் ந. 7, 18.

மொழியொடு (இ. பா.)- சொல்லொடு, இ. 41.

யாழ்-பண், இ. 18.

யாமம்-இராப் பொழுதின் நடுக்கூறு, இ., இடையாமம், ந. 6.

வகுத்த-கூறுபடுத்துக் கூறிய, ந. 41.

வகுத்த பக்கமொடு - கூறுபடுத்துக்கூறிய நூல்களால், ந. 41.

வகை, 11; தன்மை, இ., போல, ந. 18; கூற்றை, ந. 46

வகைத்து - வகையையு டையது, இ., வகைப்படும், ந. 17.
வகைத்தே- கூறுபாட்டிற்று, ந. 49.
வகைய-வகைப்படும், இ., கூற்றை யுடையவாம், ந. 20; கூறுபாட்டினை யுடைய, ந. 22.
வகையினானும்-வகையின் கண்ணும், இ., பகுதிக் கண்ணும், ந. 41.
வகையினும், 41.
வகையோடு - பகுதியோடே, ந. 41.
வந்த, 19, 39.
வந்ததன், 39.
வந்ததன் திறத்தோடு-வந்து ஆற்றுவித்தற் கூற்றோடே, ந. 39.
வயின், 33, 50; இடத்து இ., ந. 21; ந. 33; இடத்தில், இ. 33; (உருபுச்சொல்) கண், இ., திறத்து, ந. 41.
வர-வருமாறு, இ. 40.
வரவினும் - வரவின்கண்ணும், இ., வரவிடத்தும் ந. 40.
வருணன்-கருங்கடற் கடவுள், ந. 5.
வரூஉம்-வரும், ந. 21.
வரை, 5; நீக்கும், இ. 23,
வல (ந. பா.)- வல்ல, ந. க. 23.
வலர் (இ. பா.), 23.
வலிப்பினும் - துணியினும், இ., ந. 41.
வழக்கம், 34, 53.
வழக்கு-வழக்கம், 53.
வழி-இடத்து, ந. 36,
வழியினும்-பக்கத்தினும், இ. 40.
வழு-தீங்கு, ந. 40.

வ்ழுவின் - வ்ழுவுதலின், இ., தீங்கு காரணமாக, ந, 40.

வழுவின் ஆகிய-தீங்கு காரணமாக வரும், ந. 40.

வற்புறுத்தலும்- வேண்டுமெனக் கூறுதற்கண்ணும், இ., வற்புறுத்தற்கண்ணும், ந. 41.

வன்புறை- வன்புறையின் பொருட்டு, இ. 39.

வாய்மையும்-மெய்மையும், இ., மெய்யும், ந. 39.

வாயினும் - உண்மைப் பொருளிடத்தும், ந. 41.

வாயினும் வருத்தபக்கம் - ஓதுதல், இ. 41.

வாராவாயினும் - வந்திலவாயினும், இ. 19.

விடியல்- பகற்பொழுதின் முற்கூறு, இ., விடியற்காலம்; நாள் வெயிற்காலை, ந. 8.

விடுத்தற்கண்ணும், 39.

விடுப்பினும் - விடுத்தற்கண்ணும், இ., மீட்டலும், ந. 40; போக விடுத்தற்கண்ணும், இ., விடுத்துப் போக்கினும், ந. 40; விடுத்துப் போகினும், இ., போகாது விடுப்பினும், ந. 41.

விரவு-விரவிவரும், ந. 45.

விரும்பிய - விரும்பப்பட்ட, இ., விரும்பிக்கூறிய, ந. 41.

விழுமநிலை - நோய் நிலை, இ., துன்பநிலை, ந. 39.

விழுமம்-நோய், இ., துன்பம், ந. 39.

விழுமமும்- நோயின்கண்ணும், இ., வருத்தத்திடத்தும், ந. 39,

விளக்கி - தோற்றுவித்து, இ. 36.

வினை, 41; தொழிற்பெயர், இ., வினைப்பெயர், ந. 20; தொழில், ந, 23; தொழிலாகிய, ந. 32.

வினைத்திறம், 41.

வினைத்திற வகை, 41.

வினைவலர் (இ. பா.) வினைசெய்வார், இ. 23.

வேட்டுவர் - வேட்டைத் தொழில் செய்வார்; எயினர் என்னும் குலப்பெயருடையார்மேல் தொழிற் பெயராகிவந்தது. இ., வேட்டு என்னுந் தொழிலுடையானை வேட்டுவனென்றலின், குறிப்பு வினைப்பெயர், ந. 21.

வேண்டியும்- காரணமாகவும், இ., விரும்பிப் பிரிதலும், ந. 28.

வேந்தன், (இ. பா.)- 32; இந்திரன், இ., ந. 5; அரசன்; முடியுடைவேந்தன், ந. 27;

வேந்தனின், 32.

வேந்து-வேந்தனது, இ., முடியுடை வேந்தர்க்குரிய, ந. 32.

வேந்து வினை இயற்கை- வேந்தர்க்குரிய வினை இயற்கை, இ. 32.

வேனில்- இளவேனிலும் முதுவேனிலும், இ., இளவேனிலும் வேனிலுமென்னும் இரண்டும், ந. 9.

வேனிலொடு, 9.

வைகறை- இராப்பொழுதின் பிற்கூறு, இ. 8; கங்குல் வைகிய அறுதியாதல் நோக்கி வைகறையெனக் கூறுப, ந. 8

வைகுறு-வைகறை; செவி யறிவுறுத்தலைச் செவிய றிவுறூஉ என்றாற்போல வைகுறுதலை வைகுறு என்றார். அது மாலையா மமும் இடையாமமுங் கழியுந்துணை அக் கங்குல் வைகுறுதல், ந. 8.

வையம் - உலகம், இ., ந. 2.

தொல்காப்பியம்
அகத்திணையியல் அகராதி
முற்றும்.

I. L. I. Press, Walajabad.

திருவாளர் இளவழகனார் அவர்கள்

ஆராய்ந்து எழுதிய

இனிய உரைநடை நூல்கள்

1. இன்ப வொழுக்கம்

அல்லது

தொல்காப்பியம்

அகத்திணையியல் விளக்கம்

விலை ரூபா 1—0—0

2. பொருளொழுக்கம்

அல்லது

தொல்காப்பியம்

புறத்திணையியல் விளக்கம்

(அச்சில்)

தாகூர் சட்ட விரிவுரையாளர்

திரு கா. சுப்பிரமணிய பிள்ளை **M. A., M. L.**

அவர்கள் எழுதிய

## ஆராய்ச்சி மிக்க நூல்கள்

1. தமிழ்மொழி வரலாறு
அல்லது
மொழிநூற் கொள்கையும்
தமிழ்மொழி அமைப்பும் (அச்சில்)

2. பழந்தமிழர் நாகரிகம்
அல்லது
பொருளதிகாரக் கருத்து ,,

3. சைவ சித்தாந்தச் சாத்திர வசனம் ,,

ஆ. மாணிக்கம்,
தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.